*Issued* 27—10—1965]

R.R. 29/70

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## SATURDAY, 31st JULY 1965

**VOLUME XXX—No. 5**

222

*CONTENTS*


| | | PAGES |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 419-438 |
| II | Adjournment Motions— | |
| | (1) Shifting of the proposed Marine Diesel Engine Factory from Ennore .. .. .. .. .. .. .. | 438 |
| | (2) Arrest of Sarvodaya workers in Madurai district .. . | 438-443 |
| III | Privilege Matter—Delay in placing the rules framed by the R. D. & L.A. and Revenue Departments on the Table of the House .. .. .. .. .. .. .. .. | 443-445 |
| IV | Calling attention to non-availability of pig iron .. .. .. | 445-446 |
| V | Government Bill—The Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965 .. .. .. .. .. | 447 |
| VI | First Supplementary Statement of Expenditure for 1965-66—Presentation .. .. .. .. .. .. .. .. | 447-450 |
| VII | Government Resolution—Increase in the maximum amount of State Government Guarantee for the debentures issued by the Madras Co-operative Central Land Mortgage Bank, Ltd. .. | 450-468 |
| VIII | The Madras State Electricity Board Budget for 1965-66—Discussion—*cont.* .. .. .. .. .. .. .. | 468-522 |
| IX | Papers laid on the Table of the House .. .. .. .. | 522 |



©

GOVERNMENT OF MADRAS

1965


V211, 31 N65

N65·30·5

64913


*[Le]gislative Assembly Department*

*Fort St. George, Madras-9*

PRICE 50 *Paise*]

V211,31 N65
N65.3005

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 31st July 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Kundah Hydro-Electricity Scheme*

* 41 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the stages reached in the Kundah Hydro-Electricity Scheme and the various stages of development targetted for the future?

THE HON. SRI R. VENKATARAMAN: A statement[a] is placed on the Table of the House.

விவர அறிக்கை[a] ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*Illicit Tapping of Electricity*

* 42 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any surprise raids were conducted by the Electricity Board to find out illicit tapping of electricity during the period April to December 1964; and

(*b*) if so, the number of raids conducted and the number of cases detected in each district?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) Total number of inspections conducted is 549.

The number of cases of illicit tapping detected is as follows:—

| | |
|---|---|
| Madras District ... ... ... ... | 2 |
| Salem District ... ... ... ... | 5 |
| Coimbatore District ... ... ... ... | 1 |
| The Nilgiris District ... ... ... ... | 1 |
| Madurai District ... ... ... ... | 1 |
| Ramanathapuram District ... ... ... | 1 |
| Tirunelveli District ... ... ... ... | 2 |
| Kanyakumari District ... ... ... ... | 2 |
| | 15 |

64913

a Printed as Appendix on pages 106 to 108.

[31st July 1965

*Loss of Electricity during Transmission*

* 43 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the percentage of loss of electricity during transmission for the past three years; and

(*b*) the reasons for the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*)

| | | |
|---|---|---|
| During 1961–62 | ... | 17.8 per cent. |
| During 1962–63 | ... | 17.5 per cent. |
| During 1963–64 | ... | 16.5 per cent. |

(*b*) As the Madras State Electricity Board is operating a wide net-work—36,000 k.m. of H.T. and 60,000 k.m. of L.T. lines—covering the entire State, such transmission losses are inevitable owing to technical reasons.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், இவ்வளவு விரயமாவதை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வாறு இருக்கிறது? இதைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய நிலையில் நம்முடைய ராஜ்யம் இல்லை. ஏனென்றால் பெரிய கிரிட் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிறது. மற்ற ராஜ்யங்களில் சிறிய, சிறிய அளவில் டிஸ்ட்ரிபியூஷன் இருக்கிறது. ஆந்திராவிலே 23.6% டிரான்ஸ்மிஷன் லாஸஸ், அஸ்ஸாமிலே 21.6 % பீகாரிலே 22.1% இந்த விதமாகத்தான் இருக்கிறது. ஆகவே இவையெல்லாம் நம்முடைய ராஜ்யத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியதல்ல. நம்முடைய ராஜ்யத்தின் கிரிட் மிக விரிந்த அளவிலே, ராஜ்யம் பூராவும் பரவியிருக்கிறது. இந்த டிரான்ஸ்மிஷன் லாஸைக் குறைப்பதற்கு ஹை டென்ஷன் லைன் 230 கே.வி. போடுவது ஒரு முறை. மேல்நாடுகளில் 400 கே.வி., 600 கே.வி. லைன் போடுகிறார்கள். இப்படிப் போடுவதற்கு செலவு அதிகமாகும். ஆகவே, நாம் இப்பொழுது 230 கே.வி. போட்டிருக்கிறோம்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** வளர்ச்சியடைந்துள்ள மற்ற தேசங்களுடன் ஒப்பிட்டு நோக்கினால், கிடைக்கும் விவரங்கள் என்ன, என்ன என்பதை அறியலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த விஷயம் அப்படி ஒப்பிடக்கூடியதல்ல. மேல்நாடுகளில் 600 கே.வி. லைன்ஸ் போடப்படுவதால் அந்த நாடுகளில் டிரான்ஸ்மிஷன் லாஸஸ் குறைவாக ஆகிறது. இப்பொழுது நாம் 230 கே.வி. போட்டிருப்பதால் லாஸஸ் குறைவாக ஆகிறது. 110 கே.வி. போட்டால் லாஸஸ் அதிகமாக இருக்கும். அதனால்தான் இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது என்று சொன்னேன்.



31st July 1965]

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, இந்த சேதத்தை குறைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் ஏதேனும் உண்டா ? அப்படியிருந்தால் அதன்பேரில் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முனைந்திருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைப்பற்றித்தான் நான் முன்பேயே சொன்னேன். 230 கே.வி. லைன் போட்டால் சேதம் கொஞ்சம் குறையும். 400 கே.வி. போட்டால் இன்னும் கொஞ்சம் குறையும். 600 கே.வி. போட்டால் இன்னும் கொஞ்சம் குறையும். ஆனால், செலவும் படிப்படியாக அதிகமாகிக்கொண்டே இருக்கும்.

**பட்டுக்கோட்டை கிளை உணவு உற்பத்தி அலுவலகம்**

* 44 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் உள்ள கிளை உணவு உற்பத்தி அலுவலகத்தை எடுத்துவிட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஏதேனும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இல்லை, ஐயா.

No, Sir.

**திரு. பி. முருகையன் :** தலைவரவர்களே, இந்தப் பட்டுக்கோட்டையில் உள்ள கிளை உணவு உற்பத்தி அலுவலகத்தை எடுத்துவிட்டு அதை காரைக்குடிக்கு மாற்றவேண்டுமென்று புதுக்கோட்டையிலிருந்து நிர்வாக பொறியாளர் முக்கியஸ்தர்கள் ஓர் அறிக்கை அனுப்பியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இனிமேல் அப்படி வந்தால் அதைப் பட்டுக்கோட்டையிலேயே நிரந்தரமாக வைப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

MR. SPEAKER : It is a hypothetical question பின்னால் வருவதைப் பற்றி, " அப்படி வந்தால் " என்று இப்பொழுது கேள்வி கேட்டால் கனம் அமைச்சர் எப்படி பதில் சொல்லமுடியும் ?

**திருவரங்குளம் விவசாயப்பள்ளி**

* 45 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவரங்குளத்தில் உள்ள விவசாயப் பள்ளியில் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர் ?

(இ) அப்பள்ளிக்காக பல்வேறு இனங்களின் கீழ் ஆகும் செலவுத் தொகை ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) 1962-63 முதல் 1964-65 வரை உள்ள கால அளவில் திருவரங்குளத்தில் உள்ள வேளாண்மைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு :—

| ஆண்டு. | சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1962–63 .. .. .. .. | 20 |
| 1963–64 .. .. .. .. | 20 |
| 1964–65 .. .. .. .. | 19 |

(இ) 1962-63 முதல் 1964-65 வரை உள்ள கால அளவில் இப் பள்ளிக்காகச் செய்யப்பட்ட செலவு விவரம் வருமாறு :—

| ஆண்டு. | ஆண்டுச் செலவு. ரூ. | காசு. |
|---|---|---|
| 1962–63 .. .. .. .. | 11,295 | 99 |
| 1963–64 .. .. .. .. | 24,828 | 46 |
| 1964–65 .. .. .. .. | 17,224 | 16 |

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, அங்கே பயிலுகின்ற மாணவர்களுக்கு மாதந்தோறும் எத்தனை ரூபாய் ஸ்டைபண்டாக கொடுக்கப்படுகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்கே பயிலுகிற மாணவர்களுக்கு மாதம் 35 ரூபாயும், பாக்கெட் மணியாக 5 ரூபாயும் கொடுக்கப் படுகிறது.

**திரு. பி. முருகையன் :** அங்கே பயிலுகின்ற மாணவர்களுக்கு போதிய அளவில் வேலை கிடைக்கவில்லை என்று பயிற்சி முடிந்து வெளியே வந்திருக்கும் மாணவர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதேனும் தகவல் வந்திருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்கே பயிலுகிற மாணவர்கள் விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் சொந்த இடத்திற்குப் போன பிறகு தங்கள் கழனிகளில், வயல்களில் நல்ல முறையில் விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். ஒரு சிலருக்கு விவசாய ஆசிரியர்களாக உயர்தர ஆரம்பப் பாடசாலைகளிலும், ஹைஸ்கூல் களிலும் பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விவசாயப் பள்ளிகளில் படிப்பதற்கு மாணவர்களிடமிருந்து ஆர்வத்தோடு அதிகமான விண்ணப்பங்கள் வருகின்றனவா ? அப்படி வருவதாக இருந்தால் மேலும் இது போன்ற பள்ளிகளை பல இடங்களிலும் திறப்பதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அவசியத்தை உணர்ந்து அதற்குத் தகுந்தவாறு அரசாங்கம் ஆலோசனை செய்து பள்ளிகளை ஏற்படுத்துகின்றது. மேலும் தேவைப்படுமானால் அரசாங்கம் கூடுதல் பள்ளிகளை திறப்பதற்கு முயற்சிசெய்யும்.





**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இப்பேர்ப் பட்ட விவசாயப்பள்ளிகள் நமது ராஜ்யத்தில் எங்கு, எங்கு இருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** னியாகக் கேள்வி போட்டால் இதன் விவரங்களை சொல்லலாம்.

222

**திரு. மு. சண்முகம் :** சாயக் குடும்பங்களிலுள்ள மாணவர்கள்தான் இதில் பயிற்சி பெறுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். அவர்கள் பயிற்சி முடிந்த பிறகு சொந்த நிலங்களில் சென்று விவசாய அலுவல்களை கவனித்துவருகிறார்கள் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சொந்த நிலங்களில் சென்று இவ் விதம் விவசாய காரியங்களை கவனித்து வருகிறார்கள் என்கின்ற புள்ளிவிவரங்கள் எதையாவது அரசாங்கம் சேகரித்திருக்கிறதா ? அரசாங்கம் இதைப்பற்றி ஏதாவது கவனித்திருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சொந்த நிலங்களில் சென்று கவனித்து விவசாயத்தை அதிகமாக பெருக்கவேண்டும் என்பது தான் இதனுடைய நோக்கம். பயிற்சி முடிந்து போன பின்னால் என்ன செய்கிறார்கள் என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்றால், அதற்கான புள்ளி விவரங்களை தயார் செய்யவேண்டுமானால் அரசாங்கத்திற்கு செலவு அதிகமாகும். அதனால்தான் அரசாங்கம் இதற்கு முன் வரவில்லை.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, இதில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு யூனியன் பள்ளிகளில் வேலை கிடைக் கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவ்விதம் ஒன்றிரண்டு பேர்களுக்குத்தான் கிடைக்கிறது. அதிலும் அவர் களுக்கு மாதம் 25 ரூபாய் அல்லது 30 ரூபாய் தான் ஊதியம் கொடுக்கப்படுகிறது. இதை சற்று உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த விவசாய பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற வருகின்ற மாணவர்கள் வேலை பார்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் வந்து பயிற்சி பெறுகிறார்கள். சொந்த நிலங்களில் யாரும் போய் வேலை செய்வதில்லை. ஆகவே, பயிற்சிக்கு வரும்போதே மாணவர்களிடம் இதை விளக்கி விடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பயிற்சி பெற வருகின்ற மாணவர் களுக்கே தெரியும் தாங்கள் என்ன நோக்கத்தோடு வருகிறோம் என்று. இதனுடைய நோக்கத்தை எல்லாம் தெரிந்துதான் மாணவர்கள் வருகிறார்கள்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** இந்த விவசாயப் பயிற்சிப் பள்ளியில் எவ்வளவு காலத்திற்கு படிக்கவேண்டும் ? பயிற்சி முடிந்த பின்னால் அவர்களுக்கு ஏதாவது பட்டங்கள் வழங்கப்படுகின்றனவா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஜூன் மாதம் தொடங்கி அடுத்த ஜூலை மாதம் வரை என்று ஒரு வருடம் இந்த பயிற்சி நடக்கிறது. பயிற்சி முடிந்த பின்னால் அவர்கள் கற்றுக்கொண்டதையெல்லாம் பரீட்சித்துப்பார்த்து, பின்னால் அவர்களுக்கு சன்னத்கள் கொடுக்கப்படுகின்றன.

**திரு. எஸ். மணி :** இந்த விவசாயப் பள்ளி எல்லா தாலூகாக்களிலும் ஒவ்வொன்று ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கத்தின் உத்தேசம் விதைப் பண்ணைகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இந்த விவசாயப் பள்ளிகள் இருக்கவேண்டும் என்பதுதான். ஒவ்வொரு தாலூகாவிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற உத்தேசம் இப்போது அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இந்த விவசாயப் பள்ளிகளில் வந்து படிப்பதற்கு குறைந்த அளவு படிப்பு என்ன இருக்க வேண்டும் ?

**கனம் திரு. கக்கன் :** எஸ்.எஸ்.எல்.சி வரை படித்திருக்கின்றவர்களை சேர்த்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது.

## *Sinking of Tube Wells.*

* 46 Q.—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal under Minor Irrigation Programme to sink tube wells in the State; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) தற்போது சிறு பாசனத் திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறுகளை வெட்டும் உத்தேசம் இல்லை. என்றாலும், செங்கற்பட்டு, இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் முன்னோடியாகத் துளை போட்டுப் பார்க்கும் ஒரு திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றிலிருந்து இங்கே ஊற்று நீர் கிடைப்பதற்கான நல்ல அறிகுறிகள் காணப்பட்டால், இங்கே குழாய்க் கிணறுகள் வெட்டப்படும்.

**திரு. அ. ராகவ ரெட்டி :** சார், சில பகுதிகளில் ஏராளமான தண்ணீர் பூமிக்குள் இருக்கின்றது என்றாலும் அதைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. செங்கற்பட்டு, வட ஆற்காடு போன்ற ஜில்லாக்களில் இத்தகைய நிலைமை



இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்கு உடனடியாக பயன் படும்படியாக இந்த இடங்களில் எல்லாம் ட்யூப் வெல்களை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தண்ணீர் அதிகமாக இருக்கவேண்டும். சுமார் 100 எக்கர் அளவுக்கு பாயக்கூடிய தண்ணீர் இருந்தால் தான் இந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியும். இதற்குத் தகுந்தவாறு தண்ணீர் கிடைக்குமா என்பதைப் பார்த்த பின்னால், அதை ட்யூப் வெல்ஸ் ஆர்கனைசேஷன் ஒத்துக்கொள்ள வேண்டும். பின்னால் அரசாங்கம் இதில் வேலை செய்ய முன் வரும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தஞ்சை ஜில்லாவில் ஃபில்டர் பாயிண்டும், போரிங்கும் போடப்படுகிறது. இதற்கு வேண்டிய—டெஸ்ட் செய்வதற்கான கருவிகள்—அதாவது விஞ்ச் போன்றவைகள் கிடைப்பதற்கு காலதாமதம் ஆகிறது. போரிங்—போன்றவைகள் வாடகைக்கு கிடைக்கிறது. அது போல விஞ்ச் போன்ற கருவிகளையும் வாடகைக்கு கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தால் காலதாமதம் ஆகாது, அதற்கு ஏதாவது ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை எல்லாம் தனியாக கேள்வியாக எழுதி அனுப்பினால் அதைப்பற்றி பரிசீலனை செய்து விவரங்களை தெரிவிக்கலாம். தஞ்சாவூர் ஜில்லாவில் கட்டுமாங்குடி போன்ற இரண்டு இடங்களில்தான் இப்போது இந்தத் திட்டம் நடத்தப்பட்டு வருவதாக சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சிறியநீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் சேலம் ஜில்லாவில் எந்தவிதமான வேலையும் செய்ய முடியவில்லை. இப்போது இந்தத் திட்டம் செங்கற்பட்டு, ராமநாதபுரம் போன்ற ஜில்லாக்களில் மட்டும் நீடிக்கப்பட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவிலும் இந்தத் திட்டத்தை நீடிக்க முன்வருவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது குறிப்பாக சில ஜில்லாக்களில் பரீட்சார்த்தமாக மட்டும் இந்தத் திட்டம் நடந்து வருகிறது. இதில் வெற்றிகரமாக தண்ணீர் கிடைப்பதாக இருந்தால், மேற்கொண்டும் தண்ணீர் அதிகமாக கிடைக்கும் என்றிருக்கிற இடங்களில் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம். இதற்காக ட்யூப் வெல்ஸ் ஆர்கனைசேஷன் ஏற்பாடு செய்து கொண்டு வருகிறார்கள். பரீட்சார்த்தமாக நடத்தப்படுவதில் வெற்றி கிடைத்தால் மேலும் விஸ்தரிக்க முடியும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இந்தத் திட்டத்தை நடத்துவதற்கு எவ்வளவு இடம் தேவை ? எந்த அடிப்படையில் இந்தத் திட்டம் நடைபெற வசதி இருக்கவேண்டும், இதற்கான விதி முறைகள் என்ன ?

[31st July 1965

**கனம் திரு. பூ. கக்கன்:** நிறைய தண்ணீர் இருக்கவேண்டும். மேலே ஜாஸ்தியாக தண்ணீர் இருந்தால் அப்பேர்பட்ட இடங்களில் பரீட்சார்த்தமாக பார்த்து பரிசிலனை செய்து பின்னால் அந்த இடத்தில் திட்டத்தை ஆரம்பிக்கிறார்கள். . . .

Many of them which were expected to cover a large area of about 100 acres were irrigating only half or one-quarter of what they were expected to irrigate.

அப்பேர்ப்பட்ட இடங்களைப் பார்த்துத்தான் எடுத்துக்கொள்கிறோம்.

SRI M. S. SELVARAJAN: Are the beneficiaries expected to pay anything as contribution?

இதில் அனுகூலம் அடையக்கூடியவர்கள் அரசாங்கத்திற்கு ஏதாவது உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** போடப்படுகின்ற குழாய் கிணறுகளைப் பார்த்து கட்டணங்களைப் போடுகிறார்கள். ஒரு ஏக்கருக்கு 125 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, ஒரு ஏக்கருக்கு, ஒரு கிராப்புக்கு 125 ரூபாய் கொடுக்கவேண்டும் என்றிருக்கிறது. நாம் 45 ரூபாய் இருந்தால்தான் நல்லது என்று எண்ணுகிறோம். ஆகவே, தண்ணீர் அதிகமான அளவில் கிடைக்கும் என்ற இடங்களில் தான் இதைச் செய்ய முடியும் என்று சொன்னேன்.

**திரு. எஸ். முருகையன்:** சார், ஆற்றுப் படுகைகளில் இது போன்ற குழாய்க் கிணறுகளைத் தனிப்பட்டவர்கள் போடுவதாக இருந்தால் சர்க்கார் ஏதாவது உதவி செய்கிறதா ? அப்படி உதவி செய்வதாக இருந்தால் எவ்வளவு தொகை உதவியாக அளிக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன்:** அந்தத் தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை. இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்தச் சிறு பாசனத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம், செங்கற்பட்டு ஆகிய இரண்டு மாவட்டங்களில்தான் இது பரீட்சார்த்தமாக எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். தென் ஆற்காடு மாவட்டம் ஆற்றுப் பாசனம் இல்லாத பகுதி. அது சிறு பாசனத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக மரக்காணம் முதல் கடலூர் வரையில் அந்தப் பகுதியில் 100 அடிக்குக் கீழ் பூமிக்கடியில் தண்ணீர் பெருக்கம் இருக்கிறது என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் ஏன் இந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாக எடுத்துக்கொள்ளவில்லை ?

**கனம் திரு. பூ. கக்கன்:** இந்தத் திட்டம் தண்ணீர் ரொம்பவும் ஆழத்தில் இருக்கிற பகுதிகளுக்குத்தான். கனம் அங்கத்தினர் சொன்ன பகுதியில் தண்ணீர் மேலாக இருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டம் அங்கு தேவையில்லை.



31st July 1965]

*Unclaimed Paddy and Rice*

* 47 *Q*.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that about 2,000 bags of paddy and 850 bags of rice are lying unclaimed at the Coimbatore Goods shed; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) In April 1965, the General Manager, Southern Railways, Madras brought to the notice of the Government that about 500 bags of rice/paddy were lying undelivered at the Coimbatore Railway Station and none claimed delivery of these bags.

(*b*) As the movement of paddy and rice was irregular, none claimed it.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** ராஜ்யம் முழுமையிலும் வேறு பகுதிகளிலும் இது போல ரெயிலில் வந்து யாரும் க்ளெயிம் செய்யாத விவரங்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? எந்த எந்த இடங்களில் இது போல இருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா:** அது பற்றி முழு விவரம் இல்லை—ஞாபகத்திலிருந்துதான் சொல்ல முடியும். இது போல கோவில்பட்டியில் ஒரு சம்பவம் இருந்தது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** அந்த ரெயில்வே ஸ்டேஷனில் பிடிபட்ட அரிசி மூட்டைகள் என்ன ஆனது ? அதை அரசாங்கம் கைப்பற்றி மற்ற வினியோக ஸ்தாபனங்கள் மூலமாக வினியோகித்ததா ? அல்லது அந்த ஸ்டேஷனிலேயே இருந்து பாழ்பட்டதா ?

**கனம் திரு. வெ. ராமையா:** அந்த ஸ்டேஷனிலேயே இருந்து பாழ்பட்டுப் போகவில்லை. அதை அரசாங்கம் கைப்பற்றிக் கொண்டது. பிறகு அதற்கு உரிமை உள்ளவர்கள் வேண்டிய தஸ்தாவேஜுகளைக் காட்டி அரிசி தங்களுடையது என்று சொன்னால், அரிசிக்கு உள்ள நியாய விலையைக் கொடுப்பார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கோவை ரெயில் நிலையத்தில் கிடந்த அரிசி மூட்டைகள் கேரள மாநிலத்திற்குக் கொண்டு செல்வதற்காகக் கடத்தி வரப்பட்டது என்ற புகார் இருந்ததா ? அப்படியானால் கேரள மாநிலத்திற்கு அரிசி நமது மாநிலத்திலிருந்து போவதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு. வெ. ராமையா:** இந்த அரிசி மூட்டைகள் கேரளத்திற்குப் போவதற்காக வந்ததா அல்லது அங்கு உபயோகத்திற்காக வந்ததா என்பது தெரியாது. கோயம்புத்தூரில் பிடிபட்டன. அதன் மீது வேண்டிய நடவடிக்கை எடுத்தார்கள். நமது ராஜ்யத்திலிருந்து வெளி ராஜ்யங்களுக்கு அரிசி நெல்

முதலிய தானியங்கள் போகவேண்டுமென்றால் அரசாங்க அனுமதியின் பேரில் தான் போக முடியும். அப்படி மீறி எடுத்துச் செல்ல முடியாமல் முறையான கட்டுப்பாடுகள், கண்காணிப்புகள் எல்லாம் வைத்திருக்கிறோம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** இந்த நெல் அரிசி மூட்டைகள் எல்லாம் கோயம்புத்தூர் ரெயில்வே ஸ்டேஷனில் இருந்திருக்கின்றன. வெளி இடங்களுக்கு அனுப்ப இருப்பு வைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டதா? சரக்கு உரிமையாளர்களுக்கு உரிய விலை கொடுக்கப்பட்டதா? அதே போன்று ஒரு மாவட்டத்திலேகூட ஒரு தாலுக்காவிலிருந்து ஒரு தாலுக்காவிற்கு . . .

**கனம் சபாநாயகர் :** ஒரே சமயத்தில் எத்தனை கேள்விகள் போடுவது?

**கனம் திரு. வெ. ராமையா :** கோயம்புத்தூரில் பிடிபட்ட அரிசி, நெல்லை பொறுத்த வரையில் அந்த அரிசி, நெல்லை அரசாங்க அதிகாரிகள் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அதற்கு உரியவர்கள் தக்க தஸ்தாவேஜுகளோடு அந்த மூட்டைகள் எங்களது என்று நிரூபிக்கும் பட்சத்தில் அதற்கான நியாய விலையை அரசாங்கம் கொடுக்கும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, ஒரே மாவட்டத்தில் ஒரு தாலுகாவிலிருந்து இன்னொரு தாலுகாவிற்கு அரிசி, நெல் முதலியவைகளை எடுத்துச் செல்லக் கூடாது என்று விதி முறைகள் இருக்கின்றன. அப்படி எடுத்துச் செல்லுகிற நெல்லை அரசாங்க அதிகாரிகள் பிடிக்கிறார்கள், பறிமுதல் செய்கிறார்கள். அதற்கு உரிய நியாய விலை கொடுக்கப்படுவதில்லை. அதற்கான விசேஷ அறிக்கை ஒன்றை அரசாங்கத்தார் அனுப்ப முன் வருவார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** எங்கே கட்டுப்பாடு அமலில் இருக்கிறதோ அங்கே கட்டுப்பாட்டை மீறிச் செய்கிறவர்களுக்கு நியாயமாக நியாய விலை கொடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. பறிமுதல் செய்வது தான் நியாயம். சில சமயங்களில் தெரியாமல் குழப்பம் ஏற்பட்டு அதனால் அநீதி ஏற்படக் கூடாது என்றுதான் நியாய விலை கொடுக்கப்படுகிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கோவை ரெயில்வே சரக்குக் கொட்டகையில் கேட்பாரற்றுக் கிடக்கிறது என்றால் கோவையில் இரெயிலிலிருந்து இறக்கி வைக்கப்பட்டனவா? அல்லது கோவையில் இரெயிலில் ஏற்றுவதற்காக வைக்கப்பட்டனவா? யாரிடத்திலிருந்து வந்தன, யார் பெயருக்கு வந்திருக்கின்றன என்ற விவரங்கள் இல்லையா?

**கனம் திரு. வெ. ராமையா :** அவைகள் ரெயிலில் வந்தன. பெரும்பாலும் தஞ்சாவூரிலிருந்து வந்தது. இந்தக் குழப்பம் அந்த நேரத்தில் ஏற்பட்டதற்குக் காரணம், பிப்ரவரி மாதம்



20-ம் தேதி வரையில் யாரும் ஒரு க்விண்டால் வரையில் அரிசி, நெல், எடுத்துக்கொண்டு போகலாம் என்ற நிலைமை இருந்தது. பிறகு, அதைப் பயன்படுத்தி வியாபாரிகள் ஏராளமாக ஏற்றுமதி செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக ஒரு க்விண்டால் என்பதை 10 லிட்டர் ஆக்கினோம். ஒரு க்விண்டால் அடிப்படையில் ஏராளமாக தஞ்சை ஜில்லாவில் அரிசி, நெல் வாங்கி ஒருவர் பேரில் ஒரு க்விண்டால் வீதம் புக் செய்து ஒரே வாகனில் ஏற்றுமதி செய்தார்கள். சர்க்காரின் மறு பரிசீலனைக்குப் பிறகு 10 லிட்டர் என்று வந்தவுடனே, அந்த அளவுக்கு மேல் நடமாட்டத்தில் இருக்கக் கூடாது என்ற நிலைமைக்கு அது தவறாகப் போய் விட்டது. ஏற்றுமதி செய்யப்பட்ட மூட்டைகள் கோயம்புத்தூருக்குப் போய்ச் சேரும் கட்டத்தில் இந்த உத்தரவு வந்து விட்டது. ஆகையால் வந்த நெல்லை, அரிசியை, யார் போய் எடுப்பது என்ற சந்தேகம் வந்து விட்டது. பழைய உத்தரவு நீடித்திருக்கும் பட்சத்தில் டெலிவரி எடுத்துக்கொண்டிருப்பார்கள். புது உத்தரவின் காரணமாக அதை யார் போய் எடுப்பது, எப்படி கணக்குச் சொல்லுவது என்ற நிலைமை ஏற்பட்ட காரணத்தினால் அப்படியே தேங்கி நின்று விட்டது. இடையில் வந்த உத்தரவினால் யாருக்கும் பாதகம் ஏற்படக் கூடாது என்ற முறையில் நியாயமான தஸ்தாவேஜுகள் வைத்திருந்தால் அரசாங்கம் நிர்ணயித்த விலையை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** கோவை ரெயில்வே ஸ்டேஷனில் கேட்பாரற்றுக் கிடந்த அரிசி மூட்டைகளை அரசாங்கம் பறிமுதல் செய்த பிறகு உரியவர்கள் அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்தினார்களா? இவ்வளவு நாள் தாமதம் ஆனதற்குக் காரணம் என்ன? அந்த அரிசியானது கள்ளத்தனமாக அனுப்பப்பட்டது என்று அரசாங்கம் உணருகிற காரணத்தினால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** எவ்வளவு காலத்திற்குப் பிறகு கோரிக்கைகள் வந்தன என்ற விபரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு விபரமாக நான் பதில் சொன்னேன். இது இரண்டு உத்தரவுகளுக்கு இடையில் ஏற்பட்ட நெருக்கடி. இதனால் யாருக்கும் பாதகம் இருக்கக் கூடாது என்று விதி விலக்குக் கொடுத்திருக்கிறோமே தவிர, பிறகு இந்த மாதிரி ஏற்பட்டால் அரசாங்கம் பறிமுதல் தான் செய்யும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ரெயில்வே ஸ்டேஷனில் அரிசி கேட்பாரற்று எவ்வளவு காலம் கிடந்தது? அரசாங்கத்தின் கவனத்திற்கு எப்போது கொண்டுவரப்பட்டது? அதே போல உரியவர்களுக்கு இந்த அரிசியின் கிரயத்தை அரசாங்கம் கொடுத்து விட்டதா அல்லது கொடுக்க நினைக்கிறதா என்பதை அமைச்சர் சொல்லுவார்களா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கொடுத்து விட்டதா என்ற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம். ஆனால் ரெயில்வே வாகனில் வந்து, போலீசாருடைய ஜாக்கிரதை காரணமாகப் பிடிபட்டதனால் உரியவர்கள் வந்து உடனே தஸ்தாவேஜுகளைக் காட்டி வாங்க முடியவில்லை. தஸ்தாவேஜுகளைக் காட்டி உரிமை கொண்டாடினால் பிடிபட்டுப் போவோமோ என்ற பயத்தினால் அவர்கள் உரிமை கொண்டாட முடியவில்லை. இதெல்லாம் ஒரு சில நாட்களில் முடிந்து விட்டன.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** நெல் மூட்டைகளையும், அரிசி மூட்டைகளையும் அனுப்பியவர்கள் யார் என்ற விவரத்தை அரசு அறியலாம் அல்லவா ? அதை அறிந்ததா ? அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்தது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அது தான் நான் ஆரம்பத்தில்
9-00 a.m. சொன்னது. ஒரு நபர் ஒரு க்விண்டால் அனுப்பலாம் என்று ஒரு நேரத்தில் இருந்தது. ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கான பெயர்களைப் போட்டு ரெயில்வே ஸ்டேஷனில் புக் செய்து, 'ஸெல்ஃப்' என்று புக் செய்து டெஸ்டினேஷனில் வாங்கிக் கொள்ளக் கூடிய நிலைமை இருந்தது. புது உத்தரவில் 10 கிலோ லிட்டர் என்று போட்டவுடனே, வந்த மூட்டைகளை யார் வாங்குவது என்ற சந்தேகம் வந்து விட்டது. உணவுப் பொருள்கள் கெட்டுப் போகக் கூடாது என்று அரசாங்க அதிகாரிகள் தலையிட்டு எடுத்துக் கொண்டு, தகுந்த தஸ்தாவேஜுகளைக் காட்டுகிறவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையைக் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டது.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** இம்மாதிரி பலருடைய பெயரை வைத்து மொத்தமாக அனுப்புவதற்குக் காரணமாக இருந்தது, உடந்தையாக இருந்தது யாராவது ரயில்வே அதிகாரி அல்லது சிவில் சப்ளைஸ் அதிகாரியா என்று அரசாங்கம் விசாரித்ததா ? அப்படி விசாரித்திருந்தால் ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ரயில்வே அதிகாரியையோ அல்லது சிவில் சப்ளைஸ் அதிகாரியையோ இதில் குற்றம் சொல்ல முடியாது. விவரங்களைப் பதிகிற பொழுது மூக்கையா தேவர் ஒரு குவிண்டல், பக்கத்தில் இருப்பவர் ஒரு குவிண்டல் என்று 500 பேர்களுடைய பெயரை பதிந்துகொள்கிறார்கள். இது பற்றி அவர்கள் பேரில் குற்றம் கண்டு பிடிக்க முடியாது.

### திருநெல்வேலி மாவட்டத்தில் நெல் கொள்முதல்

* 48 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஏக்கருக்கு உட்பட்ட நிலங்களிலும் லெவி முறைப்படி நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக புகார்கள் வந்திருக்கின்றனவா ?





(இ) அவைகளின் மீது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The answer is in the negative.

(b) Does not arise.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** பொதுவாக ஒரு ஏக்கருக்கு உட்பட்ட அளவு நிலம் வைத்திருப்பவர்களிடத்தில் கொள்முதல் செய்வதில்லை என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்பொழுது இருக்கக் கூடிய ஏற்பாட்டின்படி ஒரு ஏக்கருக்கும் குறைவான அளவு நிலம் வைத்திருப்பவர்களிடம் வாங்க வேண்டாம் என்றுதான் அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

**திரு. க. ர. நல்லசிவம் :** இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு தான் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வந்த பொழுது கனம் முதலமைச்சர் அவர்கள் ஒரு ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களிடம் வாங்கக் கூடாது என்ற விதி கிடையாது என்ற அடிப்படையில் பதில் சொன்னார்கள். ஒரு ஏக்கருக்கும் குறைவான அளவு நிலம் வைத்திருப்பவர்களிடம் லெவி முறையில் வாங்கலாமா என்பது பற்றி அந்தந்த ஜில்லா அதிகாரிகள் நிர்ணயிக்கக் கூடிய முறையை சர்க்கார் அங்கீகரித்திருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு ஏக்கருக்கு உட்பட்ட அளவு நிலம் வைத்திருந்தால் அவர்களிடம் வாங்கக் கூடாது. இருந்தாலும், அவர்கள் அதிக விலைக்கு வெளியே விற்கக்கூடிய காலத்தில் அரசாங்கம் அதை வாங்கிக் கொள்ளலாம். அப்படி வாங்கிக்கொள்ளலாம் என்று தான் சொன்னேன். கட்டாயப் படுத்துவது இல்லை. அதனால் யாருக்கு வேண்டுமானாலும் அதிக விலைக்கு விற்கலாம் என்று பொருள் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அரசாங்கத்திற்கு விற்கவேண்டுமென்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். ஏன் வாங்குகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறுகிறார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விற்கிறவர்கள் மீது தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தான் அரசாங்கத்தினிடம் கொடுக்க வேண்டும். அதை மீறுவதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வாங்குகிறவர்கள் மீது குற்றம் இல்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** திருநெல்வேலி ஜில்லாவில் கடந்த அறுவடை காலத்தில் அரசாங்கம் எவ்வளவு நெல் கொள்முதல் செய்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தைக் கொடுக்க முடியுமா ?

[31st July 1965

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நாம் ஒரு நேரத்தில் 15,000 டன் வாங்க வேண்டும் என்று சொன்னோம். பிறகு இருக்கக்கூடிய நிலைமைகளை யெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து சுமார் 10,000 டன் வாங்கினால் போதும் என்ற ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறோம். ஏறத்தாழ அந்த அளவுக்கு வாங்கி இருப்பார்கள் என்று நம்புகிறேன். மேலும் புள்ளி விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** இம்மாதிரி நெல் விற்கிற பொழுது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் சில இடங்களில் போய் நெல் வாங்குவதில்லை. வாங்குவதற்கு ஆள் இல்லாமல் போகும் பொழுது, வெளியே விற்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி வெளியே விற்கும்பொழுது அதைப் பிடிப்பது, அதற்காக சிரமப்படுத்துவது நியாயமா ? அந்த அளவுக்கு சர்க்கார் ஏஜெண்டுகள் சரிவர வாங்குவதற்கு தக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அரசாங்கம் எல்லா இடங்களிலும் நெல் வாங்குவதற்கு ஏஜெண்டுகளை நியமனம் செய்திருக்கிறார்கள், கூட்டுறவு சங்கங்களை நியமனம் செய்திருக்கிறார்கள். அவர்கள் முறையாக நடக்கவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வரும் பட்சத்தில் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வரும் பட்சத்தில், அரசாங்க அதிகாரிகளே நேரடியாக நெல் வாங்குவார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** ஒவ்வொரு மாவட்டத்திலும் கொள்முதல் இலக்கை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு ஏக்கர் நிலம் உள்ளவர்களிடம் கூட கட்டாயமாக நெல்லை கேட்கிறார்கள். அவர்கள் தானே முன்வந்து விற்க விரும்பவில்லை. அவர்களிடம் வற்புறுத்தி வாங்குகிறார்கள், இப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அரசாங்கக் கொள்கையைப்பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு விவசாயியிடம் உபரியாக உள்ள தானியத்தை வாங்க வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். அந்த விவசாயி ஒரு ஏக்கர் வைத்திருக்கிறாரா, குறைவாக வைத்திருக்கிறாரா என்பது பிரச்னை இல்லை. அரசாங்கக் கொள்கையின் கீழ் 'மார்கெடபிள் சர்பிளஸை' அரசாங்கம் வாங்க வேண்டும் என்ற அடிப்படையிலே வியாபாரத்திற்கு போகக் கூடிய நெல்லை அரசாங்கம் வாங்க வேண்டும். அதற்குப் போதுமான ஏஜெண்டுகளையும், கூட்டுறவு சங்கங்களையும் அரசாங்கம் நியமனம் செய்திருக்கிறது. அவர்கள் வாங்கா விட்டாலும் கூட, அரசாங்கமே நேரிடையாக தலையிட்டு வாங்கும்.

**திரு. டி. எல். சுசிவர்ணத் தேவர் :** ஒரு ஏக்கருக்கு இவ்வளவு மூட்டை வாங்க வேண்டும் என்று ஏதாவது போட்டிருக்கிறார்களா? அப்படியானால், ஏக்கருக்கு எத்தனை மூட்டை வாங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள் ?



31st July 1965]

**கனம் திரு. வெ. ராமைய்யா:** இப்பொழுது இருக்கக் கூடிய நிலைமையின்படி 'மார்கெடபிள் சர்பிளஸை' வாங்க வேண்டும் என்பது தான் கொள்கை. வசதியை அடிப்படையாக வைத்து, அந்த ஜில்லாவின் நிலைமையை அடிப்படையாக வைத்து, அங்கங்கே இருக்கக் கூடிய கலெக்டர்கள் குறிப்பிட்ட ஜில்லாக்களில் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு வாங்க வேண்டும் என்றெல்லாம் நிர்ணயம் செய்கிறார்கள். பொதுவாக, இந்த வருஷம் அனுஷ்டித்த கொள்கையைப் பார்க்கும் பொழுது, தஞ்சை ஜில்லாவில் எந்த விதமான லெவியோ, எந்த விதமான கட்டாயமோ கிடையாது. அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலை நியாயமான விலை என்ற அடிப்படையில் நாம் எவ்வளவு எதிர்பார்த்தோமோ அதைவிட அதிகமாகவே வாங்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களிலும் எந்த விதமான நிர்ப்பந்தமும், கட்டாயமும் இல்லாமலேயே அங்கெல்லாம் நெல் வாங்க முடிந்தது. அதைப்போல மற்ற ஜில்லாக்களிலும் நிலைமை இருக்கும் என்று நம்புகிறேன். சில ஜில்லாக்களில் மக்களுக்கு கொஞ்சம் வாங்கும் சக்தி அதிகமாக இருக்கலாம். மதுரை போன்ற பெரிய நகரங்களில் மொத்தமாக வைத்துக்கொண்டு பக்கத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் அதிகமான விலைக்கு விற்கலாம். இம்மாதிரி சில நிலைமைகளெல்லாம் ஏற்படுகின்றன. அவைகளை தவிர்க்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுத்து, அதிக தொந்தரவு, கஷ்டம் இல்லாமல் இந்த வருஷம் நாம் எதிர்பார்த்த அளவைவிட கொஞ்சம் அதிகமாகவே அரசாங்கம் வாங்க முடிந்தது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நம்முடைய கொள்முதல் கொள்கை 'ப்ரொக்யூர்மெண்டு வித்தௌட் டியர்ஸ்'.

**திரு. ஆ. கு. சுப்பையா:** இந்த ஆண்டில் அரசாங்கம் நெல் எவ்வளவு கொள்முதல் செய்வது என்று உத்தேசித்திருந்தது? எவ்வளவு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** தனிக்கேள்வி போட்டால் புள்ளி விவரம் கொடுக்கலாம். நாம் எதிர்பார்த்த அளவை விட கொஞ்சம் அதிகமாகவே வாங்கியிருக்கிறோம்.

**திரு. எம். தண்டாயுதபாணி:** தஞ்சை ஜில்லாவில் கொள்முதல் செய்ய வேண்டிய அளவு கொள்முதல் செய்ய வேண்டும் என்று கருதி, சாகுபடி நெல்லை சம்பளமாகக் கொடுப்பதற்கு வைத்திருப்பவர்களிடம் கூட, அதிகாரிகள் வாலண்டரி ப்ரொக்யூர்மெண்டு என்று கூறி, கட்டாயமாக நெல்லை கொள்முதல் செய்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அதை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தஞ்சை ஜில்லாவில் கட்டாயப்படுத்தி வாங்க வேண்டிய அவசியமே கிடையாது. சில விவசாயிகள் அதிகமான விலை கிடைக்கும் என்று கருதி சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடும் வரையில் வைத்திருப்பார்கள். தண்ணீர் வரும்பொழுது விற்பார்கள். அப்படி தேக்கி வைத்திருக்கக்

கூடிய நெல்லை அதிகாரிகள் போய் வாங்கலாம். அதுவும் சிறிய விவசாயிகளுக்கு தொந்தரவு கொடுக்கக் கூடிய முறையில் இருக்காது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** அறுவடை காலத்தில் ஒரு மாத காலம் அதிகாரிகள் கொள்முதல் செய்வது பற்றி எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. அறுவடை காலம் முடிந்த பிறகு 2, 3 மாதம் கழித்துக் கூட கொள்முதல் செய்கிறார்கள். அறுவடை காலத்திலேயே எவ்வளவு திட்டமிடப்பட்டிருக்கிறதோ அவ்வளவு கொள்முதல் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அரசாங்கத்தின் லட்சியம் 'மார்கெடபிள் சர்பிளஸை' வாங்க வேண்டுமென்பது தான். அதனால் வாங்கும் வேலை தொடர்ந்து தான் இருக்கும். குறிப்பாக, வட ஆற்காடு ஜில்லாவில் இரண்டு தினங்களுக்கு முன்பு புலவர் கோவிந்தன் அவர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் நெல்லை வாங்கினால் விவசாயிகளுக்கு தொந்தரவு வரும் என்று சொன்னார். தஞ்சை ஜில்லாவில் சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட்டவுடன் பெரிய விவசாயிகள் விற்கத் தொடங்குவார்கள். கோவையில் நல்ல பலமுள்ள விவசாயிகள் கடைசி நேரம் வரை வைத்திருப்பார்கள். எவ்வளவு அதிகமாக லாபம் வருமோ அவ்வளவு வரவேண்டும் என்று அந்த நேரம் வரை வைத்திருப்பார்கள். அது நியாயமாக விவசாயிகள் செய்யக்கூடியது தான். ஆகவே, ஒரு மாதம், 15 நாட்களுக்குள் வாங்க வேண்டும் என்ற முடிவில் அரசாங்கம் இருக்க முடியாது.

**திரு. வி. எஸ். எஸ் மணி :** லெவிக்குக் கொடுக்கவேண்டிய அளவு நெல்லை ஒரு விவசாயி கொடுத்த பின்பு, மீதி நெல்லை அவர்கள் இஷ்டம் போல் யாருக்கும் கொடுக்கலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. அப்படி ஒரு விதி இருக்கும் பொழுது, அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ப்ரொக்யூரிங் ஏஜெண்டிடம் தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அரசாங்க ப்ரொக்யூரிங் ஏஜெண்டு உரித்த காலத்தில் போய் அவர்களிடம் வாங்குவதில்லை. அப்படி அவர்கள் வாங்காதபோது வேறு லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளிடம் கொடுப்பதை ஏன் தடை செய்ய வேண்டும் ? அது மாத்திரமல்ல; ப்ரொக்யூரிங் ஏஜெண்டு வாங்கக்கூடிய நெல்லை நெல்லாக விநியோகிப்பதில்லை. அதை அரிசி மில்லில் குத்தி அரிசியாக விநியோகம் செய்கிறார்கள். அரிசியாக விநியோகம் செய்வது மக்களுக்கு நல்ல முறையில் கிடைப்பதில்லை. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்வார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** விவசாயிகளிடத்திலிருந்து, 'ப்ரொக்யூர்மெண்டு' ஏஜெண்டுகள் முறையாக நடந்து கொண்டு, கொள்முதல் செய்யவில்லை என்றால், அதைப் பற்றி சம்பந்தப் பட்ட டி.எஸ். ஓ. அல்லது தாசில்தார் அவர்களுக்கு தகவல் கொடுத்தால், அதிகாரிகள் உடனே போய் அந்த நெல்லை வாங்கத் தயாராக இருக்கிறார்கள்.



**திரு. எம். தண்டாயுதபாணி:** தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் செய்யும் போது, சர்க்காரால் நிர்ணயிக்கப் பட்டிருக்கிற விலையாகிய ரூ. 22.50 பைசா கொடுப்பதற்குப் பதிலாக, அதிகாரிகளால் வாங்கப்படும் போது ரூ. 21.75 பைசா தான் கொடுக்கப் படுகிறது. அந்த முறையில்தான் கொள்முதல் செய்யப் படுகிறது. ஆகவே, அதிகாரிகள் சென்று வாங்கும் போதும், சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலையாகிய ரூ. 22.50 பைசாவைக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் சொல்வது போல் செய்வதில் ஒரு சங்கடம் இருக்கிறது. அதிகாரிகள் சென்று நெல்லை வாங்கும் போது, அந்த குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று வாங்கிவரும் போக்குவரத்துச் செலவை விவசாயிகளுக்குக் கொடுக்கும் தொகையிலிருந்து எடுக்கிறார்கள். தஞ்சை ஜில்லா அதிகாரிகள் செய்வதில் தப்பு எதுவும் இல்லை. விவசாயிகள் அசெம்ப்ளிங் பாயிண்டில் கொண்டு வந்துகொடுத்தால், நிர்ணயிக்கப் பட்டிருக்கிற உயர்ந்த பட்ச விலையை கொடுக்கத் தயார். அப்படிக் கொடுத்து பல விவசாயிகள் அனுகூலம் அடைந்திருக்கிறார்கள்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** பாசன வசதி பெறுகிற இடத்தில் ' procurement without tears ' என்று செய்தால் அது வரவேற்கக்கூடியது. ஆனால், பாசன வசதியே இல்லாத, வருஷக் கணக்கில் மழை இல்லாமல் இருந்து, ஏதோ ஒரு சமயம் மழையைக் கண்டு ஏதாவது விளைச்சல் ஏற்பட்டிருந்தால், அங்கேயும் ப்ரொக்யூர்மெண்ட் செய்வது அங்கு உள்ள மக்களுக்கு பல சிரமங்களைக் கொடுக்கிறது. ஆகவே, அப்படிப் பாசன வசதிகள் இல்லாமல் இருக்கும் இடங்களில், பஞ்சம் நிலவும் பகுதிகளில் ப்ரொக்யூர்மெண்ட், ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்றெல்லாம் வைக்கக் கூடாது என்பதை அரசாங்கம் கவனிக்குமா?

**கனம் திரு. வெ. ராமையா:** திருநெல்வேலி ஜில்லாவில் இப்பொழுது பஞ்சம் இருக்கிறது என்பதனால், அப்படிக் குறைவாக இருக்கும் இடத்தில் குறைவாகத்தான் கொள்முதல் செய்கிறோம். எதைப் பஞ்சப் பகுதி என்று நினைக்கிறோமோ எங்கே உற்பத்தி குறைவாக இருக்கிறதோ, அங்கேயும் விவசாயிகள் விற்கும் நெல்லை அரசாங்கம் வேண்டும் என்று கேட்கிறது.

**திரு. இரா. நாராயணன் :** ஒரு ஏக்கர் நிலத்திற்கு உட்பட்டவர்கள், புஞ்சையில் நஞ்சையாக பம்பு செட்டுகள் வைத்து சாகுபடி செய்து, வருவாய் குறைவாக இருக்கிறது. அப்படிப் பட்ட கிராமங்களில் அரசாங்கம் கொள்முதலை நீக்கிவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** எங்கெங்கே விவசாயிகள் பம்பு செட்டுகள் வைத்தோ, நேரடிப் பாசனம் கொண்டோ நெல் சாகுபடி செய்கிறார்களோ, அவர்களுக்குத் தேவையான நெல் போக மீதம் இருப்பதை சந்தையிலோ, நகரத்திலோ சென்று விற்பார்கள்; அப்படி விற்கும் நெல்லை அரசாங்கம் கேட்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சில வியாபாரிகள் நிலப் பிரபுக்களாகவும் இருக்கிறார்கள். சர்க்கார் குறிப்பிடும் நெல்லை அரிசியாகவே பங்கீடு செய்யும் நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வதென்றால் அதை அரசாங்கம் தடுக்குமா? அரசாங்க ஏஜெண்டுகள் மூலம் வாங்கி விநியோகிப்பதில் ட்ரான்ஸ்போர்ட் சார்ஜுகள் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்கும் முறையாக இருப்பதால், அப்படிக் கொடுக்கும் வியாபாரிகளுக்கு சலுகை காட்ட சர்க்கார் முன்வருமா?

**கனம். திரு. வெ. ராமையா:** கேள்வியே ஹைபாதெடிகல், அது போன்ற கோரிக்கை வந்தால், அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

### திருநெல்வேலி மாவட்டத்திற்குள் உணவு தானியங்கள் போக்குவரத்து

*49 கேள்வி.— **திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் உற்பத்திக் குறைவு காரணமாக அந்த மாவட்டத்திற்குள் உணவு தானியங்கள் போக்குவரத்திற்கான தடை உத்திரவை நீக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு ஏதேனும் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH: There is no proposal to rescind the Paddy and Rice (Movement Control) Order, 1965 in Tirunelveli district.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சார், அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பது போல, திருநெல்வேலி இன்றையதினம் பருவ மழை முற்றிலும் தவறி பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. அந்த நிலையில் சென்னை நகரில் ஒரு படி அரிசி ரூ. 1.15 காசாக இருக்கும் போது, திருச்செந்தூர் முக்கிலுள்ள தெருவில் ரூ. 2.10 காசாக இருக்கிறது. அப்படி சென்னைக்கும் திருநெல்வேலிக்கும் ஒரு ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, ஜில்லா முழுவதிலும் போக்குவரத்து தடை இல்லாமல் செய்தால், அது ஒரு பரிகாரமாக இருக்காதா? ஆகவே அந்த விஷயத்தில் சர்க்கார் விசேஷ கவனம் செலுத்தி சிரமங்களைப் போக்க வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு, திருநெல்வேலியிலும்—ஏன் அவசியம் ஏற்பட்டால், எங்கேயும்—குடும்பக் கார்டு கொடுக்கலாம், அதில் கஷ்டம் இல்லை என்று சொன்னார்கள். இப்பொழுது திருநெல்வேலி ஜில்லாவில் பெரிய மேஜர் பஞ்சாயத்துக்கள், நகரங்கள் மட்டுமன்றி, கடலோரப் பகுதி, மீனவர்கள், மரம் ஏறிகள் இவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் குடும்பக் கார்டு கொடுப்பார்கள். அந்த ஜில்லாவில் உணவுக் கஷ்டம் ஏற்படாமல், மற்ற ஜில்லாக்களிலிருந்து உணவு தானியம் அனுப்புகிறோம். அதன்



விலையையும் அரசாங்கம் கண்காணிக்கிறது. படி ரூ. 2.10 என்று விற்பதாகச் சொன்னார்கள். சமீபத்திலே கூட அந்த ஜில்லாவிலே சுற்றுப் பிரயாணம் செய்தபோது, படி ஒரு ரூபாய் எட்டு அணா அல்லது ஒரு ரூபாய் பத்து அணா என்று இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. விலையைக் கட்டுப்படுத்தி வெளியிடங்களிலிருந்து தானியங்கள் அனுப்ப சர்க்கார் தயாராக இருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** அமைச்சர் பதிலிலிருந்து அரசாங்கம் குடும்பக் கார்டு திட்டத்தை யோசித்துக்கொண்டு இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். நாளை ஆகஸ்ட் ஒன்றாம் தேதியிலிருந்து, குடும்பக் கார்டு கிராமந்தோறும் கொடுக்க ஜில்லாக் கலெக்டர் ஏற்பாடு செய்திருப்பது சர்க்கார் கவனத்திற்கு வரவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** அரசாங்கத்தின் கொள்கையைச் சொன்னேன். அவசியம் ஏற்பட்டால், குடும்பக் கார்டு கொடுக்கத் தயார். கலெக்டர் நடவடிக்கை எடுத்திருந்தால், அது சர்க்கார் கொள்கைக்குப் புறம்பில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர்:** சார், நெல் விளையாத நீலகிரி ஜில்லாவிற்கு கோவை மாவட்டத்திலிருந்து கொண்டுவர, மேட்டுப்பாளையத்திலே செளக்கி போட்டு இருப்பதால், தடையாக இருக்கிறது. ஆகவே, கோவையிலிருந்து கொண்டு வர இருக்கும் தடையை நீக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** நீலகிரி ஜில்லா பூராவிற்கும் அரசாங்கம் கொடுக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சார், திருநெல்வேலி ஜில்லாவில் கிராமங்கள் தோறும் குடும்பக் கார்டை அமல் நடத்தும்போது, ஒரு வாரத் தேவை முழுமையையும் ஒரே நேரத்தில் வாங்க வேண்டும் என்பதில் ஏற்படும் கஷ்டத்தைப் போக்கி, தினம் தோறும் அவரவர்கள் விரும்பும் அளவுக்கு, தினம் தினம் பெற்றுக் கொள்ள வழிவகை செய்வார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** அங்கே கிராமங்களில் குடும்பக் கார்டு அமலில் இருக்கும் விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, மாவட்ட செக் போஸ்ட் அதிகாரிகள் மிகக் கொடூரமாக நடந்து கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்களைப் பெரிய அதிகாரிகள் என்று நினைத்துக்கொண்டு சிறிய கார்களில் போகிறவர்களைக் கூட அனாவசியமாகத் தொந்தரவு செய்கிறார்கள். முக்கியமாக, நாற்றாம்பள்ளி செக் போஸ்ட் அதிகாரிகள் மிக்கத் தொல்லை தருகிறார்கள். அதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், சமீபத்தில் திரு. ராஜாராம் அவர்கள் தன் குடும்பத்தோடு வந்துகொண்டு இருந்த போது, அவர்களுக்குத் தொந்தரவு கொடுத்தார்கள். அங்குள்ள அதிகாரிகளுக்கு, பொதுமக்களை அனாவசியமாகத் தொந்தரவு செய்யக்கூடாது என்று அறிவுரை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[31st July 1965

**கனம் திரு. வெ. ராமையா :** செக் போஸ்ட் அதிகாரிகள் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். குறிப்பாகக் காரில் போகிறவர்களுக்குத் தொந்தரவு இருக்காது. ஆனால் எங்கேயாவது, தனிப்பட்டவர்களிடம் தவருக நடந்துக்கொண்டு இருந்தால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கோ அல்லது என்னுடைய பார்வைக்கோ கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. பொன்னையன் :** தலைவர் அவர்களே, குளிர் பிரதேசத்தில் பசி அதிகம். அது என்னுடைய சொந்த அனுபவம். ஆக, தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் அரிசி அளவு போதவில்லை. சமீபத்தில் வால்பாறைக்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது அவர்களிடம் சொன்னதன் பேரில் இன்னும் ஒரு அரை லிட்டர் கூட்டிக்கொடுத்தார்கள். அதுவும் போதவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு அளவைக் கூட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் முதல் அமைச்சர் சென்று பார்த்து சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று தாராளமாகச் சொல்லியிருக்கிருர்கள். அதன் பலனை இன்னும் அதிகமாக வேண்டும் என்று. . . (திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்கள் அதிகம் கொடுத்தது தவறு என்கிறீர்களா ?) இல்லை, இல்லை. அதிகமாக இருந்தால், நிறைய கொடுக்கலாம். இப்பொழுது இருக்கும் நிலையில் அதை உயர்த்துவதாக இல்லை.

Mr. SPEAKER : The next question, Question No. 50, is postponed.

Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ADJOURNMENT MOTIONS.

### (1) Shifting of the proposed Marine Diesel Engine Factory from Ennore.

Mr. SPEAKER : Hon. Members Sri Saw Ganesan, Sri M. Kalyanasundaram and Sri T. P. Alagumuthu have given notice of a motion for adjourning the business of the House to discuss the situation arising out of the reported decision to shift the proposed Marine Diesel Engine Factory from Ennore.

I have already admitted a Short Notice question on this subject which may come up before this House on the 6th or 7th August 1965. Therefore, I withhold my consent to this adjournment motion.

Sri SAW. GANESAN : As it pleases you, Sir.

### (2) Arrest of Sarvodaya Workers in Madurai District.

Sri M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, I have given notice that the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance viz., the action



31st July 1965] [Sri M. Kalyanasundaram.]

of the Police in arresting a large number of Sarvodaya workers in Madurai district in connection with the agitation for leasing the temple lands directly to the actual tillers and not to the intermediaries.

Mr. SPEAKER : May I know how it will come under an adjournment motion?

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கைது செய்யப்பட்டிருக்கிற இருபது பேர்கள் எந்த விதமான பலாத்கார நிகழ்ச்சிகளிலும் ஈடுபடவில்லை. அவர்கள் சாத்வீகமான சர்வோதயக் கொள்கைகளைப் பின்பற்றக்கூடிய விநோபாஜியினுடைய சிஷ்யர்கள். . .

Mr. SPEAKER : The hon. Member need not go into such details.

Sri M. KALYANASUNDARAM : It appears that the Government are censuring Sri Vinobaji.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நிலைமையை நான் விளக்குவேன். விளக்கின பிறகு கனம் அங்கத்தினரே ஒப்புக்கொள்வார்கள். தாங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இது அவசரப் பிரேரணைக்கு உகந்தது அல்ல. தாங்கள் அனுமதித்தால் நிலைமையை விளக்குகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கோயில் நிலங்கள், தர்ம சொத்துக்களை நேரடியாக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது என்பது அரசாங்கம் எற்கனவே ஒப்புக்கொண்டுள்ள கொள்கையாகும். அதற்காக சட்டமும் இயற்றப்பட்டிருக்கிறது. இந்தக் கோயில் நிலமெல்லாம் உழுபவர்களுக்குப் போகாமல், வசதி படைத்தவர்கள் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு உள்குத்தகைக்கு விட்டுக்கொண்டிருக்கிற பிரச்னை இருப்பதால் இந்தக் கிளர்ச்சி நடக்கிறது. அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரச்னையைத் தீர்த்து இருந்தால் இந்தக் கிளர்ச்சிக்கே அவசியம் இராது. பிரச்னையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, நியாயமான கோரிக்கை வைத்திருப்பவர்களைக் கைது செய்து சிறையில் போடுவது அரசாங்கத்தின் கொள்கைக்கே மாறானது என்று நான் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இதைக் கொடுத்திருக்கிறேன். அடக்குமுறை பரிகாரம் அல்ல.

Mr. SPEAKER : May I know on what charge they were arrested?

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தான் சொல்ல வேண்டும். போலீஸ்காரர்கள் கைது தானே செய்திருக்கிறார்கள்? இன்னும் சார்ஜ் ஷீட் போடவில்லையே.

Mr. SPEAKER : On what allegations and in respect of which offences have they been arrested?

[31st July 1965

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அதை எப்படி நான் சொல்ல முடியும் ?

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அறநிலையங்களைச் சார்ந்த நிலங்களை எப்படிக் குத்தகைக்கு விடுவது என்பதுபற்றி இந்த மன்றம் ஒரு சட்டம் நிறைவேற்றியிருக்கிறது. 'Public Trusts Lands Lease Act' என்ற கூடாது ; நேரடியான குத்தகையாக இருக்க வேண்டும் ; கூடுமானல் யாருக்கும் ஐந்து ஏக்கருக்கு மேலே குத்தகைக்குக் கொடுக்கக் கூடாது; நேரடியான குத்தகையாக இருக்க வேண்டும்; கூடுமானல் குத்தகைக்காரர்களைச் சேர்த்து ஜாயின்ட் கூட்டுறவுச் சங்கம் அமைக்கலாம். இவைதான் அந்தச் சட்டத்தின் முக்கியமான பிரிவுகளாகும்.

குறிப்பிட்ட நிலத்தைப் பொறுத்த மட்டில், மதுரை மீனட்சி தேவஸ்தானத்தைச் சார்ந்த நிலம்—36 ஏக்கர் என்று நான் நினைக்கிறேன்—இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு ஒருவருக்கு அது மொத்தமாகக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. ஆனல், இந்தச் சட்டம் வந்த பிறகு அது மாற்றப்பட்டது. அப்பொழுது தேவஸ்தானத்திற்கும் போதிய வருமானம் வரவில்லை. சட்டப்படி இது மாற்றப்பட்டு, பல பேருக்கு இந்தக் குத்தகை விடப்பட்டிருக்கிறது. பல பேருக்கு விடப்பட்ட போதிலும், 'இது சரியாக விடப்படவில்லை' என்றுதான் முதலிலே சர்வோதய சங்கத்தின் சார்பாக திரு. ஜகன்னதன் அவர்கள் ஒரு கிளர்ச்சியைச் செய்ததாகப் பத்திரிகையிலே பார்த்தேன். எனக்கும் அதைப்பற்றிக் கடிதம் வந்தது. அதற்குப் பிறகு நான் மதுரைக்குப் போயிருந்தபோது திரு. ஜகன்னதன் அவர்கள் என்னிடத்தில் வந்து பேசிக் கொண்டிருந்தார். அவருடைய நண்பர்களையும் அழைத்து வந்திருந்தார். அப்பொழுது நான் அவர்களுக்குச் சொன்னேன். 'சட்டப்படி இந்தக் குத்தகை விடப்பட்டிருந்தால் சட்டத்தை மீறி விட வேண்டும் என்று யாரும் சொல்ல முடியாது, அரசாங்கமும் சொல்ல முடியாது, சட்டத்தை மீறி குத்தகை விடப்பட்டிருந்தால் அரசாங்கமே தலையிட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும், நிலைமை என்ன என்பதை நீங்களே சொல்லுங்கள்' என்று நான் திரு. ஜகன்னதன் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் "இதில் சட்டப்படி ஒன்றும் தவறுதல் சொல்வதற்கில்லை. சட்டப்படி சரியாகத்தான் இருக்கிறது" என்று ஒப்புக் கொண்டார்கள். மற்றென்றும் அவர்களை நான் கேட்டேன். "தேவஸ்தானம், பொது தர்ம ஸ்தாபனங்கள் ஆகியவற்றினுடைய வருவாய் குறையக்கூடிய அளவில் நாம் செய்வது நல்லதா ?" என்று கேட்டேன். "வருவாய் குறையக் கூடாதுதான்" என்று அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஆனல், அவர்கள் "குத்தகை விடப்பட்டதிலே சில பேர் வெளியூரார்கள் இருக்கிறர்கள், அரசாங்க அதிகாரிகள் அதிலே தலையிட்டு, உள்ளூரிலேயே நிலமில்லாதவர்களாக இருக்கிறவர்களுக்கு அந்தக் குத்தகைகளை மாற்றிவிட வேண்டும்" என்று கோரினர்கள். அப்பொழுது நான் சொன்னேன் "சட்டப்படி ஒன்றும் தவறுதல் இல்லை என்று நீங்களே ஒப்புக் கொண்டீர்கள், யாராவது நடுக்



31st July 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

குத்தகை எடுத்திருந்தால், அல்லது ஒருவரே அதிக நிலம் வைத்திருந்தால், அல்லது 'பினும்'யாக வேறு யாருக்காவது விட்டிருந்தால், அப்பொழுது தலையிட முடியும், இப்பொழுது தலையிடுவதற்கில்லை என்று நீங்களே ஒப்புக் கொண்டீர்களே" என்று நான் சொன்னேன். மேலும், கலெக்டரையும், அதிகாரிகளையும் கூப்பிட்டு, இதிலே 'இன்ஃபார்மல்'ஆக அவர்களால முடிந்ததைச் செய்யும்படிச் சொல்லிவிட்டு வந்தேன். "வெளியூர்க் குத்தகைக்காரர்களாக இருந்தாலும், சட்டப்படி அவர்களை விலக்க முடியாது என்றாலும், அவர்களுடன் 'இன்ஃபார்மல்' ஆகப் பேசி, வெளியூர்க்காரர்கள் குத்தகைக்கு எடுத்திருக்கிற நிலங்களை எந்த அளவுக்கு மீட்க முடியுமோ அந்த அளவுக்கு மீட்டு அதைச் சரி சமமாக உள்ளூரில் நிலம் இல்லாதவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்க நீங்கள் முயற்சி செய்து ஏற்பாடு செய்யுங்கள்" என்று கலெக்டரிடம் சொல்லிவிட்டு வந்தேன். அப்பொழுது திரு. ஜகன்னதன் அவர்களே சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதாகச் சொன்னர்கள்; நிறுத்தினர்கள். ஆனல், நிறுத்துவதும் மறுபடி தொடங்குவதுமாக இருக்கிறது. வேறு வகையிலே சர்வோதயத்தில் ஈடுபடாவிட்டாலும், இதிலாவது ஏதாவது செய்ய வேண்டும் என்று செய்கிறர்கள் போலும். சர்வோதயத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ? எனக்கு சர்வோதயத்தைப்பற்றி அதிகமாகத் தெரியாது. சட்டப்படி எடுக்கப்படும் நடவடிக்கையில் என்ன செய்ய முடியும் ? கலெக்டர் அவர்கள் கவனித்ததற்குப் பிறகு மறுபடியும் ஒரு முறை சத்தியாக்கிரகம் துவங்கப்பட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். மறுபடியும் மதுரைக்குப் போயிருந்தபோது கலெக்டரிடம் பேசினேன். "சட்டப்படி நடந்து கொண்டிருக்கும்போதே இப்படி எல்லாம் தொந்தரவு செய்துகொண்டு போனல் இதற்கு முடிவு ஏது ?" என்று கலெக்டர் அவர்கள் வருத்தப்பட்டார்கள். இருந்தாலும், "பார்த்துக் கவனியுங்கள்" என்று சொன்னேன். அதற்குப் பிறகு நான் கலெக்டரை இங்கிருந்தே விசாரித்தேன். இரண்டு மூன்று பேர்கள் நிலம் இல்லாதவர்கள்தான். ஐந்து ஏக்கருக்கு மேல் விடவில்லை. இருந்தாலும், வெளியூர்க்காரர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு நிலைமையை வற்புறுத்திச் சொல்லி, அந்தக் குத்தகையை விட்டுவிடச் சொல்லிவிட்டு, கலெக்டரே பார்த்து, 14 ஏக்கர் நிலத்தை உள்ளூரில் நிலமில்லாத ஏழு பேர்களுக்கு, இரண்டு ஏக்கர் வீதம் குத்தகைக்கு விட ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்தார்கள். இரண்டாவது முறையாகத் துவக்கப்பட்ட சத்தியாகிரகமும் உடனடியாக நின்றது என்றும் பத்திரிகையில் பார்த்தேன். இதற்குப் பிறகு, மறுபடியும் சத்தியாக்கிரகக் கடிதம் வருகிறது. அது பலவிதமாக வருகிறது. "எங்கள் சர்வோதய சங்கம் இருக்கிறது, அந்தச் சங்கத்தின் மூலமாகத்தான் கொடுக்க வேண்டும்" என்று சர்வோதயத் தலைவர்கள் தெரிவித்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படிச் செய்ய சட்டத்தில் ஒன்றும் இடம் இல்லை. நிலம் இல்லாதவர்களுக்குத் தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லலாம். 'நாங்கள் சொல்லும் நிலமில்லாதவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும்' என்று இன்னொரு சத்தியாகிரகமா ? இப்படியே போனல் முடிவு ஏது ? நான் தெரிந்து

[திரு. எம். பக்தவத்சலம்] [31st July 1965

கொண்ட வரையில், கலெக்டர் செய்ததில் தவறு இருப்பதாக நான் சொல்வதற்கில்லை. சட்டப்படி செய்திருந்தாலும், 'இன்ஃபார்மல்' ஆகப் பேசி அதை மாற்றிக் கொடுத்த பிறகும் இதற்கு இயக்கம் நடத்துவது என்றால், அதுவும் சர்வோதயத்தின் பேரால் நடத்துவது என்றால், அது கொஞ்சங்கூட சரியல்ல. சர்வோதயத்தின் பேரால் இப்படிப்பட்ட இயக்கம் நடத்துவது முற்றிலும் தவறு. சாதாரணமாகக் கிளர்ச்சி செய்யலாம். கம்யூனிஸ்டுக் கட்சி செய்தால் கூடத் தவறு. அதுவும் சர்வோதய சங்கம் செய்வது மிகவும் தவறு. அப்படிச் செய்து பிறருடைய உரிமையில் தலையிடும் வகையில் யார் நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும், அதற்கு லா அண்டு ஆர்டர் வந்துவிடுகிறது. ஆகவே, போலீசாரோ மற்ற அதிகாரிகளோ நடவடிக்கை எடுத்துக் கொள்ள
9-30 a.m. வேண்டியிருக்கிறது. அந்த வகையில் தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நேற்றுக் கூட இப்படி எல்லாம் தொந்தரவு ஏற்படுகிறதென்று சொன்னார்கள். இதுதான் நிலைமை. எப்படியும் இது நிர்வாக முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை ஆதலால் இது அவசரப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். மற்றவர்களும் இதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதை இவ்வளவு தூரம் விளக்கிக் கூறினேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கம்யூனிஸ்டுக் கட்சியோ, சர்வோதயக் கட்சியோ நிலத்தை எடுத்து தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று கோர முடியாது. அப்படிக் கோரி இருக்கவும் மாட்டார்கள். என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது எல்லாம்—மறுபடியும் கூட இப்போது நிலம் கொடுக்கப்பட்டுள்ளது சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனாலும் ஏற்கெனவே இருந்த மூலக் குத்தகைக் காரர்களுக்குத்தான்—அவர்கள் சொன்ன பினாமி ஆட்களுக்குக் கொடுத்துள்ளது போல—கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கனம் அமைச்சர் அவர்கள் இப்போது கொடுக்கப்பட்டுள்ள நிலம் பினாமியாக உள்ள ஆட்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி விசாரிக்க வேண்டும். நிலம் இல்லாத உள்ளூர் ஆட்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்குமேயானால் சத்தியாகிரகத்திற்கு அந்த ஊர் பொது மக்களுடைய ஆதரவு இல்லாமல் போய் இருக்கும். இந்த சத்தியாகிரகத்திற்கு உள்ளூர் மக்களின் ஆதரவு இருப்பதிலிருந்தே அவர்கள் சொல்வதில் நியாயம் இருப்பதாகத்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சட்டத்தின் மூலம் கூட்டுறவு சங்கம் அமைக்கக் கூடாதா? இந்த சர்வோதயச் சங்கத்தார் கூட்டுறவு சங்கமாக அமைத்துக் கொள்ள சம்மதிக்கவில்லையா? தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது போல எழுதி வாங்கப்பட்டிருக்கிறதே தவிர இன்னமும் முன்பு எடுத்திருந்த மூலக் குத்தகைக்காரர்கள் தான் சாகுபடி செய்து வருகிறார்கள் என்பது எனக்குத் தெரிந்துள்ள விவரம். ஆகவே இதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விசாரித்து ஒரு அறிக்கை கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



31st July 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதில் பினாமி இல்லை என்று தான் எனக்குப் புலப்படுகிறது. கலெக்டர் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கையில் எனக்குப் பூரணமாக நம்பிக்கை இருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அவர் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனாலும், நான் சொன்னதுபோல குத்தகைச் சீட்டு பலரிடம் வாங்கப்பட்டிருக்கிறதே தவிர, அதைச் சாகுபடி செய்பவர் பழைய மூலக்குத்தகைக்காரர்தானா, இல்லையா என்பதையாவது கனம் அமைச்சர் அவர்கள் விசாரிப்பார்களா? சர்வோதயச் சங்கத்திடம் கனம் அமைச்சர் அவர்களுக்கு என்ன குறை வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் இந்த விஷயத்தில். . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எனக்கு சர்வோதயச் சங்கத்திடம் ஒரு குறையும் கிடையாது. அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து கொண்டுதான் வருகிறேன். இந்த விஷயத்தில் கலெக்டர் அவர்கள் சரியான முறையில் பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். இது அவசரப் பிரேரணைக்கு உகந்ததல்ல என்றுதான் வற்புறுத்துகிறேன்.

MR. SPEAKER: The whole difficulty is that the hon. Member, Sri Kalyanasundaram, is not in full possession of the facts relating to the case of the Sarvodaya people.

SRI M. KALYANASUNDARAM: It is true that I have no control over them.

MR. SPEAKER: So, what is the use of arguing the matter over and over again?

I find that there is no case for an adjournment motion, and hence, I withhold my consent to it.

## III.—PRIVILEGE MATTER

### DELAY IN PLACING THE RULES FRAMED BY THE RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRATION AND REVENUE DEPARTMENTS ON THE TABLE OF THE HOUSE.

MR. SPEAKER: The matter of privilege raised by the hon. Member, Sri M. Kalyanasundaram on 30th July 1965 relates to the failure on the part of the Rural Development and Local Administration and the Revenue Departments to have the rules placed on the Table of the House in time.

In the first case, the rules issued in G.O. Ms. No. 532, Rural Development and Local Administration were published on 4th March 1965, but were sent to the Legislative Assembly Department only on the 8th June 1965 for being placed on the table of the House. In the second case, the rules framed in G.O. Ms. No. 345 and in G.O. Ms. No. 346, Revenue, were published on the 16th and 15th February 1965 and sent to the Legislative Assembly Department on the 21st May 1965. In another case, the rules issued in G.O. Ps. No. 357, Revenue and published on 11th February 1965 were sent to the Legislative Assembly Department on 21st May 1965.

The hon. Member contends that though the rules were published prior to and in March 1965 when the Assembly was sitting, the Departments failed to have them placed on the table of the House before the adjournment of the House at the end of the Budget Session, but only sent them to the Legislative Assembly Department after a delay of two to three months and this, in the opinion of the hon. Member, constitutes contempt of the House.

It is a well known principle of delegated or subordinate legislation that the power of the Government to frame rules under the various statutes are derived from, and are subject to the control of, the Legislature. It is, therefore, provided in the statutes that the rules framed pursuant to such delegation shall be laid on the table of both the Houses of the Legislature and shall be subject to modification or annulment within the prescribed time. It is, therefore, imperative on the part of the Government to lay such rules on the table of the House as directed in the Act, and necessary that strict conformity to the provisions of the statute is observed.

The point at issue is, whether the failure on the part of the Government to place the rules on the table of the House in time can be construed as a contempt of the House and, therefore, a breach of privilege as complained by the hon. Member.

A similar complaint was made by the same hon. Member in 1962 and I observed as follows :—

'In view of the explanation given by the Hon. Leader of the House, I hold that it is not necessary to pursue the matter further. But, I wish to make it clear that the fact that the Court does not invalidate that notification, because it was not placed before the House in time, is not a proper explanation for not placing the notification before the House in time. On the other hand, the responsibility is all the more greater, because there must be some check by the Assembly as provided by the rules.'

If a studied disregard of the provisions of the statute by the departments is manifest, then, definitely the Legislature can think of steps to be taken to correct the concerned persons or departments responsible for the same, and a case of contempt of the House may be inferred. If, on the other hand, the delay or failure is due to inadvertance or negligence, it may not amount to contempt of the House and, hence, it may not be viewed as breach of privilege.

In the instant cases, there seem to be no justifiable or acceptable reason for the delay inasmuch as, at the time the rules were published, the Assembly was in session and the departments could have within a reasonable time—two or three weeks—caused the rules to be placed on the table of the House. This has not been done.



This House may take a serious view of the matter that in spite of the fact that the same question was raised on the floor of the House in 1962 and that the lapses on the part of the departments have been repeatedly pointed out in the various reports of the Committee on Subordinate Legislation, the departments have not corrected themselves and realised their responsibilities. But, I cannot find any precedent in which such matters have been referred to the Privileges Committee or a decision has been taken as a breach of privilege. Therefore, I do not want to precipitate the matter, since the Legislature and the Executive are only two wings of the State. But I want to impress on the Hon. Ministers that they may issue suitable directions and see that the departments under their control place the rules framed pursuant to delegated legislation with the least possible delay on the table of the House and avoid such complaints, and that the departments may realise the gravity involved in such cases. There I leave it.

## IV.—CALLING ATTENTION TO NON-AVAILABILITY OF PIG IRON

*திரு. கு. ப. அழகமுத்து: கனம் சபாநாயகர் அவர்களே, "தமிழ் நாட்டில் உள்ள வார்ப்பட தொழிற்சாலைகள் தேனிரும்பு கிடைக்காத காரணத்தால் நன்கு இயங்க முடியாமல் இருக்கிற நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 41-வது விதியின் கீழ்க் கொண்டு வருகிறேன்.*

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement :—

In order to distribute the available Pig Iron on an equitable basis, the Government of India introduced a scheme with effect from 1st April 1963, according to which each foundry would receive pig iron, during 1963–64, only to the extent of its annual requirement fixed by the respective sponsoring authority in suitable instalments. The Director of Industries and Commerce sponsored a total demand of 26,545 M. Tonnes of Pig Iron, against which only 9,553 M. Tonnes were allotted to the foundaries since the total demand in India was as high as 2 million tonnes, while the total production coupled with import stood at about 1.2 million tonnes. The Government of India stated that the pig iron quota for the Small Scale Foundries of the Madras State for the year 1964–65, has, however, been increased to 11,830 tonnes as against 9,553 tonnes allotted during 1963–64.

In August 1964 the Indian Chamber of Commerce, Coimbatore requested for the allotment of pig iron to the Engineering foundries in the Small Scale Industries in Coimbatore which were estab-

lished after 1st November 1962 as these units were manufacturing pumpsets, motors, etc., intended for agricultural production. They also stated that the Government of India had programmed to import sizeable quantities from foreign countries and that the Madras State may be allotted increased quota. Accordingly, the Government of India were requested to allot pig iron quotas to Engineering Foundries in the Small Scale Sector even though they had been established after 1st November 1962. The Government of India stated that the total availability of pig iron (foundry grade) including imported pig iron during 1964–65 was estimated at 1.2 million tonnes as against an estimated demand of over two million tonnes and that it would not be possible to allot pig iron to the units established after 31st October 1962 until the supply position improved.

The allotment of pig iron is made to this State only from 1st March 1964 the date from which full control over pig iron was in force. This control relates to only 183 registered foundries in the State. For the year 1964–65 only an allotment of 11,830 tonnes has been made to this State for supply from the Bhilai Steel Plant. It is reported that the Iron and Steel Controller has recently issued instructions to the Bhilai Steel Plant for despatch of the pig iron.

The Director of Industries and Commerce has furnished the demand for 1965–66 as 24,716 M. tonnes. The Director has also stated that the recent instalment of the allotment of 6,500,000 M. tonnes of imported Russian pig iron is being distributed to the foundries in the State List. No imported pig iron was allotted to any foundry in the State previously. The allotment is on a pro-rata basis even for the Government foundries in the State List. Registered foundries which are not in the State List and which want allotment of pig iron, should have their names included in the State List maintained by the Director.

The Government of India have set up a panel to consider problems relating to the supply of pig iron to the foundry industry with special reference to the proper utilisation of the available quantities of pig iron. On 22nd May 1965 the Pig Iron Panel constituted by the Government of India came to Madras and held discussions with officers of this Government and private foundry owners. It has been impressed upon the panel that the capacity of the foundries in the State List may be fixed at 50,000 tonnes per annum. The Panel has accepted the clarification. The decision of the Government of India on the recommendation of the Panel is awaited.

This Government are taking necessary action to get increased allotment of pig iron for the State.





## V.—GOVERNMENT BILL.

### THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1965".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## VI.—FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1965–66—PRESENTATION.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, 1965-66-ம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகளைச் சபைமுன் சமர்ப்பிக்கிறேன். இது பற்றிப் பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்த மதிப்பு 19 கோடியே 73 லட்சம் ரூபாயாகும். ஆயினும், இதில் 3 கோடியே 10 லட்சம் ரூபாய் மட்டும் ரெவின்யூக் கணக்கிலும், எஞ்சிய 16 கோடியே 63 லட்சம் ரூபாய் மூலதனக் கணக்கிலும் கடன் கணக்கிலும் அடங்கும்.

இத் துணைமதிப்பீடுகளில் ரெவினியூக் கணக்கில் அடங்கும் கூடுதல் செலவில் பெரும் பகுதி, கடந்த மாத இறுதியில் நமது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கிய அகவிலைப்படி வீதங்களின் உயர்வினைக் குறிக்கிறது. இந்த உயர்ந்த வீதங்கள் 1965 ஆகஸ்டு 1-ம் தேதியன்று கொடுக்கப்படுகிற ஜூலை மாதச் சம்பளத்திலிருந்து அமுலுக்கு வருகின்றன. இதன் மூலம் நமது அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படி வீதங்கள், இந்திய அரசாங்கத்தில் நிகரான பதவிகளில் பணியாற்றும் ஊழியர்களுடைய அகவிலைப் படி வீதங்களை ஒத்திருக்கும். மற்றும் 90 ரூபாய் முதல் 109 ரூபாய் வரையில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், இந்த அகவிலைப் படி வீதங்கள் மத்திய அரசாங்க வீதங்களைவிடச் சற்று கூடுதலாகவே இருக்கும். இந்த உயர்ந்த வீதங்கள் ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும், அரசாங்க மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் முன்போலவே பொருந்தும். இந்த அகவிலைப்படி உயர்வினால், ஆண்டொன்றுக்கு 3 கோடியே 40 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவிற்காக "71. பல்வகை இனங்கள்" என்கிற தலைப்பின் கீழ் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நாளடைவில் இந்த நிதி ஒதுக்கத்திற்குப் பதிலாக, 1965-66-ம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளைத் தீர்மானமாக முடிவு

[திரு. எம். பக்தவத்சலம்] [31st July 1965

செய்யும்பொழுது பற்பல மானியங்களின்கீழ் அகவிலைப்படிக்கென கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டுப் பெறப்படும். கடந்த மார்ச் மாதத்தில் அகவிலைப்படி வீதங்களைக் கணிசமாக உயர்த்தியதை யடுத்து, அவற்றை இப்போது மேலும் உயர்த்துவதால் நமது வழி வகை நிதி நிலையில் அதிகச் சிரமம் ஏற்பட்டிருக்கிற தென்பதில் ஐயமில்லை. என்றாலும், இப்போது செயல்பட்டுவருகிற நிதிக் கமிஷன் நமது மாநில நிதித் தேவைகளை நிச்சயிக்கும்போது, நமக்கு ஏற்பட்டுள்ள இன்றியமையாத இப் பொறுப்பினைக் கவனத்தில் கொண்டு அதற்கேற்ப நமக்கு நிதி வசதிகளை ஒதுக்கு மென நாம் நம்புகிறோம்.

மாநிலப் போக்குவரத்துத் துறையைச் சீரமைக்கும் விரிவான திட்டமொன்றை நாம் நிறைவேற்றி, பற்பல நிலைகளில் பஸ்களையும் டிரக்குகளையும் மேற்பார்வையிடுவதற்கு வேண்டிய பணியாளர் களைக் கூடுதலாக நியமித்திருக்கிறோம். கூடுதல் பணியாளர்க்கு ஆகும் செலவிற்காகத் துணை மதிப்பீடுகளில் ஏறக்குறைய 6.48 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மோட்டார் வண்டிச் சட்டத்தை அமலாக்குவதற்கான நிர்வாகப் பணியாளர்களைக் கூடுதலாக நியமிப்பதால், மோட்டார் வண்டி வரிகள் மூலம் நமக் குக் கிடைக்கும் வருவாய் பெரிதும் உயர்ந்து, இக் கூடுதல் செலவினை ஈடு செய்யும் என நம்புகிறோம்.

நமது மாநிலப் போலீஸ் படையினரின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கும், அவர்களது படைக்கலன்களை அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான ஏற்பாடுகளைக் குறித்து அரசாங்கம் அண்மையில் பரிசீலனை செய்திருக்கிறது. போலீஸ் படையினரின் திறனை அபிவிருத்தி செய்து மாநிலத்தின் சட்ட ஒழுங்கு நிலையைப் பராமரித்தலுக்கு உதவும் பல திட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. போலீஸ் படையின் எண்ணிக்கையை யும் திறனையும் அபிவிருத்தி செய்ய முற்படுகிற இந்தத் திட்டங் களுக்கென, துணை மதிப்பீடுகளில் 48.79 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்திற்கென்று விசேஷப் பொறியியல் பணியாளர்களை நியமிப்பதற்கென துணை மதிப்பீடுகளில் செய் துள்ள நிதி ஒதுக்கத்தை இம் மன்றம் வரவேற்குமென்று கருது கிறேன். இந்திய அரசாங்கம் இந்தத் திட்டப் பொறுப்பை ஏற்றுள்ளதால், இக் கணக்கில் ஆகும் செலவினத்தை அது ஈடு செய்யும்.

துணை மதிப்பீடுகளில் மன்றத்தின் அங்கீகாரத்தை வேண்டு கின்ற, மூலதனச் செலவின்பாற்படும் புதிய திட்டங்களில் மிக முக்கியமானது சிறு ரகத் தொழில் கார்ப்பொரேஷன் அமைப்பைக் குறித்ததாகும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தி லிருந்து நமது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பல சிறு ரகத் தொழிற்சாலைகளை நாம் நிறுவியிருப்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்தத் தொழிற்சாலைகள் பெரும்பாலானவற்றில் உற்பத்தி அதிகரித்து வருகிறது. அவற்றில் சில, கணிசமாக லாபமும் ஈட்டி வருகின்றன. இந்தச் சிறு ரகத் தொழிற்சாலைகள்



31st July 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

திறமையாகவும் வர்த்தக ரீதியிலும் இயங்குவதற்காக அவற்றை சுயேச்சையதிகாரமுள்ள கார்ப்பொரேஷன் ஒன்றின் மூலம் நிர் வகிப்பது அவசிய மென்று தோன்றுகிறது. இந்தக் கார்ப்பொ ரேஷன் நிறுவப்படுவதால், வர்த்தக நிறுவனம் ஒன்று வெற்றிகர மாய் இயங்குவதற்கு அவசியமாகத் தேவைப்படுகிற நிர்வாக உரிமையும் நெகிழ்வும் தக்க அளவுக்கு ஏற்படும். இந்தக் கார்ப் பொரேஷனுக்கு மாற்றப்படவிருக்கும் சிறு ரகத் தொழிற்சாலை களின் மதிப்பு 7 கோடியே 60 லட்சம் ரூபாய் என்று கணக்கிடப் பட்டுள்ளது. இதில் 4 கோடி ரூபாய், இந்தக் கார்ப்பொரேஷனின் பங்கு மூலதனமாக அரசாங்கம் செலுத்தும் தொகையாகவும், எஞ்சிய தொகை கார்ப்பொரேஷன் அரசாங்கத்துக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனாகவும் கருதப்படும். துணைமதிப்பீடு களில் இதற்கிணங்க நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைகளை கார்ப்பொரேஷனின் பெயருக்கு மாற்றுவதன் மூலம் கிடைக்கும் தொகை, வரவினங்களில் காட்டப்படும். எனவே, இதன் காரணமாய் கூடுதல் நிதிப் பொறுப்பு எதுவும் ஏற் பட்டுவிடாது. இதற்காகத் துணை மதிப்பீடுகளில் மூலதனக் கடன் தலைப்புகளின் கீழ் இப்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகை, வரவு-செலவுத் திட்ட நடைமுறையை அனுசரித்த தொன்றேயாகும்.

மற்ற மூலதனத் தலைப்புகளின் கீழ் வேண்டப்படுகிற நிதி ஒதுக் கங்கள், திட்ட வேலைகள் வேகமாக நிறைவேற்றப்பட்டு வரு வதையே பொதுவாக பிரதிபலிக்கின்றன. முக்கியமாக, பல சிறு பாசனத் திட்டங்களுக்கு அடையாள மானியங்கள் கோருவதன் மூலம் மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது. சபைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையின் 31–33-ம் பக்கங்களில் "42 பாசன மூலதனச் செலவு" என்கிற கோரிக்கையின் கீழ்ச் சேர்க்கப் பட்டுள்ள பல சிறு பாசனத் திட்டங்களின் விவரங்களை கனம் அங்கத்தினர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஏனைய பல திட்டங்களும் துணை மதிப்பீடுகளில் அடங்குகின்றன. குறிப்பாக, விரைவுத் திட்டத்தின் கீழ் (Crash Programme) இந்திய அரசாங்கம் அளிக்க முன்வந்துள்ள நிதி உதவியை நாம் பயன் படுத்திக்கொண்டு, கழிவுநீரை உபயோகிப்பது பற்றிய திட்டங் களுக்காக பல ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ரூ. 15 லட்சம் அளவிற்குக் கடன்கள் கொடுக்கவும் வகை செய்திருக்கிறோம்.

பருப்பு வகைகள் பற்றாக்குறையைப் போக்கி, அவற்றின் விலை வாசியை நிலைப்படுத்துவதற்காக, மற்ற மாநில அரசாங்கங்களிட மிருந்து அவற்றைக் கொள்முதல் செய்து இம் மாநிலத்தில் நியாய விலைக்கு வழங்குவதற்கான பெரியதொரு திட்டத்தை அரசாங்கம் மேற் கொண்டிருக்கிறது. கடலை, கடலைப்பருப்பு இவற்றைப் பெரு மளவில் அனுப்பும்படி நாம் விடுத்த வேண்டுகோளை, பஞ்சாப், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநில அரசாங்கங்கள் அன்புடன் ஏற்றுள்ளன. 6 கோடியே 11 லட்சம் மதிப்புள்ள 81,600 மெட்ரிக் டன் அளவிற்குக் கடலை, கடலைப்பருப்பு வகைகளை இந்த அரசாங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்ய நாம் ஏற்பாடு

[திரு. எம். பக்தவத்சலம்] [31st July 1965

செய்திருக்கிறோம். துணைமதிப்பீடுகளில் இதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இக்கணக்கில் செய்துள்ள முதலீடு, நாளடைவில் பொதுமக்களுக்கு இவற்றை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வரவினங்களிலிருந்து முற்றிலும் ஈடு செய்யப்படும். எனவே, இதன் காரணமாக மாநில அரசாங்கத்துக்கு நிகர நிதிப் பொறுப்பு எதுவும் ஏற்படாது.

துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய திட்டங்களுக்கு விவர அறிக்கையில் கொடுத்துள்ள விளக்கக் குறிப்புகளைத் தவிர சிறப்பாக எதுவும் சொல்ல வேண்டியதில்லையென்று கூறி, இந்தத் துணை மதிப்பீடுகளைச் சபை ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## VII.—GOVERNMENT RESOLUTION

### Increase in the maximum amount of State Government guarantee for the debentures issued by the Madras Co-operative Central Land Mortgage Bank Limited.

***கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, எனது பெயரிலுள்ள கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

" 1934-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நில அடமான பாங்குகள் சட்டத்தின் 6-வது பிரிவை சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ், மாநில அரசாங்கம், தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடமான பாங்க் லிமிடெட் வழங்கும் கடன் பத்திரங்கள் சம்பந்தமாகத் தாம் வழங்குகிற அதிக அளவு உத்திரவாதத் தொகையை ரூ. 30 கோடி (முப்பது கோடி ரூபாய் மட்டும்) மொத்த மதிப்பு வரையில் அதிகரிக்கலாம் என்று மாநில அரசாங்கத்திற்கு இச்சபை பரிந்துரைக்கின்றது. பாங்க் அவ்வப்போது மீட்கிற கடன் பத்திரங்கள் இதில் அடங்காது. அத்தகைய கடன் பத்திரங்கள் அவை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவிற்காக வழங்கப்படக் கூடாது. மேலும், கடன் பத்திரங்கள் வெளியிடப்படும் ஒவ்வொரு சமயத்திலும் அதற்குரிய வட்டி வீதம் இந்திய ரிசர்வ் பாங்க் அங்கீகரிக்கும் வட்டி வீதத்திற்கு மேற்படக் கூடாது".

MR. SPEAKER: The Resolution is now before the House for discussion.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்திற்கு இந்தச் சபையில் எதிர்ப்பு இருக்குமென்று நினைக்கவில்லை. நானும் இதை ஆதரிக்கிறேன். இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய பாங்கும் கிளைகளும், என்ன பலனை எதிர்பார்க்கிறோமோ அந்தப் பலனைப் பெறும்படியாகச் செய்ய வேண்டுமென்பதற்காக இதிலுள்ள சில குறைபாடுகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த நிறுவனத்தின் தலைவர் இந்தச் சபையில் அங்கத்தினராக இருக்கும் காரணத்தால் அவரும் அமைச்சரும் முயற்சி எடுத்து இப்போது இருக்கிற குறைபாடுகளை நிவர்த்தி செய்வார்கள் என்கிற நம்பிக்கையோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



31st July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

முப்பது கோடி ரூபாய் அளவுக்குக் கடன் பத்திரங்கள் வெளியிடுவதற்கு மத்திய நில அடமான பாங்குக்கு ஜாமீன் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது நியாயமானதுதான். அப்போதுதான் அவர்கள் போதுமான நிதிவசதி பெற்று அந்த நிதி வசதியைக் கொண்டு ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒரு நில அடமான பாங்கு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கம் நிறைவேறுவதற்கு வசதி ஏற்படும் காரணத்தால் இதை ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் இவ்வளவு வசதி செய்து கொடுத்தும் இப்போது நம்முடைய அனுபவம் என்ன? நில அடமான பாங்கிலிருந்து கடன் பெறுவதற்குப் படுகிற கஷ்டத்தைப் பார்க்கிறபோது 20 ரூபாய் வட்டி கொடுத்தாவது கடன் வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலைமைக்கு விவசாயிகள் போகிறார்கள். சீக்கிரமாகக் கடன் கிடைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கை கிடையாது. எனக்குப் பல அனுபவம் உண்டு. கடன் வாங்கி அனுபவம் இல்லை, பல விவசாயிகளுக்குக் கடனுக்காக முயற்சி செய்த அனுபவம் உண்டு. ஒரு அப்ளிகேஷன் போட்டால் முடிவு தெரிய இரண்டு மூன்று வருஷம் ஆகிவிடுகிறது. என்ன நிலையில் இருக்கிறது என்ற தகவல் கிடைக்க வழி இருக்க வேண்டும். ஒரு அப்ளிகேஷன் வந்து ரிஜிஸ்டர் ஆகிய பிறகு மனுதாரருக்கு அது என்ன என்ன நிலையில் இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும். அதோடு ஒரு கால நிர்ணயம் வேண்டும். மூன்று மாத காலம் அல்லது ஆறு மாத காலம் என்று இருந்தாலும் அதற்குள்ளாக இறுதியான பரிசீலனை முடித்து விடவேண்டும். மூன்று வருஷத்திற்கு நீடிப்பது என்பது கூடாது. இதிலே பாங்குகளுக்கு ஒரு கஷ்டம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. சொத்து பெறுமானதுதானா, வில்லங்கம் ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்துத்தான் கொடுக்க வேண்டும். பாங்குப் பணத்தை இஷ்டம் போல் கொடுத்து விடக் கூடாது. அதற்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படக் கூடாது. ஒரு அப்ளிகேஷனைப் பரிசீலனை பண்ணுவதற்கு ஆறு மாதத்திற்கு மேலாகி விட்டால் இன்னொரு முறை வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடு என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு விவசாயி திரும்பத் திரும்ப வாங்கிக் கொடுப்பது என்றால் கஷ்டம். நில அடமான பாங்கைப் பார்த்து விவசாயிகள் பயப்படுகிற நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. பெரும் அளவுக்கு நிலம் வைத்திருக்கக்கூடிய நிலப்பிரபுக்கள் 50,000 ரூபாய்க்கு மேல் கூடச் சுலபமாகக் கடன் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் நேரடியாக அதிகாரிகளோடு கலந்து பேசி காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடிகிறது. நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு முக்கியமாகக் கடன் கொடுக்க வேண்டும். நிலத்தின் மீது இருக்கக் கூடிய கடன்களைத் தீர்த்து மீட்பதற்காகவும் கடன் கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் காலத்தில் கடன் கொடுத்தால் பயன் ஏற்படும். குறிப்பாக, பின் தங்கிய பகுதிகளைப் பொறுத்த வரையில் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் கடன் கொடுக்கும்போது 30 வருஷத்

திற்கு முன்பு கிரயப் பத்திரத்தில் நிலத்தின் மதிப்பு என்ன இருந்ததோ அந்த அளவுக்குத்தான் கொடுக்கிறார்கள். சமீபத்தில் கனம் வெங்கட்டராமன் அதற்கு பொறுப்பேற்றிருந்த போது 20 சதவிதம் அதிகமாக்கினார்கள். அதனால் 200 ரூபாய் கிடைப்பது 220 அளவுக்குக் கிடைக்குமே தவிர பெரும்பயன் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. இன்றைக்கு நிலத்தின் விலை மதிப்பு மிகவும் உயர்ந்திருக்கிறது. ஆகவே, கடந்த ஐந்தாறு வருஷ சராசரி மதிப்பைக் கணக்கிட்டாவது அதன் அடிப்படையில் கடன் வழங்க முயற்சி செய்தால் தான் விவசாயிகள் பம்ப் செட் வைக்கவும், நிலத்தை அபிவிருத்தி செய்யவும் வழி ஏற்பட்டு உண்மையிலேயே நில அடமான பாங்கின் மூலம் பலன் கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்படும். இந்த இரண்டு யோசனைகளையும் கவனிக்க வேண்டும். வில்லங்கத்தைப் பற்றிப் பரிசீலனை செய்ய சுலபமான வழி என்ன, நில அடமான பாங்கு கடன் கொடுப்பார்களானால் அரசாங்கத்தின் பொறுப்பு அடுத்தபடியான பொறுப்பாக இருக்க வேண்டுமென்று சட்டத்தைத் திருத்த முடியுமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு வேறு சில ராஜ்யங்களில் இருப்பதாக அறிகிறேன். நிர்வாகத்தைத் துரிதமாக நடத்த மத்திய பாங்குகாரர்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று பார்ப்பதற்குக் கூட்டுறவு இலாகாவின் கண்காணிப்பு பலன் அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று கூறி இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். எஸ் செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பிரேரேபித்த இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன். குறிப்பாக, திருநெல்வேலி ஜில்லா பனைமர ஜில்லா என்ற பெயர் பெற்றது. நில அடமான பாங்குகளில் நஞ்சை நிலத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து அதன்பேரில் கடன்கள் வழங்கப்படுகின்றன. அந்த ஜில்லாவைப் பொறுத்தவரை மாசூலுக்கு முக்கியமான மரம் பனைமரம். திருச்செந்தூர் தாலுகாவைப் பொறுத்தவரை உடை மரம்கூட மாசூல் தரக்கூடிய மரம், வருஷா வருஷம் உடைகளை எல்லாம் அப்புறப்படுத்தும்போது நல்ல மாசூல் தரக்கூடியதாக இருக்கிறது. இன்று பனைமரத்தின் பேரிலோ, உடை மரத்தின்பேரிலோ கடன் கொடுக்கப்படுவதில்லை. சில வருஷங்களுக்கு முன்னால் திருநெல்வேலி ஜில்லா நில அடமான பாங்கு வருஷாந்திர மாநாடு நடத்தினார்கள். அப்போதே கூட இதுசம்பந்தமான முறையீடு ஒன்றை அந்த ஜில்லாவிலிருந்து திரு. இராமலிங்கம் அவர்கள் தலைவராக இருந்தபோது கொடுக்கப்பட்டது. நில அடமான பாங்கு எவ்வளவு அதிகபட்சக் கடன் வழங்க முடியுமோ அந்த அளவுக்கு வழங்க அரசாங்கம் வசதி செய்கிறபோது எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை, குறிப்பாக திருச்செந்தூர் தாலுகாவைப் பொறுத்தவரை இந்தச் சொத்துக்களை—பனை மரங்களையும், உடை மரங்களையும்—புஞ்சை நிலத்தோடு மதிப்பிட்டுக் கடன் கொடுப்பதற்குரிய முறையில் வழி செய்ய வேண்டும்.



அதைப் போலவே கடன் வழங்கும் திட்டங்களில் சர்க்கார் சில இனத் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்க முற்பட்டார்கள். இலங்கையிலிருந்து வந்தவர்களுக்குக் கடன் வழங்கும்போதும், பொற்கொல்லர்களுக்குக் கடன் வழங்கும்போதும் ஜாமீன் கேட்கிறபோது கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சுட்டிக்காட்டியது போல் வில்லங்க சர்டிபிகேட் பெறுவதிலே இருக்கக் கூடிய தாமதத்தைத் தவிர்க்க வேண்டும். அதோடு கடன் வழங்குவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ரிஜிஸ்ட்ரேஷன் அதிகாரிகளிடத்தில் போய்க் கூட இந்த விவரத்தைத் தெரிந்து அந்த அடிப்படையில் கடன் வழங்கலாம் என்று கூட அரசாங்கம் ஸ்பெஷலாக உத்தரவிட்டார்கள்.

அந்த நிலைமையில் குறுகிய காலக் கடன்கள் இருக்குமானால் ஓரளவு ஆயிரத்திற்கு உட்பட்ட கடன் இருக்குமானால் குறிப்பிட்ட தொகை வரை கூட அதற்கு ஒரு கடன் வழங்குகிறபோது நில அடமான பாங்க் அதிகாரிகள் சென்று சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் சென்று வில்லங்கங்களின் விவரங்களைத் தெரிந்து கொண்டு அதன் அடிப்படையில் கொடுக்க முடியாதா? இந்த தாமதத்தை தவிர்க்க முடியாதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஜாயின்ட் பட்டாதாரர்களாக இருக்கக் கூடியவர்களுக்கு எந்தவித விமோசனமும் இல்லை. ஜாயிண்ட் பட்டாதாரர்களாக இருந்து கடன்பட்டிருக்கக்கூடியவர்கள் தங்கள் நிலத்தின் பேரில் உள்ள சுமையை நீக்கும்போது ஜாயின்ட் பட்டாவைத் தனிப்பட்டாவாக சப் டிவிஷன் செய்யவேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. அதிலுள்ள சிரமங்கள் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆகவே இந்தச் சிரமத்தை எந்த அளவில் துரிதமாகப் போக்க முடியுமோ அந்த விதத்தில் போக்கி அப்படிப்பட்டவர்களுக்கு சிரமம் இன்றி, காலதாமதமின்றி கடன் வழங்க எந்தளவிற்கு வசதி செய்யலாம் என்பதைப் பற்றியும் பரிசீலிக்கவேண்டும். ஜாயிண்ட் பட்டாவாக இருந்தாலும் கூட 'In addition to the landed properties which are being shown as securities என்ற அளவில் பெர்ஸனல் ஜாமீன் என்று வைத்துக் கொண்டு ஜாயிண்ட் பட்டாவாக இருந்தாலும் கூட பெர்ஸனல் செக்யூரிட்டீஸ், பெர்ஸனல் ஷ்யூரிட்டீஸ் வைத்துக் கொண்டு அவர்களின் கடன் சுமையை நீக்குவதற்கு வசதி செய்து கொடுக்க முடியுமா என்பதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

**திரு. மு. சண்முகம் :** கனம் தலைவர் அவர்களே, நில அடமான பாங்குகள் சம்பந்தமாகக் கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற பிரேரணை மீது என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதற்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கள் நில அடமான பாங்குகளில் விவசாயிகளுக்குச் சீக்கிரத்தில் கடன் கொடுக்கப்படுவதில்லை, ஆகவே சீக்கிரத்தில் அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகைகள் செய்ய

[திரு. மு. சண்முகம்] [31st July 1965

வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நில அடமான பாங்குகளில் சாதாரணமாக நிலத்தை அடகு வைத்துக்கொண்டு கொடுக்கப்படும் கடன்கள், நீடித்த காலக் கடன்கள் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டு நீடித்த காலக் கடன்கள் இவை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி நீடித்த காலக் கடன்கள் கொடுக்கும்போது நிலங்களின் டைட்டில் டீட்ஸ், வில்லங்கங்கள் இவைகள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்பதைக் கவனிப்பது என்பது முக்கியமான கடமையாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பின்னர் நிலங்களைப் பரிசீலனை செய்யும்போது, கடன் பெறக் கூடிய நிலங்கள் வில்லங்கள் இல்லாத நிலையில் இருக்கிறதா என்பதைக் கவனிப்பதில் சாதாரணமாக இரண்டு மூன்று நபர்கள் மாறி மாறி அந்த அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருப்பதால் சாதாரண கால தாமதம் ஏற்படுவதைத் தவிர வேண்டுமென்று கால தாமதம் ஏற்படுத்தப்படுவதில்லை. வில்லங்கங்களை எடுக்க பாங்காரே முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதால் அதற்காக ஏற்படும் சாதாரண கால தாமதம்தான் ஏற்படுகிறதே தவிர நீடித்த காலம் எடுப்பது, வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் பாங்குகள் இருப்பதாக ஒன்றும் தெரியவில்லை. நிலங்களின் மீது கடன் கொடுக்கும்போது அபிவிருத்திக் காரியங்களுக்காக மட்டும் தான் கடன் கொடுக்க வேண்டுமென்ற நிலை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாக ரிசர்வ் பாங்காரால் அறிவிக்கப்பட்டு அபிவிருத்திக் காரியங்களுக்காக மட்டும்தான் கடன் கொடுப்பதாக ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. நீண்ட காலமாகவே விவசாயிகள் பல காரியங்களுக்காகக் கடன் பட்டு, தங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்தக் கூடிய நிலையில் பல கடன்கள் பட்டிருக்கிறார்களே தவிர அபிவிருத்திக் காரியங்களுக்காக மட்டும்தான் அவர்கள் கடன் பட்டிருந்தார்கள் என்றால் அது ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலை அல்ல. விவசாயிகள் விவசாய அபிவிருத்திக்காகத் தான் கடன் பட்டதாக பாங்காருக்குத் தெரிவித்திருந்தாலும் கூட அது உண்மையானதாக இருக்க முடியாது. ஆகவே, விவசாயிகளுக்கு நிலத்தின் மீது அபிவிருத்திக் காரியங்களுக்குத் தான் கடன் கொடுக்க வேண்டும் என்று நில அடமான பாங்குகளுக்கு அறிவுரை வழங்கியிருப்பது அவ்வளவு பொருத்தமானதல்ல. அப்படியிருந்தால் அது உண்மையிலே விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவுவதாக இருக்காது. வாழ்க்கையில் ஏற்படும் இதர செலவுகளையும் ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் கடமைப் பட்டிருப்பதால் அப்படி அவற்றிற்காக ஏற்பட்டிருந்த செலவுகளையும் நிலத்தில் ஈடு செய்து பணம் பெற்று அக் கடனை தீர்க்கக் கூடியவர்களாக இருப்பதால் ஓரளவு பழைய கடன்களாக இருந்தாலும் கூட அவற்றைத் தீர்ப்பதற்கு நில அடமான பாங்க் மூலம் கடன் பெற்று தீர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அபிவிருத்தி வேலைகளுக்கு மட்டும்தான் கடன் கொடுப்பது என்றிருந்தால் அது நில அடமான பாங்க் திட்டத்தின் அபிவிருத்திக் குறைவு என்றுதான் கருதுகிறேன். எந்த



31st July 1965] [திரு. மு. சண்முகம்]

விவசாயியும் சதா காலமும் அபிவிருத்தித் திட்டத்திற்காகவே கடன் பெறுவது என்பது முடியாத காரியம். அபிவிருத்தித் திட்டங்கள் என்றால், பம்செட்ஸ் போடுவது, கிணறுகள் வெட்டுவது, நிலத்தைச் சீர்படுத்துவது போன்றவைகள்தான் அபிவிருத்தித் திட்டங்களாகக் கருதப்படுகின்றன. எந்த ஒரு விவசாயியும் எப்போதும் அதையே செய்து கொண்டிருக்க முடியாது. தங்கள் குடும்பங்களில் ஏற்படும் பல்வேறு காரியங்களுக்கும் கடன் வாங்க வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. ஆகவே அபிவிருத்தித் திட்டங்களுக்கு மட்டும் கடன் கொடுப்பது என்பது நில அடமான பாங்க் திட்டத்திற்கே புறம்பானதாகும். அப்படி அந்தக் காரியங்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும் என்றால் நில அடமான பாங்க் இல்லாமல் இருப்பதே நல்லது. அல்லது இருந்தும் இல்லாமல் இருக்கக்கூடிய நிலையில்தான் இருக்க முடியும். சில கனம் அங்கத்தினர்கள் 50,000, 60,000 ரூபாய்க்கு மேல் கடன் பட்டவர்களுக்குத்தான் நில அடமான பாங்கிலிருந்து வசதி செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படி 50,000, 60,000 ரூபாய் நில அடமான பாங்கிலிருந்து கடன் கொடுக்கும் திட்டமே கிடையாது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். ஒரு தனிப்பட்ட நபர் 10,000 ரூபாய்க்கு மேல் நில அடமான பாங்கியிலிருந்து கடன் பெறத் திட்டம் கிடையாது. ஆகவே 10,000-க்கு உட்பட்ட நிலையில்தான் கடன் பெறமுடிகிறது. விவசாயிகளுக்கு இந்த நில அடமான பாங்குகள் மூலம் பயன் பெறும் திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்தி இருப்பதில் இதைத் தவிர வேறு வகையான பலன்களை அரசாங்கத்திலிருந்து விவசாயி அடைந்தான் என்று கூறமுடியாது. அப்படிப்பட்ட திட்டம் இதைத் தவிர வேறு ஒரு திட்டம் இருப்பதாக நான் கருத முடியாது. இந்த நில அடமான பாங்குகளில் இருந்து விவசாயிகள் கடன் பெறுவதில், காலதாமதமின்றி அவர்கள் கடன் பெறுவதில் பல வகைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கடன் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டபோது மத்திய நில அடமான பாங்குக்கு வந்துதான் சாங்ஷன் ஆகவேண்டுமென்ற நிலை இருந்தது. இப்போது 3,000 ரூபாய் கடன் பெற ஒரு விவசாயி அருகதையுள்ளவன் என்றால் அதை பிரதம நில அடமான பாங்கே கொடுத்து வேண்டிய வசதிகளைச் செய்து குறுகிய காலத்தில் சீக்கிரத்தில் அதை பைசல் செய்ய முடிகிறது. தக்க வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அதன்படி அநேக கடன்களை விவசாயிகள் சுலபத்தில் பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். நிலங்களின் மீது மதிப்பீடு செய்யும்போது இதற்கு முன்னிருந்ததை விட்டு விட்டு இந்தக் கடன் விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டதில் இருந்து அதற்கு முன் ஐந்து ஆண்டுக்குள் என்ன மதிப்பு இருந்ததோ அதை மதிப்பீடாக எடுத்துக் கொண்டு கடன் கொடுக்கப்பட்டு

வருகிறது. தற்கால மதிப்பைப் பொறுத்துக் கடன் கொடுக்கப்படுவதால் முன்பிருந்ததைவிட இப்போது விவசாயிகளின் கஷ்டம் ஓரளவு நிவர்த்திக்கப்பட்டு இருக்கிறது. தற்கால மதிப்பைப் பெற்றுத்தான் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. நில அடமான பாங்குகள் கடன் கொடுப்பதில் பின்தங்கிய பகுதிகள் என்ற நிலை இருப்பதாகத் தெரியவில்லை. எந்த இடத்திலும் நிலத்தை அடமானம் வைத்துக் கொண்டு கடன்கள் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

ஜாயிண்ட் பட்டதார்களுக்குக் கடன் கிடைப்பதில் சில கஷ்டங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஜாயிண்ட் பட்டதார்கள் கடன் கேட்கும்போது, கடன் கேட்பவர்களைத் தவிர மற்றவர்கள் இந்த மனுவில் கேட்டிருக்கும் கடனைக் கொடுப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்ற வாக்குமூலத்தை நில அடமான பாங்குக்கு எழுதிக் கொடுத்துவிடுவார்களேயானால் கடன் கொடுப்பதில் எந்த விதமான கஷ்டமும் இருப்பதற்கில்லை என்று தெரிகிறது. ஜாயிண்ட் பட்டதார்களில் சேர்ந்திருக்கும் மற்றவர்கள் கடன் கேட்டிருக்கும் நபருக்கு இத்தகைய ஒரு வாக்குமூலத்தைக் கொடுத்துவிட்டால் கடன் கிடைப்பதில் எந்தவிதமான கஷ்டமும் இராது என்று நம்புகிறேன். அரசாங்கம் சமீபத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஏற்பாட்டின் படி ஒவ்வொரு பிர்க்காவிலும் சர்வேயர்களை நியமித்து, ஜாயிண்ட் பட்டாவாக இருக்கும் நிலங்களை எல்லாம், யார் எல்லாம் தங்களுக்குத் தனியாகப் பிரித்துத் தரவேண்டும் என்று கோருகிறார்களோ அவர்களுக்குத் தனியாகப் பிரித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஆகவே தனியாகப் பிரித்துக் கொள்வதிலும் கஷ்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். விவசாயிகளுக்கு நில அடமான பாங்க் ஒன்று தான் நல்ல முறையில் உதவி செய்யக் கூடிய திட்டமாக இருக்கிறது. இதில் நில அபிவிருத்திக்கு மட்டும் தான் கடன் கொடுக்கப்படும் என்றிருப்பதை நீக்கிவிட்டு புதிய முறையில் விவசாயிகளுக்கு உதவக்கூடிய முறையில் கடன்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். தண்டாயுதபாணி:** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக, அடமான பாங்க் விவசாயிகளுக்கு நல்ல முறையில் சேவை செய்து வருகிறது என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஆனால் விவசாயிகள் வாங்குகிற கடனுக்கு எவ்வளவு வட்டி கொடுக்கப்படுகிறது என்பதைப் பார்த்தால், அதாவது 10 ஆயிரம் ரூபாய் கடன் வாங்குகிறோம் என்றால், 15 ஆண்டு காலத்தில் அதைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது 17,300 ரூபாய் திருப்பி செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏறக்தாழ



ஏழாயிரத்துச் சொச்சம் ரூபாய் வட்டியாகச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படியிருந்தும் கூடக் கடனுக்காக மனு செய்து ஆறு மாதம் ஒரு வருடம் கழித்துத்தான் கடன் கிடைக்கிறது. இது போன்ற சிக்கல்களில் அரசாங்கம் தலையிட்டு அதை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத்திற்காக விவசாயிகள் அரசினருக்கு அக்ரிமெண்ட் எழுதி கொடுத்திருந்தால், அவர்களுக்குக் கடன் கொடுக்க முடியாது என்று சொல்லி, அவர்களுடைய கடன் மனுக்களைத் திருப்பிஅனுப்பிவிடுகிறார்கள். 1929-ம் ஆண்டு கல்லணை கால்வாய் ஏற்படுத்தியபொழுது, அதிலுள்ள நீர்ப் பாசன வசதி பெறும் நிலங்களிலுள்ள விவசாயிகள் கிஸ்தி செலுத்த வேண்டும் என்றும், அதற்காகத் தங்கள் சொத்தை அடமானம் வைத்து அரசாங்கத்திற்கு அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலங்களுக்கெல்லாம் கடன் கொடுத்து வருகிறோம். ஆனால் புதிதாக பம்பிங் ஸ்கீம் வைப்பதில் அரசினருக்கு அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்திருப்பதன் காரணமாகவும் அதில் தங்கள் நிலங்களைச் சேர்த்திருப்பதன் காரணமாகவும், இப்பேர்ப்பட்ட நிலங்களுக்குக் கடன் கொடுக்க முடியாது என்று மறுத்து மனுவைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். இது விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இந்தக் கஷ்டத்தைப் போக்குகின்ற வகையில் அரசாங்கம் ஏதாவது நிவர்த்தி செய்து எளிதான முறையில் கிடைப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சர்க்காரிலிருந்து அஸைன்மெண்ட் செய்து கொடுத்துவிட்ட நிலங்களுக்குக்கூட கடன் கிடைப்பதில் கஷ்டம் ஏற்படுகிறது. ஒருவருக்கு என்று தனியாக அஸைன்மெண்ட் செய்து கொடுத்த பின்பும், அவருடன் கூடப் பிறந்தவர்கள் எல்லாம் கடன் மனுவில் கையொப்பம் இட வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யப்படுகிறது. தனியாக அஸைன்மெண்ட் செய்து விட்ட பிறகும் மற்றவர்களுடைய கையொப்பமும் தேவை என்று விதி இருப்பது உண்மையில் மிகவும் சிரமமாய் இருக்கிறது. தனிப்பட்ட நபருக்கு அஸைன்மெண்ட் செய்து கொடுத்துவிட்ட பின்னால் அதில் கடன் கொடுப்பதற்கு எந்தவிதமான நிர்ப்பந்தமும் இருப்பது நியாயமல்ல. இது போன்ற சிரமங்களையும் நீக்கி விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சொத்துக்களுக்கு மதிப்புப் போடுவதில் மிக மிக நீண்ட காலத்திற்கு முன்னால் என்ன விலைக்கு வாங்கப்பட்டதோ அந்த அடிப்படையில் இப்போது கடன் வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில் 40 சத விகிதக் கடனை வழங்குகிறோம். அந்த நிலைமையை மாற்றி கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் குறிப்பிட்ட நிலத்திற்கு என்ன விலை இருந்ததோ, அதில் 40 சத

விகிதம் அளவுக்குக் கடன் கொடுத்தால் விவசாயிகளுக்குச் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது நிலத்தின் மதிப்பு மிகவும் உயர்ந்திருக்கிறது. அதை மனதில் கொண்டு கடன் வரம்பை 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் என்று உயர்த்தினால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, நில அடமான பாங்க்குகள் நல்லமுறையில் சேவை செய்து வருகின்றன. இதில் இருக்கிற சிறிய சிக்கல்களை எல்லாம் நீக்குகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்தால், இன்னும் நல்ல முறையில் இந்த பாங்கு-கள் விவசாயிகளுக்குப் பயன்படும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். கடன் வழங்குகின்ற நேரத்தில் எதற்காகக் கடன் வழங்கப்படுகிறது என்பதைக் காட்டுவதற்காக ஒரு ப்ரோ நோட் தயார் செய்து, அதை ரத்து செய்து கொடுக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இதில் உண்மையிலேயே கடன் இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று சொல்ல முடியும். குறிப்பாக இந்தக் கடனைத் தீர்ப்பது மாதிரி காண்பிப்பதற்காக தங்கள் உறவினர் பெயருக்கோ அல்லது நண்பர்கள் பெயருக்கோ நோட்டைத் தயார் செய்து பின்னால் ரத்து செய்து கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி ஒழுங்கான முறையில் கடன் கொடுப்பதற்கான வழிமுறைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. டி. கார்ச்சா கவுடர்** : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். ரூ. 30 கோடி அளவுக்கு மத்திய நில அடமான பாங்க் வெளியிடும் டிபெஞ்சர்களுக்கு உத்திரவாதம் கொடுக்கின்ற இந்தத் தீர்மானம் நல்லதொரு திட்டம். மத்திய நில அடமான பாங்க் டிபெஞ்சர்களுக்கு யாரிடம் வாங்கப்படுகிறது என்பதைச் சற்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக, அவ்வப்போது வெளியிடப்படும் டிபெஞ்சர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கிக் கொள்கிறார்கள். அதாவது, மத்திய கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் மார்க்கெட்டிங் கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் பெருவாரியான டிபெஞ்சர்களை வாங்கிக் கொள்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, நமக்குள்ளேயே நாம் திருப்பித் திருப்பி வாங்கிக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை மாற்றி இத்தனை சதமானம் என்று நிர்ணயித்து அதைத் தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்க வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்று கூற ஆசைப்படுகிறேன்.



கடன் கிடைப்பதில் பல தொல்லைகள் இருக்கின்றன என்று பலர் இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகக் கூட்டுப் பட்டா இருக்கின்ற இடங்களில் பெருவாரியான தொல்லைகள் ஏற்படுகின்றன. கூட்டுப் பட்டா இருந்தால் அதிலிருந்து கடன் பெறுவதற்கு அப்ளிகேஷன் தயார் பண்ணுவதற்கே ஒரு வருடம் இரண்டு வருடம் ஆகிவிடுகிறது. குறிப்பாக நீலகிரி ஜில்லாவில் தனிப்பட்ட முறையில் பட்டாக்கள் இருப்பது இல்லை. கூட்டுப் பட்டாவிலிருந்து கடன் பெற வேண்டுமென்றால் 50 பேர்கள் 100 பேர்கள் கையெழுத்துப் போட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. இந்த நியதிகளை மாற்றி, யார் யார் கடன் வாங்குகிறார்களோ அவர்களுக்கு நிலம் இருக்கிறதா இல்லையா என்று கிராம அதிகாரிகள் கொடுக்கும் சர்டிபிகேட்டை எடுத்துக் கொண்டு கடன் கொடுக்கின்ற வகையில் வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். ராமசாமி நாயுடு** : கனம் சபாநாயகர் அவர்களே, கிராம விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்கு உதவியாக சர்க்கார் மத்திய நில அடமான பாங்குகள் எழுப்பும் கடன் பத்திரங்களுக்கு உத்திரவாதம் கொடுப்பது மிகவும் சிலாகிக்கத் தகுந்த விஷயம். இதை நான் வரவேற்கிறேன். கிராம விவசாயிகளுக்கு நில அடமான பாங்குகள் மூலம் கடன் கொடுப்பதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். சர்க்காரிலிருந்து 3,000 ரூபாய் கடன் வாங்குவது என்று சொன்னால், அதாவது நில அபிவிருத்திக்கு—கிணறு வெட்டுவதற்கு, நீர் ஏற்றும் இயந்திரம் அமைப்பதற்கு—என்று வாங்கும் கடனை ஒரு மாதம் அல்லது இரண்டு மாதத்தில் வாங்கி விடலாம். ஆனால் நில அடமான பாங்கிலிருந்து கடன் வாங்குவதற்குத் தன்னுடைய மற்ற நிலங்களை எல்லாம் எழுதி வைத்த பின்னாலும் கடன் கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது. மேலும் புதிதாகச் சட்டங்கள் வந்த பிறகு குடும்பங்களில் பலருக்குச் சொத்து உரிமை இருப்பதன் காரணமாக—ஒரு நிலத்தை எழுதிக் கொடுத்து கடன் வாங்க வேண்டும் என்று வரும் போது, அதில் கடன் கேட்டவருடைய பேரன், பேத்தி இவர்களுடைய கையெழுத் தெல்லாம் வாங்க வேண்டும் என்ற நியதியிருப்பதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்த முறையை நில அடமான பாங்குகள் மிகக் கண்டிப்பாக அனுசரித்து வருகின்றன. சர்க்காரிலிருந்து கொடுக்கும் கடனுக்கு நிலத்தை முதலீடாக வைத்து வாங்கி, கடனைக் கொடுக்காவிட்டால் நிலத்தை ஏல மிட்டுக் கொள்ளலாம் என்று இருப்பது போல, நில அடமான பாங்குகள் வாங்கும் கடனுக்கு அரசாங்கம் உத்திரவாதம் அளிக்கும் போது, அவர்கள் கொடுக்கும் கடனுக்குச் சர்க்காருக்கு இருக்கிற அந்த உரிமையைக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என்பது எனது கோரிக்கை.

மேலும் நில அடமான பாங்க் கடன் கொடுக்கும்போது நில அபிவிருத்திக் கென்று ஒரு பெரும் தொகையையும், முன் கடன் தீர்க்க என்று சிறு தொகையையும் கொடுக்கிறது. இப்போது தேசீய அபிவிருத்தி வட்டாரங்கள் ஏற்பட்டதன் காரணமாகக் கிணறுகள் வெட்டுவதற்கும், நீர் இறைக்கும் இயந்திரங்கள் வைக்கவும் மற்றும் விவசாயக் கருவிகள் வாங்கவும் ஏராளமாக, அதுவும் தாராளமாகக் கடன் கொடுத்து வந்து விட்டார்கள். லட்சக் கணக்கில் குறுகிய பிரதேசத்தில் கடன் கொடுக்கும்போது அபிவிருத்திக்கு வேண்டிய கடன்தான் மேலும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. நில அடமான பாங்க் கடனை அபிவிருத்திக்குக் கடன் வாங்கியதற்கு ஈடு செய்ய உபயோகிக்கலாம் என்ற முறையில் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. தஞ்சாவூர், கீழ் பவானி, மேட்டூர் தண்ணீர் பாயும் மற்ற இடங்களிலே என்ன அபிவிருத்தி செய்யப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அங்கே தான் தாராளமாகக் கடன் கொடுக்க முடிகிறது. ஏனென்றால் ஏக்கர் 10,000 ரூபாய் அளவுக்கு இருக்கிறது. இரண்டு ஏக்கர் நன்செய் நிலத்தைக் காட்டி 10,000 ரூபாய் வாங்கிக் கொண்டு போகிறார்கள். அங்கே என்ன அபிவிருத்தி செய்யப் போகிறார்கள்? வாய்ப்புகளெல்லாம் கட்டியாகி விட்டது. வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. கும்பகோணம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நில அடமான பாங்க்குகளால் அதிகக் கடன் கொடுக்கப்படுகிறது. ஏதோ கண்ணைக் கட்டுவது போல் தோன்றுகிறது, ஏமாற்று வித்தை என்று சொல்லவில்லை, அந்த மாதிரி இருக்கிறது. புன்செய்க்காரன் வாங்க வேண்டுமென்றால், தாத்தா, அப்பா அத்தனை பேர்களுடைய நிலத்தையும் காட்டிக்கூட வாங்க முடியவில்லை. கோயம்புத்தூரில் இரண்டு ஏக்கர் வைத்திருக்கிறவன் அந்த அளவுக்கு வாங்க முடியவில்லை. புன்செய் நிலத்தை அபிவிருத்தி செய்வதால், வெட்டப்பட்ட கிணற்றிலிருந்து பாசனம் ஏற்படுத்தப்பட்டு, நீர் இறைக்கும் யந்திரம் வந்துவிட்டால் வரும் வருமானம் நன்செய் நிலத்தில் வருவதைவிட நான்கு பங்கு இருக்கும்போது நன்செய்க்கு உள்ளதை ஏன் புன்செய்க்கும் வைக்கக் கூடாது? நன்செய் நிலம் 10,000 ரூபாய் என்று இருந்தாலும் எல்லாம் செய்து கடைசியில் வருமானம், நிகர வருமானம் வருவது 500 ரூபாய் தான் இருக்கும். ஆனால் அதே நேரத்தில் வாழை, கரும்பு, மிளகாய் போன்றவற்றைப் பயிரிடும்போது ஏக்கருக்கு 1,000 ரூபாய் 2,000 ரூபாய் வருமானம் வருவதாக இருக்கிறது. அந்த நிலத்தின் மதிப்பும் 2,000 ரூபாய் தான். இந்த நிலை மிக அசம்பாவிதமாக இருக்கிறது.

இந்தத் தீர்மானத்தின் மூலம் காரண்டி கொடுப்பது நல்லது என்று சொல்லிக் கொண்டு கொடுக்கும் பணம் வாஸ்தவத்தில் சிரமப்படும் விவசாயிகளுக்கு நல்ல முறையில் போய்ச் சேரும்





முறையில் நடைமுறையை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நெ. சா. இராமலிங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இப்போது சபையிலே பேசிய கனம் அங்கத்தினர்கள் தீர்மானத்தை ஆதரித்தாலும், சில குறைபாடுகளை எடுத்துக் கூறினார்கள். கனம் அங்கத்தினர்களிடையே உள்ள சில தப்பு அபிப்பிராயங்களைப் போக்க சிலவற்றை விளக்க ஆசைப்படுகிறேன். கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சில விஷயங்கள் சொன்னார்கள். நில அடமான பாங்க் 50,000 ரூபாய், 60,000 ரூபாய் கொடுக்கிறது என்று சொன்னார்கள். அதிகமாகக் கொடுக்கக் கூடியது 10,000 ரூபாய் தான். நில அபிவிருத்திக்கு வேண்டுமென்றால் அதற்கு மேல் 5,000 ரூபாய் கொடுக்கலாமே தவிர, மொத்தத்தில் 15,000 ரூபாய்க்கு மேல் கொடுக்க முடியாது.

மதிப்பீடுகள் பற்றி கனம் அங்கத்தினர்கள் திரு. தண்டாயுதபாணி அவர்களும், திரு. கலியாணசுந்தரம் அவர்களும் பழைய கால மதிப்பை வைத்துக்கொண்டு மதிப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது அப்படி அல்ல. சென்ற ஐந்து வருஷங்களில் என்ன விலை இருந்ததோ அதற்கு ஆவரேஜ் போட்டுக் கொடுக்கிறோம். அவர்களுக்கு உள்ள தப்பு அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கக் கூடிய விதிகளைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. காமராஜ் அவர்கள் தலைமையில் இருக்கும் போது நாங்களெல்லாம் டெபுடேஷன் போய் கேட்டுக்கொண்ட பிறகு, விதிகள் மாறி இப்போது ஐந்து வருஷ ஆவரேஜ் போட்டுக் கொடுக்கிறோம்.

அடுத்தபடியாக, நில அடமான பாங்க் கடன் கொடுப்பதில் இரண்டு வருஷங்கள் ஆகின்றன என்று சொன்னார்கள், ஒன்றிரண்டு இடங்களில் வேண்டுமானால் அந்த மாதிரி இருக்கலாமே தவிர, சாதாரணமாக மூன்று மாதங்களில் கொடுத்து விடுகிறோம். ஒன்றிரண்டு இடங்களில் நாளாகி இருக்கலாம். அதற்குக் காரணம் மத்திய நில அடமான பாங்கோ அல்லது பிரதம நில அடமான பாங்கோ அல்ல. விண்ணப்பதாரர்கள்தான் சரியான ரிக்கார்டுகள் கொடுக்க இயலாமல் இருக்கிறார்கள். கடன் கொடுப்பது சட்டத்திற்கு உட்பட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எங்காவது ஏதாவது தவறுகள் இருக்கிறது என்றால் ரிஜிஸ்ட்ரார் அவர்களும், மத்திய நில அடமான பாங்கும் பரிகாரம் தேடக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இப்போது இந்தச் சபையிலே சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அதில் இருக்கும் இடைஞ்சல்களை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். சென்ற வருஷம் மூன்று கோடியே ஐம்பத்தொன்பது லட்சம் ரூபாய்க்கு மேல் நில அடமான பாங்க்கிலிருந்து கொடுத்திருந்தாலும் இந்த ஆண்டு 2¾ கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது. அந்த அளவுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது சென்ற 15 நாட்களுக்குள் சங்கடம் வந்திருக்கிறது. ஜூன் 25-ம் தேதி மத்திய நில அடமான பாங்க் ஸ்டேட் பாங்க்கில் என்ன தொகை வாங்கியதோ அதைத்தான் வாங்க முடியும் என்று சொல்லுகிறார்கள். இதுவரையில் ஸ்டேட் பாங்க் கடனை வாங்கி, கடனைக் கொடுத்து விட்டு அதற்கு மேல் டிபெஞ்சர் இஷ்யூ செய்து கடனை கொடுத்து வந்தோம். 275 லட்சம் ரூபாய் வரையில் அனுமதித்திருந்தாலும் ஜூன் 25-ம் தேதி நில அடமான பாங்க் வாங்கியிருந்ததற்கு மேல் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஜூன் மாதம் 25-ம் தேதி 10 லட்சம் ரூபாய்தான் வாங்கியிருக்கிறோம், இப்போதே 20 லட்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. உடனே 10 லட்சம் ரூபாயைக் கொடு என்று உத்திரவு வந்திருக்கிறது. அதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது ராஜ்யத்திலே நாம் எல்லா பாய்ச்சல் வசதிகளையும் செய்து விட்டோம் என்று சொல்லுகிறோம். இனி மேல் செய்யக் கூடிய நில அபிவிருத்தி எல்லாம் கிணறு வெட்டு வதுதான். கிணறுகள் வெட்டி அபிவிருத்தி செய்யக் கூடிய வசதிகள் இருக்கின்றன. புதுக்கோட்டை பகுதியில் கிணறுகள் வெட்டவேண்டுமென்று திட்டம் போட்டு அக்ரிகல்சுரல் ரீ-ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து பணம் வேண்டுமென்று சொல்லி இன்று ஒரு மாநாடு நடந்தது. ரிசர்வ் பாங்க் டெபுடி கவர்னர் அவர்கள் கிணறு வெட்ட அக்ரிகல்சுரல் ரீ-ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் பணம் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டதாகச் சொல்லி விட்டார்கள். நமது ராஜ்யத்திலே இனிமேல் செய்யக் கூடியது கிணறு வெட்டுவது ஒன்றுதான். இதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து அக்ரிகல்ச்சுரல் ரீ-ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து வேண்டிய பணத்தை உதவி செய்யுமாறு கேட்க வேண்டும். இப்போது புதுக்கோட்டையில் ஒரு திட்டமும், கோயம்புத்தூரில் ஒரு திட்டமும் தயாராக இருக்கின்றன. அக்ரி





கல்ச்சுரல் ரீ-ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து பணம் வந்தவுடன் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் முன்பு சொன்னபடி கடன்கள் கொடுப்பதில் காலதாமதம் ஆவது அவர்களால்தான்—விண்ணப்பதாரர்களால்தான். அவர்களால் வேண்டிய தஸ்தாவேஜுகள் கொடுக்க முடியவில்லை. அதோடு அரசாங்கத்திற்கு அடுத்தபடி நில அடமான பாங்குக்கு சார்ந்து இருக்கும் வகையில் முதல் பாத்தியதை வைத்துவிட்டால் 10-30 a.m.
இவ்வளவு காலதாமதம் ஆகாது, அதைப் பற்றி அரசாங்கத்திற்கு எழுதினோம். அரசாங்கத்தார் அதைப் பரிசீலித்து அவ்வாறு செய்வதற்கில்லை என்று எழுதி விட்டார்கள். மகாராஷ்டிரம், குஜராத் போன்ற இடங்களில் அதேமாதிரி இருக்கிறது. அதை மறுபடியும் பரிசீலனை செய்து, நில அடமான பாங்குக்கு அரசாங்கத்திற்கு அடுத்தபடியான பாத்தியதையை வைத்து விட்டால் இந்தக் காலதாமதம் அவ்வளவைக் குறைத்து விடலாம். அதிலிருந்து சீக்கிரம் பணம் கொடுப்பதற்கு வசதி ஏற்படும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த 2, 3 விஷயங்களையும் அரசாங்கம் நல்ல முறையில் பரிசீலனை செய்து கூடிய சீக்கிரம் அமுலுக்குக் கொண்டு வந்தால், நில அடமான பாங்கு தொடர்ந்து நல்ல முறையில் உதவி செய்வதற்கு வசதி ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, நில அடமான பாங்கு 30 கோடி ரூபாய் கடன் எழுப்பிக் கொள்வதற்கு இந்தத் தமிழக அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் நலனைக் கருதி, இந்தத் தீர்மானம் நிறைவேற்றக் கூடிய ஒன்று. ஆனால், நில அடமான பாங்குகள் கடன் கொடுப்பதிலே இருக்கிற கஷ்டங்களை மன்ற உறுப்பினர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் விவசாயிகள் சொல்லுகின்ற குற்றச்சாட்டு என்னவென்றால், கடன் விண்ணப்பம் போட்டு காலதாமதத்தோடுதான் கடன் தங்களுக்குக் கிடைக்கிறது என்பதாகும். இந்தக் குற்றச்சாட்டு பரவலாக இருந்து வருகிறது. அதற்குக் காரணமாக இருக்கிற இடையூறுகள் என்ன என்பதைக் கண்டு, எந்த இடையூறுகளை எந்த வகையில் போக்க முடியுமோ அந்த வகையில் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால்தான் இத்திட்டத்தின் நோக்கம் நல்ல முறையில் நிறைவேற்றப்படும்.

விவசாயிகளுக்கு காலாகாலத்தில் கடன் கிடைக்கப்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டியது மிக மிக அவசியம். நவீன முறையில் விவசாயம் செய்யவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிற

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [31st July 1965

இந்தக் காலத்தில், பல நவீன முறைகளைக் கையாள்வதற்குத் தேவையான பணம் கடன் பெறுவதன் வழியாகத்தான் விவசாயம் வளர்வதற்கு வழிவகைகள் ஏற்படக் கூடும். காலாகாலத்தில் விவசாயிகள் தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு உடனடியாக அவர்களுக்கு கடன் கொடுப்பதற்கு வழி வகுக்க வேண்டும். காலத்தாழ்வு ஆகும்பொழுது நோக்கம் நிறைவேறாமல், கடன் கொடுக்கக்கூடிய தன்மையின் பயனை அவர்கள் பெறமுடியாமல் போய்விடும். அதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. வில்லங்க சர்டிபிகேட்கள் எடுப்பதற்குக்கூட காலத்தாழ்வு ஏற்படுகிறது. பட்டா மாற்றுவதன் காரணமாக அதைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கும் காலத்தாழ்வு ஏற்படுகிறது. பட்டா விரைவிலே மாற்றப்படாமல் ரெவின்யூ இலாகாவில் பல காலம் காலத்தாழ்வு ஏற்படுகின்ற காரணத்தினால், அந்தக் காலத்தாழ்வு கடன் கொடுக்கும் வகையிலே இடையூறாக அமைந்திருக்கிறது. ஆகவே, விரைவிலே அப்படிப்பட்ட சர்டிபிகேட் கிடைப்பதற்கும், விரைவிலே பட்டா மாற்றப்படுவதற்கும் வழிவகைகள் ஏற்பட்டால் தான் விவசாயிகள் காலாகாலத்தில் கடன் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படக்கூடும்.

வட்டி விகிதம் பற்றி கனம் உறுப்பினர் தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். இதிலே உள்ள குறைபாடுகளை அரசாங்கம் கவனத்தில் வைக்கவேண்டும். விவசாயிகளுடைய நிலைமையையும், அவர்கள் தவிக்கின்ற தவிப்பையும் கருதி வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பங்குப்பணம் கொடுத்துவிட்ட பிறகுதான் கடன் பெற வேண்டும் என்கின்ற ஒரு நிலை இருப்பதாக அறிகிறேன். பங்குப் பணம் கொடுத்து விட்டு, அதற்குப் பிறகு கடன் பெறவேண்டும் என்கின்ற நிலைமையில் பங்கு பணம் கொடுப்பதற்குக்கூட வசதியில்லாமல் இருக்கக்கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குக் கடன் கொடுக்கிற தொகையில் பங்குப் பணத்தைக் கழித்துக்கொண்டு மீதித் தொகையைக் கொடுப்பதற்கு வழி செய்யலாமா என்பதைப் பற்றிய நிலைமையை ஆராய்ந்து, அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, காலத்தாழ்வு ஒன்றுதான் அடிக்கடி விவசாயிகளால் எடுத்துச் சொல்லப்படும் முக்கியமான குறைபாடு. அதற்கான காரண காரிய நிலைமைகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கமும், நில



31st July 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அடமான பாங்குகள் மூலம் நிறைவேற்றப்படுகிற திட்டங்களும் பயன்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை கனம் மெம்பர்களெல்லாம் வரவேற்று, சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்காக எனது நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரி அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று இந்தத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிற காரணம் ரூ. 20 கோடியாக இருப்பதை ரூ. 30 கோடியாக உயர்த்துவதற்காகத்தான். இதனுடைய விளக்கங்கள் மெம்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விளக்கங்களில் முக்கியமான விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், ஒரு சில விஷயங்களைப்பற்றி மட்டும் நான் விளக்கம் தரவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். இதற்கு முக்கிய அடிப்படைக் காரணம் விவசாயிகளுக்கு இன்னும் நல்ல முறையிலே அதிகமாக கடன் கொடுக்கவேண்டும் என்பதுதான். விவசாயத்தை அடிப்படையாக வைத்துத் தான் மற்ற காரியங்கள் நடக்கின்றன என்ற நிலை இப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயம். ஆகவே விவசாயிகளுக்கு நல்ல முறையில் கடன் கொடுக்கவேண்டும். கொடுக்கக் கூடிய கடன் நில அடமான பாங்குகள் மூலம் எவ்வளவு சுருக்கமான, குறுகிய காலத்தில் கொடுக்க முடியுமோ அவ்வளவு குறுகிய காலத்தில் கொடுக்க வேண்டும் என்ற பிரச்னைதான் இப்பொழுது அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது.

சமீபத்தில், அதாவது இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக, எல்லா பிரைமரி பாங்குகளும் 70 நாட்களுக்குள் கடனைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. அம்மாதிரி தாக்கீது கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அவ்வளவு சீக்கிரம் குறுகிய காலத்தில் கொடுத்து விடுகிறார்களா என்ற கேள்வியும் கூடவே எழும். ஆனால், அவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடிவதில்லை. அதனுடைய அடிப்படைக் காரணம் என்னவென்று பார்த்தால்—பாங்குகள் சொல்லுகின்ற குற்றம்—விவசாயிகளுடைய தாமதம் என்று சொல்லுகிறார்கள். கடன் கொடுப்பதற்கு வேண்டிய பத்திரங்கள், பாண்டுகள் இவைகள் கொடுப்பதில் ஏற்படுகின்ற தாமதத்தின் காரணமாகத்தான் கடன் கொடுப்பதும் தாமதப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அதை நான் பூரணமாக ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னாலும்கூட, இப்படிப்பட்ட தாமதமும் ஒரு சில வகையிலே இருக்கக் கூடும் என்ற நிலை இருந்தாலும்கூட, எப்படியும் இன்னும் சுருக்கமான, குறுகிய காலத்தில் கடன் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் பாங்குகளுக்கு திட்ட

வட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். 70 நாட்களுக்குள் கடன் கொடுத்துவிடவேண்டுமென்று தாக்கீது இருந்தாலும், இப்பொழுது 3 அல்லது 4 மாதங்களுக்குள் கடன் கிடைத்து விடுகிறது, கிடைத்துக்கொண்டிருக்கிறது என்ற ஒரு நம்பிக்கைதான் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நான் சொல்லவேண்டும் என்ற நிலை ஏற்படாமல், சென்னை மத்திய பாங்கு தலைவர் கனம் உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர்கள் ஒரு சில விஷயங்களை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

முன்கடன் திருப்பிக் கொடுப்பதற்காக கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே, அதை ஏதோ மாற்றி அமைத்து விவசாயக் கடன் கொடுக்க வேண்டும் என்ற பிரச்னையைப்பற்றி சில உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். இப்பொழுது விவசாயத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கிறபொழுது, விவசாயத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த விவசாயக் கடனைப் பற்றி சொல்லும்பொழுது, கிணறு வெட்டுவதற்கு, பம்பு செட்டுகள் வைப்பதற்கு என்ற முறையில் பார்த்து, முன்பு முன் கடன் திருப்பிக்கொடுப்பதற்காக எவ்வளவு கடன் கொடுக்க வேண்டும் என்றிருந்த நிலையை மாற்றி விவசாயக் கடன் கொடுப்பதை சென்ற ஆண்டு 70 சத விகிதம் இருந்ததை, இந்த ஆண்டு 80 சத விகிதம் என்று மாற்றி, சென்ற ஆண்டு விவசாயக் கடனுக்கு 70 சத விகிதம் மற்றவைக்கு 30 சத விகிதம் என்று இருந்ததை மாற்றி, 30 சத விகிதம் என்று இருந்ததில் 100-க்கு பத்து பாகத்தைக் குறைத்து, விவசாயக் கடனை 80 சத விகிதமாக உயர்த்தி, மற்றவைக்கு 20 சத விகிதம் கொடுக்க வேண்டும் என்ற நிலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது நியாயமும்கூட. கிணறு வெட்ட வேண்டும், பம்பு செட்டுகள் வைக்கவேண்டும் என்று அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். முன்கடன் திருப்பிக் கொடுப்பதற்காக கொடுக்கப்படும் கடனைப் பற்றி அதனுடைய விளக்கத்தைக்கூட கனம் மெம்பர் திரு. தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். ஏதோ சில காரியங்கள் செய்து கடன் வாங்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள், அதனால் விவசாயிகளுக்கு பொறுப்பு இல்லை என்பதையும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த நிலையும் ஏற்படாமல் இருக்கவேண்டும்.

கனம் உறுப்பினர் திரு. ராமசாமி நாயுடு அவர்கள் பேசும்பொழுது, செழிப்பான நன்செய் நிலத்திற்குத்தான் அதிகமாக கடன் கொடுக்கிறார்கள், புன்செய் நிலத்திற்கு கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். தஞ்சாவூர், பரம்பிக்குளம், லோயர் பவானி ஏரியாக்களில் உள்ள நிலங்களுக்குத்தான் அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். நிலத்தினுடைய மதிப்பிற்குத்



தகுந்தமாதிரி கடன் கொடுக்கப்படுகிறது. புன்செய்யாக இருந்தால்கூட, நன்செய் நிலத்தைவிட அதிகமான விலைக்கு விற்கப்படலாம். தஞ்சாவூர் நன்செய் நிலத்தைவிட ஒரு ஏக்கருக்கு ரூ. 2,000 மதிப்புக்கு விலையக்கூடிய புன்செய் நிலமாக இருந்தால், அதன் விலை மதிப்பு கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். ஏதோ நன்செய் நிலம் என்ற காரணத்திற்காக அதிக மதிப்பு வைத்து அதிகமாக கடன் வாங்குகிறார்கள் என்று சொன்னால் அதை நான் ஒத்துக்கொள்ள தயாராக இல்லை. நிலத்தினுடைய மதிப்பு, சுருக்கமாகச் சொல்லப்போனால், 'மார்கெட் ரேட்' படிதான் நிர்ணயிக்கப்படுகிறது. நேற்று விற்ற விலையா, அல்லது 2, 3 நாட்களுக்கு முன்பு விற்ற விலையா என்கிற பிரச்னை வருகிறபொழுது, 5 ஆண்டுகளுக்குள்ளாக நிலத்தினுடைய விலையை மதிப்பீடு செய்து, அந்த அளவிலே கடன் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது ஒரு நிலத்தின் மதிப்பு ரூ. 10,000 என்றால், அதன் பேரில் ரூ. 5,000 வரை கடன் கொடுக்கலாம். இன்னொரு முறையையும் சேர்த்திருக்கிறோம் கிணறுக்கு, பம்பு செட்டுக்கு என்று கடன் வாங்கினால், அந்த வசதிகள் செய்த பிறகு நிலத்தின் மதிப்பு என்னவாகும் என்றும் பார்க்கிறார்கள். அப்படி கிணறு, பம்பு செட்டுகள் வைத்த பிறகு நிலத்தின் மதிப்பு உயர்ந்துவிடும், அந்த மதிப்பை வைத்தும் கடன் கொடுப்பதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது பார்த்தால் முன் கடன் தீர்ப்பதற்குக் கொடுப்பதை விட அபிவிருத்திக்கு என்று அதிகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய பாங்க் தலைவர் கனம் அங்கத்தினர் திரு. ராமலிங்கம் சொன்னது போல, ரிசர்வ் பாங்கிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் தொகை மூன்று கோடியிலிருந்து இரண்டே முக்கால் கோடியாகக் குறைந்திருக்கிறது. அதன் காரணமாக முக்கியமாக விவசாயத்திற்குத்தான் கடன் கொடுக்கப்படும் என்கிற வகையில் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

புதியதாக நிலங்களைச் சீர்படுத்தி—ரிக்ளமேஷன் என்று சொல்லுவார்கள்—இருக்கும் இடங்களுக்கும் உதவி செய்யவேண்டியிருக்கிறது. அந்த இடங்களும் உடனடியாக வளம் பெறும் வாய்ப்பு இருக்கிறது. அப்படி வாய்ப்பு ஏற்படும் காரணம் இருக்கும் போது, அதற்குத் தேவையான தொகையைக் கொடுக்க வசதிகள் செய்யப்படவேண்டும் என்றுதான் பரம்பிக்குளம் போன்ற ஏரியாக்களில் கடன்கள் வழங்க வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆகவே, இப்பொழுது 20 கோடியை, 30 கோடியாக் உயர்த்த வேண்டியிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அதை 40 கோடியாக உயர்த்தினாலும் நலமாக இருக்கும். (திரு. மீ. கலியாணசுந்தரம்: இன்னும் இரண்டு ஆண்டுகளில் செய்யப் போகி

[31st July 1965

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

தீர்கள்.) இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்து, இன்னும் அதிக மாக வேண்டிய தொகையைக் கோரும்போது சர்க்காருடைய உத்தரவாதமும் அதிகரிக்கலாம்.

ஜாயின்ட் பட்டா பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு கொடுப்பதில்லை என்கிற நிலை முன்னால் இருந்தது. ஆனால் இப் பொழுது அந்த அந்த ப்ரைமரி பாங்கிகள் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தால், அதற்குத் தடை ஒன்றும் இல்லை. அவர்கள் அப்படிச் செய்யக் கூடாது என்று இல்லை. இன்றைக்கு அநேக மாக எல்லா தாலூகாக்களிலும் பாங்கிகள் இருக்கின்றன, இரண்டு ஒன்று இன்னும் ஏற்படவேண்டியிருக்கும். மொத்தத்தில் 105 பாங்கிகள் இருக்கின்றன.

இந்தத் தீர்மானத்தின் பேரில் பேசிய கனம் அங்கத்தினர்கள் கூறிய நல்ல யோசனைகளுக்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை சபை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"This Assembly recommends to the State Government that they may, under sub-section (2) of Section 6 of the Madras Co-operative Land Mortgage Banks Act, 1934, increase the maximum amount of the guarantee given by them in respect of the debentures issued by the Madras Co-operative Central Land Mortgage Bank Limited up to a total face value of Rs. 30 crores (Rupees thirty crores only) exclusive of such debentures as the Bank may from time to time redeem, such debentures being issued for periods not exceeding in any case 25 years from the date of issue and bearing interest at a rate not exceeding the rate of interest approved by the Reserve Bank of India for each floatation".

The Resolution was put and carried.

## VIII.—THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1965-66—DISCUSSION—*cont.*

MR. SPEAKER : We can now continue the further discussion on the Electricity Board Budget.

The hon. Member Sri M. Karunanithi may now speak.

* திரு. மு. கருணாநிதி : கனம் அவைத் தலைவர் அவர்களே தமிழ் நாடு மின்சாரக் கழகத்தின் 1965-66-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக் கையை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னே எடுத்து வைத்து, அதைப் பற்றிய விவாதத்தில் இருதரப்பிலும் உள்ள கனம் உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் தங்கள் கருத்துக் களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இருதரப்பிலிருந்தும், இந்த மின்சாரக் கழகம் தமிழகத்திற்கு நல்ல பல செயல்கள் புரிந்து



31st July 1965] [திரு. மு. கருணாநிதி]

வருகிறது என்பது குறித்தும், அது ஒரு சீரான முறையில் தன் னுடைய பணிகளை ஆற்றிவருகிறது குறித்தும் எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. அதைப் பொறுத்து கருத்து வேறுபாடு இருப் பதற்கு நியாயம் இல்லை. 1957-ம் ஆண்டு முதல் எட்டு ஆண்டு காலமாக, மின்சாரக் கழகமாக இயங்கி வருகின்ற இந்த அமைப்பு, சுருங்கக் கூறினால், அரசாங்கத்தினுடைய நிர்வாக அமைப் பிலிருந்து, கட்டுக்கோப்புகளிலிருந்து மின்சார இலாகாவைத் தளர்த்தி ஒரு சிறந்த தொழில் அமைப்பாக இருக்க வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தின் பேரில் நிறுவப்பட்ட கழகமாகும். இந்தக் கழகத்தினுடைய நிதிநிலை அறிக்கை பற்றி இங்கு விவா திக்கலாம், ஆனால் வாக்கு எடுப்பிற்கு உரியதாக இருக்காது என்பது குறித்தும் நாம் அனைவரும் அறிவோம். அறிக்கை மீது வழங்கப்படும் கருத்துக்கள் செயல்படுத்தப் படவேண்டும், கூறப் படும் யோசனைகளைப்பற்றி தக்க பதில்களை உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதில் நம்முடைய அமைச்சர் அவர்கள் முனைப்பாக இருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டி என் மகிழ்ச்சியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு எடுத்துக்காட்டாக, கழகத்தினுடைய 1964-65-ம் ஆண்டுக் கான அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் வழங்கப்பட்ட யோசனைகளை, எப்படி எப்படிச் செயல் படுத்தியிருக்கிறோம் என்பது குறித்தும், அந்த யோசனைகளுக்கு எந்த எந்த வகையில் காரணங்களைத் தருகிறோம் என்பது குறித்தும், புத்தகம் ஒன்று உறுப்பினர்களுக்கு தரப்பட்டிருக்கிறது. அதிலே கருத்து வேறு பாடுகள் இருப்பினும், அந்த முயற்சி பாராட்டுக்குரிய முயற்சி; அந்த முயற்சியைச் செய்த கழகத்தினரையும், அமைச்சர் அவர் களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாராட்டு வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல, அரசாங்கத் தினுடைய எல்லா இலாகாக்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டு உறுப்பினர்களுடைய யோசனைகள் மீது எப்படி எப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பது குறித்து சபைமுன் ஒரு அறிக்கை சமர்ப்பித்தால் அதுவும் போற்றத்தக்க ஒன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை மீது, மின்சாரக் கழகத்தின் மீது எடுத்துச் சொல்லப்படுகிற கருத்துக்கள், குற்றம் சாட்ட வேண்டும், குறைகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல என்று மனதில் கொண்டு, சீராக நடைபெறும் நிர்வாகம் மேலும் செம் மையாக நடைபெறவேண்டும் என்பதற்காக இவைகளெல்லாம் எடுத்துச் சொல்லப் படுகின்றன என்று அமைச்சர் அவர்களும், கழகத்தினரும் மனதில் கொள்ள வேண்டும் என்று பெரிதும் எதிர் பார்க்கிறேன்.

இந்தக் கழகம், எட்டு ஆண்டு காலத்தில், பொதுமக்களிட மிருந்து ரூ. 21 கோடியை ஏழு தவணைகளில் கடனைப் பெற்றிருக் கிறது. பொதுமக்களிடம் இருந்து கடனைப் பெறுவதற்கு அரசாங்கமும் தக்க உத்தரவாதம் அளித்திருக்கிறது. இந்தக்

[திரு. மு. கருணாநிதி] [31st July 1965

கடன்களை உரிய காலத்தில் திருப்பித்தர, கடன் மீட்பு நிதி என்று ஒரு அமைப்பு பணியாற்றி வருகிறது. அந்தக் கடன் மீட்பு நிதிக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை வருவாயிலிருந்து சேர்த்து குறிப்பிட்ட காலத்தில் பொதுமக்களிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பித்தர கழகம் முயலவேண்டும் என்பது திட்டம்! அதன்படி, 1965-66-ம் ஆண்டு வரை கடன் மீட்பு நிதியில் ஒதுக்கியிருக்க வேண்டிய தொகை, ரூ. 758 லட்சம். ஆனால், மின்சாரக் கழகம் இதுவரை ஒதுக்கியிருக்கும் நிதி ரூ. 291 லட்சம்தான் என்று நான் அறிய வருகிறேன். மிச்சம் ரூ. 467 லட்சம் ஒதுக்கப்படவேண்டும். 1958-ம் ஆண்டு பொது மக்களிடத்திலிருந்து ரூ. 2 கோடி கடனைப் பெற்றிருக்கிறது. அதை 1968-ம் ஆண்டுக்குள் திருப்பித் தரவேண்டும் என்றால்—இந்த ஏழு ஆண்டு காலத்தில், இதுவரை மின்சாரக் கழகம் ஒதுக்கியிருக்கும் பணம் ரூ. 110 லட்சம்தான் என்று அறிய வருகிறேன்—ஏழு ஆண்டுகளிலே, இரண்டு கோடி ரூபாய்க்கு, 110 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறது என்றால், மிச்சம் இருக்கும் மூன்று ஆண்டுகளில் எப்படி இந்தக் கழகம் கடனின் மிச்சத்தை ஒதுக்கப் போகிறது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். 1968-ம் ஆண்டு தீர்க்கப்படும் கடனுக்கே இந்த நிலை என்றால், அதன் பின் அடுத்தடுத்து தீர்க்கப்படவேண்டிய கடன்கள் என்ன ஆவது? எந்த அளவில் முயற்சிகள் எடுத்து கடன் கொடுத்த பொது மக்களுக்கும், அவர்கள் சார்பாக பேசுகிறவர்களுக்கும் நல்ல எண்ணம் ஏற்படும் வகையில் செயல்படவேண்டும் என்று மின்சாரக் கழகமும், உத்தரவாதம் கொடுத்த அரசும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது மிக முக்கியமானது, மிகப் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன்.

பொது மக்களிடமும், மற்ற வகையிலும் பெற்ற கடனுக்கு வட்டியாக ரூ. 75 லட்சம் ஒன்றும், ரூ. 93 லட்சம் ஒன்றும் இப்படி லட்சக் கணக்கில் நாம் வட்டியைத் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். கடனையோ வட்டியையோ மிகைப்படுத்திப் பேசி அந்த ஆராய்ச்சியிலே இங்கு நான் இறங்குவதற்குத் தயாராயில்லை. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், கடந்த முப்பது ஆண்டுக் காலமாக மக்களுக்குப் பெரும் சேவை செய்து வருகின்ற இந்த அமைப்பு தனது வளர்ச்சிக்கும், அத்தியாவசியமான முதலீட்டுக்கும் முழுக்க முழுக்க அரசாங்கத்தினுடைய கடனையும் பொது மக்களுடைய கடனையுமே நம்பியிருப்பது விரும்பத்தக்கது அல்ல, ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்பதைச் சுட்டிக்காட்டத்தான். இப்படிப்பட்ட கடன்பட்ட நிலையிலும், வருமானத்தைப் பெருக்காமலும், சேமிப்பு நிதி ஒதுக்குவதிலும் பெரு வெற்றியைக் காண முடியாமலும் இருக்கும் கழகம் ஒரு தியாகியைப் போல, மின்சாரப் பணியைத் தமிழ் மக்களுக்கு, பொது மக்களுக்கு ஆற்றிக்கொண்டு வருகிறது. ஆனால், இப்படி தியாக உள்ளத்தோடு இந்த மின்சாரப் பணியைத் தொடர்ந்து நடத்த ஒரு நிறுவனத்தால் இயலுமா என்பதைத்தான் நாம் இங்கே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



31st July 1965] [திரு. மு. கருணாநிதி]

இதற்கு ஒரு வழியாகத்தான் இந்த மன்றத்திலே பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தனியார் நடத்துகிற மின்சார நிறுவனங்களை அரசாங்கத்தார் அல்லது இந்த மின்சாரக் கழகத்தினர் எடுத்து நடத்தவேண்டும் என்ற ஒரு யோசனை பல தடவை இந்த மன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. இது அமைச்சருக்கும் உடன்பாடான கருத்து என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால், நான் குறிப்பாக அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லவேண்டுமானால், இங்கே வைக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனைக் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பீட்டில் செங்கற்பட்டு, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களிலே ஆயிரக்கணக்கான, இரண்டாயிரக் கணக்கான கிராமங்கள் மின்சாரத்தைப் பெறுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் 760 கிராமங்கள் மின்சார வசதி பெறுகின்றன. ஆகவே, மற்றக் கிராமங்கள் மின்சாரம் பெறவில்லை. மின்சாரம் பெறவில்லை என்று குறிப்பிட்ட மற்றக் கிராமங்கள் சேஷசாயி பிரதர்ஸ் போன்ற தனியார் துறை நிறுவனத்திடமிருந்து மின்சார வசதியைப் பெறவேண்டியவைகளாக இருக்கின்றன. வேறு பல மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான, இரண்டாயிரக் கணக்கான கிராமங்கள் மின்சார வசதியைப் பெறும்போது தஞ்சை போன்ற மாவட்டங்களில் 700, 760 கிராமங்கள் மாத்திரம் பெறவும், மற்றக் கிராமங்கள் இன்றைய தினம் தனியார் துறை நிர்வாகத்தில் இருக்கவும், அவைகளை நாம் எடுத்துக்கொண்டு நடத்தலாம் என்று கூறப்பட்டால் அதற்குக் கொடுக்கின்ற நஷ்டஈடு எட்டு கோடி, ஒன்பது கோடி ரூபாய் ஆகும் என்றும் சொல்கிறார்கள். அதன் காரணமாக அதை நாம் விட்டுவிடுவதும் சரியான பதிலாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், அந்தத் தனிப்பட்ட நிறுவனத்தார் இதுவரையில் அந்த நிறுவனத்தின் மூலம் சம்பாதித்திருக்கும் லாபம் எவ்வளவு என்று கணக்கிட்டு, நஷ்ட ஈடு இவ்வளவுதான் தர முடியும் என்று அவர்களிடத்தில் நாம் உறுதியாகச் சொல்லி அந்த நிறுவனங்களை நாம் கைப்பற்றிக் கொள்ளவேண்டும். 'கைப்பற்றுவது' என்று சொன்னால் கூட அந்த வார்த்தை பயங்கரமாகத் தோன்றலாம். அந்த நிறுவனங்களை நாம் எடுத்துக்கொள்வது சாலச் சிறந்தது என்பதை அமைச்சர் அவர்களிடத்தில் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நாம் இந்த அளவுக்குக் கடன் வாங்கி, வட்டி கொடுத்துக் கஷ்டப்பட்டு இந்த மின்சாரக் கழகத்தை நடத்திக்கொண்டிருக்கும் நேரத்தில், திருநெல்வேலி-தூத்துக்குடி மின்சாரக் கம்பெனிக்கு மாத்திரம் முதலில் ரூ. 1,52,936 கடனாகவும், பிறகு 1960-61-ம் ஆண்டில் ரூ. 3,90,000 கடனாகவும், 1961-62-ம் ஆண்டில் ரூ. 3,67,000 கடனாகவும் இப்படிக் கடன் கொடுத்து தனியார் துறைகளை அவர்கள் மின்சார விஸ்தரிப்பைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்களால் முடியாவிட்டால் சில இடங்களை எங்களிடத்தில் கொடுங்கள் என்று வாங்கி, நாம் செய்து கொண்டிருக்க

வேண்டிய கஷ்டத்தை நாம் பார்க்க வேண்டிய அவசியம் என்ன வந்தது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். தனியார் துறையில் நடைபெறுகிற மின்சார சப்ளை ஒழுங்காக நடைபெறுகிறதா என்றால் இல்லை. இரண்டொரு உதாரணங்கள் நான் கூற முடியும். துறையூர் பகுதியிலிருந்து நேற்று ஒரு கடிதம் வந்தது. துறையூருக்கு அருகே தாத்தய்யங்கார்பேட்டை என்கிற கிராமத்தில் விவசாயிகட்கு ஒரு நாளைக்கு மின்சாரம் தருகிறார்கள்; மறு நாள் கிடையாது; பிறகு மறு நாள் தருகிறார்கள்; இப்படி ஒரு நாள் விட்டு ஒரு நாள் மின்சாரம் தாத்தய்யங்கார்பேட்டை கிராமத்திற்கு வழங்கப்படுகிறது. ஏன்? என்று அவர்கள் தென் மதராஸ் மின் வழங்கும் நிறுவனத்தில் உள்ளவர்களைக் கேட்பார்களானால், அவர்கள் சொல்கிற பதில், "துறையூரிலிருந்து தாத்தய்யங்கார்பேட்டைக்கு நேரடியாக அரசாங்கத்தினர் அவர்களுடைய செலவிலே கம்பி இழுத்துக் கொடுப்பார்களானால், நேரடியாக லைன் போட்டுத் தருவார்களானால் நாங்கள் மின்சாரம் வழங்க முடியும்" என்று கூறுகிறார்கள். இப்படி ஒழுங்கீனமான முறையில், மக்களுடைய தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலைமையில்தான் தனியார் துறை நிறுவனங்கள் இன்றைய தினம் செயல்பட்டு வருகின்றன. ஆகவே தான், தனியார் துறையிலிருந்து இந்த மின்சார சப்ளைப் பொறுப்பை முழுக்க முழுக்க மின்சாரக் கழகத்தினரே எடுத்துக் கொள்கிற முயற்சியிலே அரசாங்கம் வேகமாக, தீவிரமாக, அக்கறையோடு ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல குறைபாடுகள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. சீராக நடைபெறுகிறது என்று சொன்னபோதிலும், ஆதரித்துப் பேசிய உறுப்பினர்கள் அல்லது கருத்துக்களைத் தெரிவித்த எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதியில் எந்த அளவிற்கு மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தஞ்சாவூர் தொகுதியைப் பொறுத்த வரையில், நகரத்தை ஒட்டியிருக்கிற பல்வேறு கிராமங்கள் இன்றையதினம் இருண்டு போய்க் கிடக்கின்றன. நான் இதே மன்றத்தில் முன்பொரு தடவை குறிப்பிட்டபடி, இடுகாட்டுக்குச் செல்வதற்குக் கூட விளக்குகள் இல்லாததால் பாதை தெரியாமல் பிணங்களைத் தூக்கிச் செல்கிறவர்கள் வயல்களிலே உருண்டு விழக் கூடிய பயங்கரமான நிலைமைகள் என்னுடைய தொகுதியில் இருக்கும் கிராமங்கள் பலவற்றில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அது பற்றி நான் இந்த மன்றத்திலேயே எடுத்துக்காட்டி இருக்கிறேன்.

விருத்தாசலம் நகரப் பஞ்சாயத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தீர்மானம் போட்டார்கள். அந்த நகரத்தில் இருக்கும் அறுபது பகுதிகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகளுக்கு உடனடியாக மின்சார விளக்கு தேவை என்று தீர்மானம் போட்டு நான்காண்டு காலமாக முயற்சி செய்கிறார்கள். நான்காண்டு காலமாக அது கவனிக்கப்படவில்லை. இன்னும் அந்த



அறுபது இடங்களில் மின்சார விளக்குகள் இல்லாமல் பெட்ரோமாக்ஸ் லைட்கள்தான் தினந்தோறும் எரிந்துக் கொண்டிருக்கின்ற நிலைமையை நாம் காண்கிறோம்.

இன்னொரு வேடிக்கையான ஜனநாயக சூழ்நிலை ஆற்காட்டில் நடைபெறுகிறது. ஆற்காடு இன்றையதினம் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் இருக்கும் நகராட்சி மன்றமாகும். அங்கே இரண்டு வார்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தார் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்த நகராட்சி மன்றம் தீர்மானம் போட்டிருக்கிறது. இரண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தார் வெற்றி பெற்றிருக்கிற அந்த இரண்டு வார்டுகளுக்கு விளக்குப் போடுவதில்லை என்பது அந்தத் தீர்மானம். அப்பட்டமான தீர்மானம் வெளிப்படையாகப் போடப்பட்டிருக்கிறது. நகராட்சிகளைப்பற்றிச் சொல்லலாமா? என்று கேட்டால், நகராட்சி நடக்கின்ற பகுதியில் மின் விளக்கு வசதி எப்படி இருக்கிறது என்பதை மின்சார அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்காட்டினால், நல்லிதயம் கொண்ட அமைச்சர் அவர்கள் கவனிப்பார் என்ற எண்ணத்தில் குறிப்பிடுகிறேன். நகராட்சி மன்றம் அவ்வாறு தீர்மானம் போட்டதன் காரணமாக, இரண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தார் வெற்றி பெற்ற வார்டுகள் பல மாத காலமாக இருண்டு கிடக்கின்றன. இதை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், அந்த இருண்ட நிலைமையை மாற்றி ஒளி அமைப்பதன் மூலம் ஜனநாயகத்திற்கும் ஒளி வழங்குவார்கள் அமைச்சர் அவர்கள் என்பதற்காக இதை எடுத்துச் சொல்கிறேன்.

பேசிய உறுப்பினர்கள் பலர், கம்பிகள் இல்லை, கம்பங்கள் இல்லை, கம்பிகளை ஏற்றிச் செல்வதற்கு வண்டிகள் இல்லை என்பன போன்ற பல்வேறு குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகளைத் தீர்த்து நிர்வாகத்திலே ஒரு நல்ல ஒழுங்குமுறை அமைக்கப்பட வேண்டும். இவைகளெல்லாம் இல்லை இல்லை என்று பேசப்படுகிற அதே நேரத்தில், பல்வேறு ஸிஸ்டங்களில்—மேட்டூர், மதுரை, வேலூர் போன்ற பல்வேறு மின்சார ஸிஸ்டங்களில்—தேவைக்கு அதிகமான அளவிற்கு இன்றைய தினம் சாமான்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை நாம் பார்க்கிறோம். மதுரை ஸிஸ்டத்தைப்பற்றிச் சொல்கிறேன். 1½" ஜி.ஐ. பைப் இரண்டு வருஷங்களுக்குத் தேவையாக அங்கே தேக்கி வைக்கப்பட வேண்டியது 9,500 மீட்டர். ஆனால், இருக்கும் ஸ்டாக் 16,350 மீட்டர். 1¼" ஜி.ஐ. பைப் 6,000 மீட்டர் இரண்டு வருஷங்களுக்கு அங்கே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இருக்கும் ஸ்டாக் 11,223 மீட்டர். அதேபோல, 2" ஜி.ஐ. பைப் இரண்டு வருஷங்களுக்கு 8,500 மீட்டர் நாம் ஒதுக்கி வைக்கவேண்டும். இருக்கும் ஸ்டாக் 11,865 மீட்டர். இந்த ஆலோசனைகள்பற்றி வழங்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே, "ஒரு கடையிலே அதிகம் என்று தெரிந்தால் உடனடியாகக் குறைவாயுள்ள கடைக்கு அனுப்பிவிடுகிறோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'அனுப்பிவிடுகிறோம்' என்ற வார்த்தைக்குப் பதிலாக, 'அனுப்பி

யிருப்பதாக எழுதிவிடுகிறோம்' என்பதுதான் பொருத்தமாக இருக்கும். கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். 'அத்திக்கடவு' என்ற பெயர்ப் பலகை போடப்பட்ட தண்டவாளங்கள், அந்த அத்திக்கடவுக்குத் தேவை இல்லாத தண்டவாளங்கள், அத்திக்கடவுக்கு அனுப்பப்பட்டன, அனுப்பப்படுகின்றவை என்று பெயர் குறிக்கப்பட்டு அங்கே குவிக்கப்பட்டிருந்த வேதனையான செய்தியை அங்கத்தினர் அவர்கள் எடுத்து விளக்கினார்கள். இப்படி 'பேப்பர் ட்ரான்ஸாக்ஷன்' கூடாது என்பதை அக்கவுண்ட்ஸ் மெம்பர் கூட குறிப்பிலே எழுதியிருக்கிறார்; வலியுறுத்தியிருக்கிறார், சுட்டிக்காட்டி இருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன். அதற்குப் பிறகும் அது நிவர்த்தி செய்யப்படவில்லை என்பது ஒரு பெரும் குறையாகவே இருக்கிறது என்பதால் நிர்வாகம் அதை ஏற்றுச் செயல்படவேண்டும் என்று இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் நான்கைந்து பதவிகள் 1962-ம் ஆண்டிலிருந்து காலியாகவே விடப்பட்டிருக்கின்றன. அதிலே முக்கியமாக சீஃப் கன்ஸ்ட்ரக்ஷன் என்ஜினீர்—அதாவது பிரதான நிர்மாண பொறியாளர்—என்கிற பதவி 1962-ம் ஆண்டு முதல் காலியாக விடப்பட்டிருக்கிறது. கேட்டால், ஸி.ஸி.ஈ. க்குப் பதில் ஸி.இ. யே அந்த வேலையைப் பார்க்கிறார் என்று பதில் சொல்லக் கேட்டோம். அப்படியானால் அந்த ஸி.ஸி.ஈ. பதவி தேவை இல்லை என்று அந்தப் பதவியையே ரத்து செய்துவிடலாம். 1962-ம் ஆண்டிலிருந்து இது வரையில் காலியாக இருக்கும் அந்தப் பதவி நிரப்பப்படாததற்குக் காரணம் என்ன ? அதற்குத் தகுதி வாய்ந்த திறமையாளர் ஒருவர் இருக்கிறார், அந்தப் பதவிக்குப் போடவேண்டுமானால் அவரைத் தான் போட்டாகவேண்டும், அது தவிர்க்க முடியாதது, அவரைப் போடவேண்டும் என்ற நிலைமையிலிருந்து மாறி அவரைப் போடக்கூடாது என்று அந்தப் பதவி காலியாக வைக்கப்பட்டிருக்கிறது என்று எல்லாம் வதந்திகள் உலவுகின்றன. அந்த வதந்திகள் வதந்திகளாகவே இருந்துவிட்டால் நல்லது, உண்மையாக இருக்கக் கூடாது என்று தான் நானும் விரும்புகிறேன். ஓய்வுபெற்ற
11-00 a.m. வயதுக்குப் பிறகும் பல பேர்கள் பதவியில் இருக்கிறார்கள். திறமைசாலியைப்பற்றி நான் சொல்லவில்லை. என்ஜினியர்கள் நீடிப்பதைப்பற்றி நான் சொல்லவில்லை. திறமை மிக்க பிரதம என்ஜினியர் நீடிப்பதைப்பற்றிக் கூட நான் சொல்லவில்லை. சென்னையைப் பொறுத்தவரையில் எம்.இ.எஸ். அக்கவுண்ட்ஸ் ஆபீசர் ஓய்வுபெற்ற பிறகும் கடந்த இரண்டாண்டுகளாகப் பதவியில் நீடிக்கப்பட்டு இருக்கிறார்கள். திறமையுள்ள என்ஜினியர்கள், மின்சாரக் கழகத் தலைவர்களைப் போன்றவர்கள் நீடிக்கட்டும், ஆதரிக்கலாம். ஒழுங்காகக் கணக்கு எழுத வேண்டிய கணக்கர் நீடிக்கப்பட வேண்டுமா ? வேறுமாதிரிக் கணக்கு எழுதுகிறவர்கள் நீடிக்கத்தான் வேண்டும். ஆனால் ஒழுங்காகக் கணக்கு எழுதக் கூடியவர்கள் வேறு யாரும் கிடைக்கமாட்டார்களா ? இப்படி எம்.இ.எஸ். அக்கவுண்ட்ஸ் ஆபீசர் இரண்டாண்டு கால



மாகப் பதவியில் நீடிக்கப்பட வேண்டிய அவசியம் என்ன ? இப்படிப் பட்ட நிர்வாகக் கோளாறுகளைச் சீர்படுத்த வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் முதல் அமைச்சருடைய தொகுதியாகிய செங்கல்பட்டு ஜில்லா ஸ்ரீபெரும்புதூர் செல்-சிஸ்டம் டெபுடி சிப் அக்கவுண்ட்ஸ் ஆபீசர் பதினாலாயிரம் ரூபாய் கையாடல் செய்துவிட்டதாக வழக்குத் தொடர்ந்தார்கள். இப்போது அவர் திடீரென்று இறந்து விட்டார். வழக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. வசூலித்த தொகையில் இருந்து அவர் கையாடல் செய்துவிட்டார். நிர்வாகத்தில் வசூலிக்கப்பட்ட பணம் உடனுக்குடன் எப்படி எப்படி யார் யாருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும், அப்படிச் சரியான முறையில் அனுப்பி வைக்கப்படுகிறதா என்பதான விதிமுறைகளும் கண்காணிப்பும் இருந்திருந்தால், இவ்வளவு பெரிய தொகையை ஒருவர் கையாடல் செய்ய சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்காது. நிர்வாகத்தில் உள்ள கேடு தான் இவ்வளவு அதிகமான தொகை விரயமானதற்குக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேனே தவிர கையாடல் செய்தவர் திடீரென்று எப்படி இறந்தார், ஏன் இறந்தார், என்பதான ஆராய்ச்சியில் இறங்கத் தேவையில்லை. இப்படிப்பட்ட நிர்வாகக் கேட்டுக்கு, பணவிரயத்திற்குப் பலமான உதாரணம் ஒன்றைக் கடைசியாக எடுத்து வைக்க விரும்புகிறேன். அது ஒரு நிலத்தைப்பற்றிய கதை. மிக்க சுவையாகக் கூட இருக்கும். திரு. ப. உ. சண்முகம் அவர்கள் சென்ற ஆண்டே கூட அதைத் தொட்டுக் காட்டினார்கள். இதைக் கவனிக்கிறேன் என்பதோடு கனம் அமைச்சர் அவர்கள் விட்டு விட்டார்கள். ஒருவேளை கவனித்த பிறகு கூடப் புரிந்து கொள்ளாமல் பேசக் கூடும். புரிந்தவர்களுக்கும், புரியாதவர்களுக்கும்கூடத் தெளிவிக்க வேண்டும் என்பதற்காக நான் அதை இங்கே எடுத்து வைக்கிறேன். இதில் வேறு எந்தவிதத் தவறான கருத்துக்கும் இடமில்லாமல் யோசிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதியில், எருக்கஞ்சேரிச் சாலையில் 400 கிரவுண்டுகள் இருக்கின்றன. 1914-ஆம் ஆண்டு கலெக்டரிடமிருந்து ஆதிசேஷய்யா என்பவர் 4—9—1914-இல் வாங்கிய நிலம் அது. அவருடைய மகன் ஏகாம்பரம். அவரது பேரன்கள் வேதகிரி ராவ், பிரகாச ராவ், ஏகாம்பரம் இறந்த பிறகு விதவையான அவர் துணைவி அன்னபூரணியம்மா, வேதகிரி ராவ், மைனர் குழந்தைகள் ஆகியவர்களுக்கு உரிமையாக இருந்தது அந்த இடம். பிறகு அவர்கள் தங்கள் இடத்தை—மைனர் பிள்ளைகள் இருந்த காரணத்தினால்—கோர்ட்டாரின் அனுமதி பேரில், 1963, மார்ச் 27-ம் தேதி கே. பி. ஜானகிராம நாடார்—தாசிமுத்து நாடார் மகன்—எஸ். என். பலராமன்—நாகய்யா மகன்—ஆகிய இருவருக்கும் பிரித்து ஒவ்வொன்றுக்கும் 95 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கு விற்றார்கள்.

கே. டி. ஜானகிராம நாடார் அவர்களும், எஸ். என். பலராமன் அவர்களும் 1963-ஆம் ஆண்டு மார்ச் 27-ஆம் தேதி அன்றுதான் 1லட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கு அந்த நிலத்தை வாங்கினார்கள். அதே 1963-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 9-ஆம் தேதி அந்த நிலத்தை அவர்கள் மின்சாரக் கழகத்திற்கு விற்றார்கள். அவர்கள் விற்றார்கள் என்பதைவிட அவர்களிடமிருந்து மின்சாரக் கழகத்தினர் அந்த நிலத்தை வாங்கினார்கள் என்பது முக்கியம். 1 லட்சத்து 90 ஆயிரத்துக்கு 1963-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வாங்கிய நிலத்தை, மின்சாரக் கழகத்தார் அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், அதாவது நாலு மாத இடைவெளியில் எவ்வளவு தொகை கொடுத்து வாங்கினார்கள் தெரியுமா? நான்கு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எண்ணூற்று எழுபத்து மூன்று ரூபாய்.

வாங்கிய கதை இன்னும் சுவையானது. ஜானகிராம் நாடாரும், பலராமனும் நிலத்தை முதலில் வாங்கும்போது போட்ட முதல் 36,000 ரூபாய். வாங்கும்போது அந்த நிலத்திற்கு வைத்த விலை ஒரு லட்சத்து 90 ஆயிரத்துக்கு கையில் கொடுத்த ரொக்கம் 36 ஆயிரம் போக, 27-ஆம் தேதி மார்ச்சில் வாங்கிய நிலத்திற்கு ஏற்கனவே சிதம்பரம் செட்டியாரிடம் வைக்கப்பட்ட அடமானத் தொகை, 1,43,500 ரூபாய் சாட்டுதல் போட்டுக்கொண்டார்கள். சாட்டுதல் போட்டுக்கொண்டார்களே, அந்தத் தொகையையாவது கட்டினார்களா? கட்டுவதற்கு இளிச்சவாய் மின்சாரக் கழகம் வந்தது. மீதித் தொகையான 11 ஆயிரம் ரூபாய்க்கு சிவகுருநாதனிடம் அவர்கள் அடமானம் வைத்திருந்தார்கள். ஆக மின்சாரக் கழகத்தார் 1,43,500 ரூபாயை சிதம்பரம் செட்டியாருக்கும், 11 ஆயிரம் ரூபாயை சிவகுருநாதனுக்கும் கட்டி, மிச்சத் தொகையான 3,14,393 ரூபாயை ரொக்கமாக ஜானகிராம் நாடாருக்கும், பலராமனுக்கும் கொடுத்து விட்டார்கள்.

மீண்டும் கேளுங்கள், கையறுத்துப் போட்ட முதல் 36,000 ரூபாய், வாங்கிய விலை 1,90,000 ரூபாய், வைத்திருந்த நாட்கள் நான்கு மாதம். மின்சாரக் கழகத்திற்கு விற்றவிலை—மன்னிக்கவும், மின்சாரக் கழகம் வாங்கியவிலை—மீண்டும் மன்னிக்கவும், ஏற்பாடு செய்துகொண்ட விலை ரூ. 4,68,873. 36 ஆயிரம் ரூபாய் முதலுக்கு நான்கு லட்சத்து அறுபத்தெட்டாயிரம் லாபம். இந்த லாபத்திற்குப் பெயர் தான் ஜனநாயக சோஷலிசம். எவ்வளவு பெரிய அக்கிரமம். 36 ஆயிரம் ரூபாய் முதல் போட்டு வாங்கிய நிலத்திற்கு நான்கு மாத இடைவெளியில் நான்கு லட்சத்து அறுபத்தெட்டாயிரம் அதிகம் கொடுத்து மின்சாரக் கழகம் வாங்கியிருக்கிறது என்றால் என்ன காரணம்? வாங்கிய நோக்கம் புனிதமானது தான். தொழிலாளர்களுக்குக் காலனி கட்ட. கட்டப்பட்டதா? இல்லை. கேட்டால் அவசர நிலை காரணமாகக் கட்டப்படவில்லை என்று மழுப்பக்கூடும். இந்த அவசர நிலை—நெருக்கடி நிலை—1962-இல் வந்தது. நெருக்கடி நிலை வந்த பிறகு தான் இந்த நான்கு லட்சத்தைக் கொட்டி இவர்கள் இந்த இடத்தை வாங்கியிருக்கிறார்கள். வாங்கிய நோக்கில் இல்லாத நெருக்கடி, வாங்கிய இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு வந்துவிட்டது. அப்படி நான்கு லட்சத்தை அதிகமாகக் கொட்டி வாங்குவதற்கான நெருக்கடி எப்படி வந்தது? அது மின்சாரக் கழகத்திற்கு வந்த நெருக்கடியா? ஜானகிராம் நாடாருக்கு வந்த நெருக்கடியா? பலராமனுக்கு வந்த நெருக்கடியா? அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் தான் விளக்க வேண்டும். இவ்வளவு பெரிய அக்கிரமம் நடந்து இருக்கிறதே, என்று நாட்டில் இருக்கிற மக்கள் அத்தனை பேரும் வியப்பு அடைகின்ற நிலை தான் இருக்கிறது. கருணாநிதி கதை எழுதுவான். இதுவும் கூட ஒரு கதை தான் என்று எண்ணிவிடக் கூடாது என்பதற்காகத்தான் 13 ரூபாய் செலவழித்து சப்-ரிஜிஸ்திரார் ஆபீசில் இருந்து அந்தக் கிரயப் பத்திரத்தின் நகல் வாங்கி வந்திருக்கிறேன். சந்தேகம் இருந்தால் இதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட அக்கிரமங்களினால் பொது நிர்வாகத்தில் வீணாகப் பணம் விரயம் ஆக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இதுவே ஒரு அடையாளமாக இருக்கிறது. இந்த நிலைமையை ஒழித்து எறிவதற்கு, நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்கு, செம்மைப் படுத்துவதற்கு, மின்சாரக் குழுவுக்கே ஒளி வழங்குவதற்கு உயர்மட்டக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று அதனால் தான் வற்புறுத்துகிறோம். நான் எடுத்துக்காட்டிய உதாரணத்தில் இருந்து எத்தனை லட்சம் விரயமாகியிருக்கிறது என்பது தெரியும். இந்த எடுத்துக்காட்டின் மூலமாக நான் யாரும் இதற்குப் பொறுப்பு என்று தனிப்பட்ட வகையில் சொல்லவில்லை. நமது அமைச்சர் அவர்களும், மின்சாரக் குழுவில் இருக்கிற நிர்வாகிகளும் இத்தகைய ஊழல் எப்படி ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து இது போன்று இனி நடவாதவாறு தடுக்கத்தக்க வகையில் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





* திரு. ரா. சுப்பிரமணியம்: கனம் தலைவரவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மின்சார போர்டின் நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நமது ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் மின்சார விஸ்தரிப்பு வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறதென்று நான் சொன்னால் அது மிகையாகாது. இந்தியாவில் உள்ள எல்லா ராஜ்யங்களிலும் நாம் தான் முதன்மையான ஸ்தானம் இத்துறையில் வகித்து வருகிறோம். அதற்குக் காரணம் நாம் பல திட்டங்களை மிக வேகமாக, முன் யோசனையுடன் நிறைவேற்றி, மின்சாரத்தை ஆங்காங்கே கிராமங்களுக்கு வழங்குவதில் எந்தவிதமான தயக்கமும் காட்டாமல், வெகு வேகமாக மின்சாரத்தை விஸ்தரித்து வருகிறோம். ஆண்டுக்கு ஆண்டு நம்முடைய மின்சாரத் தேவையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கடந்த ஆண்டில் நம் தேவை 630 மெகாவாட் என்றால் இந்த ஆண்டு 735 மெகாவாட்டாக இருக்கிறது. இந்த ஆண்டிலே 195 மெகாவாட் அதிகமாக நாம் உற்பத்தி செய்திருக்கிறோம் என்றாலும் நாளுக்கு

[திரு. ரா. சுப்பிரமணியம்] [31st July 1965

நாள் நம் தேவை அதிகரித்துக்கொண்டே வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் தனி நபர் உபயோகிக்கக் கூடிய அளவு 12 யூனிட்டாக இருந்தது. நடப்பு ஆண்டில் 120 யூனிட்டாக ஆகியிருக்கிறது என்பதில் இருந்தே மின்சார வளர்ச்சி நமக்கு நன்ருகத் தெரியும். நாம் எவ்வளவுதான் மிக வேகமாகத் திட்டங்களைப் போட்டாலும், அதன்மூலம் மின்சக்தி உற்பத்தி செய்தாலுங்கூட, நமக்குத் தேவையாக இருக்கக்கூடிய மின்சக்தி மிக அதிகமாக இருக்கிறது என்பதின் காரணமாக அணு மின்சக்தி நிலையங்கள் அதிகமாக ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது கல்பாக்கத்தில் அணு மின்சக்தி நிலையம் அமைப்பதற்கு மத்திய சர்க்கார் ஒப்புதல் அளித்திருக்கிருர்கள். அத்துடன் எண்ணூரில் ஒரு அனல் மின்சக்தி நிலையம் அமைப்பதற்கும் ஒப்புதல் அளித்திருக்கிருர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். அணு, அனல் மின்சார நிலையங்கள் அமைப்பதிலே, மிகத் துரிதமாக வேலையை எடுத்துக்கொண்டு வெகு சீக்கிரத்திலே இவைகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன்கூட, தென் ஜில்லாக்களில் மின்சக்தி அளிப்பதில் உள்ள இக்கட்டுகளை நிவர்த்திப்பதற்காக தூத்துக்குடியில் ஒரு அனல் மின்சக்தி நிலையம் நிறுவப்படுமென்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனல் நாம் இந்த எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றினலும்கூட, நான்காவது திட்ட இறுதிக் காலத்தில் நமக்கு 500 மெகா வாட் அளவுவரை பற்ருக்குறை இருக்கும். ஆகவே, இதைப் போக்கு வதற்காக இன்னும் அதிகமாக அனல் மின்சக்தி நிலையங்களை அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. மின்சாரத்தில் மிகவும் பின்தங்கி இருக்கக்கூடிய தஞ்சை ஜில்லாவில் நாகப் பட்டினத்தில் ஒரு அனல் மின்சக்தி நிலையம் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு ஒரு அனல் மின்சார நிலையம் நாகப்பட்டினத்தில் அமைப்பதால், அது தஞ்சை ஜில்லாவிற்கு மட்டுமல்லாமல், பக்கத்து ஜில்லாக்களில் இருக்கக்கூடிய பற்ருக்குறையையும் பூர்த்திசெய்யக் கூடிய முறை யில் உதவிகரமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் மின்சார விஸ்தரிப்பில் அது மிகமிகப் பின் தங்கிய நிலையில்தான் இருக்கிறது. நண்பர் கருணநிதி அவர்கள் கூடச் சொன்னர்கள். ஏதோ 750 கிராமங் களுக்கு மின்சாரம் கிடைத்திருப்பதாகச் சொன்னர்கள். ஆனல் மற்ற ஜில்லாக்களோடு ஒப்புநோக்கிப் பார்க்கும்பொழுது தஞ்சை ஜில்லா மிகமிகப் பின்தங்கி இருக்கிறது. அங்கே இரண்டாயிரத் திற்கும் அதிகமான ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. இரண் டாயிரத்திற்கும் அதிகமான ரெவின்யூ கிராமங்கள் இருக்கக்கூடிய தஞ்சை ஜில்லாவிலே 750 கிராமங்களுக்குத்தான் மின்சார வசதி பூர்த்தியாகி இருக்கிறது. இது மிக மிகக் குறைவு என்றே சொல்ல



31st July 1965] [திரு. ரா. சுப்பிரமணியம்]

வேண்டும். தஞ்சையைப் பொறுத்தவரையில் சர்க்காரே நேரடியாக மின்சாரத்தைப் பரப்புவதில்லை. தஞ்சை ஜில்லா சம்பந்தப் பட்ட மட்டில் அதற்காக இரண்டு கம்பெனிகள், கும்பகோணம் எலக்ட்ரிஸிடி சப்ளை கார்ப்பரேஷன், சௌத் மெட்ருஸ் எலக்டிரிசிடி சப்ளை கார்ப்பரேஷன், என்ற இரண்டு கம்பெனிகள்தான் மின்சாரத்தைப் பரப்புகின்றன. கம்பெனிகளுக்குக் கட்டுபடி யாகாவிட்டால் அவர்கள் மின்சாரத்தைப் பரப்புவதில் அக்கறை காட்டுவதில்லை. ஆனல் இந்தக் கம்பெனிகளையெல்லாம் நான் காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சர்க்காரே எடுத்துக்கொள் வதற்கான உத்தேசம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை நான் வரவேற்கிறேன். அப்படி சர்க் காரே இந்தக் கம்பெனிகளை எடுத்துக்கொள்ளும்பொழுது மின்சார விஸ்தரிப்பில் மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய தஞ்சை ஜில்லாவிலுள்ள கம்பெனிகளை முதன்மையாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு எடுத்தால்தான் ஏதாவது பிரயோஜனம் ஏற்படும். ஏனென்ருல் இதுவரை நாம் தொழில் உற்பத்திக்காகத் தான் மின்சாரத்தினை அதிகமாகப் பயன்படுத்தினேம். இப் பொழுது உணவு உற்பத்திக்கும் நாம் மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய நிலைமையில் இருக்கிருேம். மேலும் இப்பொழுது வருஷா வருஷம் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்குப் பருவ மழை கிடையாது. குறைந்துகொண்டே வருகிறது. தென் ஜில்லாக்களில்தான் மழை இல்லையென்று சொல்லிக்கொண்டிருக் கிருர்கள். ஆனல் இப்பொழுது தஞ்சை ஜில்லாவுக்குக்கூட அந்த நிலைமை வந்துவிடுமோ என்று கவலைப்படக்கூடிய நிலையில் இருக்கிருேம். ஆகவே, நாம் அதிகமாக பம்புசெட்டுகளைப் போட வேண்டிய நிலையில் இருக்கிருேம். பம்புசெட்டுகளைப் போடுவதன் மூலம் விளைச்சலை அதிகமாகப் பெருக்கமுடியும். இப்பொழுது 2 ஆயிரம் வடிமுனைக் குழாய்கள் அங்கு இறக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த 2 ஆயிரம் வடிமுனைக் குழாய்கள் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் கடலிலே கரைத்த பெருங்காயம் போலத்தான் இருக்கும். இதை நான் பட்ஜெட் விவாதத்தின்பொழுதே சொல்லியிருக்கிறேன். குறைந்தது 2 லட் சம் வடிமுனைக் குழாய்களாவது வேண்டுமென்று சொன்னேன். இல்லாவிட்டால் பிரயோஜனம் ஏற்படாது. மின்சாரம் நாம் அளிப்பதற்கு வகைசெய்யவேண்டும். மின்சாரம் அளிக்கவில்லை யென்ருல் எந்தவிதமான பிரயோஜனமும் இருக்காது. இப்பொழுது அங்கே இறக்கப்படுகிற இந்த 2 ஆயிரம் வடிமுனைக் குழாய்கள்கூட மின்சாரம் இல்லையென்ருல் பயன்படாமல்தான் போகும். ஆகையினல் உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டு மென்ருல் மின்சாரம் உடனடியாகத் தஞ்சை ஜில்லாவுக்குப் பரவலாக அளிக்கப்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டாவது கம்பெனிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முக்கியத்துவம் கொடுத்து முதலிலே சில கம்பெனிகளை

எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்த முக்கியத்துவத்தை இந்தத் தஞ்சை ஜில்லாவிலுள்ள கம்பெனிகளுக்குக் கொடுத்து சர்க்காரே அவைகளை உடனே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில் சில கிராமங்களுக்கு மட்டுந்தான் மின்சாரம் பரப்பப்பட்டிருப்பதாகப் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப் பார்த்தால் 1,600 கிராமங்களுக்குத்தான் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாகாணத்தில் 12,000 ரெவின்யூ கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் டவுன், குக்கிராமம், ரெவின்யூ கிராமம் எல்லாம் சேர்ந்து 17,000 கிராமங்கள் இருக்கின்றன என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். ஆனால், இதில் ரெவின்யூ கிராமங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டாலே 12,000 கிராமங்களுக்கு வந்துவிடும். அம்மாதிரியான நிலையில் 12,000 கிராமங்களில் 1,600 ஹரிஜனக் காலனிகளுக்குத் தான் மின்சாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதிகமாக ஹரிஜனக் காலனிகளுக்கு மின்சாரம் வழங்க வேண்டும். ஹரிஜனங்களுக்கு மின்சாரம் வழங்குவதைப் பொறுத்தவரையில், மேல் ஜாதியினருக்கு மின்சாரம் கொடுத்துவிட்டு ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவில்லையென்றால் அவர்கள் மிகவும் வருத்தமடைகிறார்கள். கம்பெனிகளோ அல்லது மற்றவர்களோ, ஹரிஜனத் தெருவிலே மின்சாரம் கொண்டுபோனால் அவர்கள் வீட்டு கனெக்ஷன் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள், அதனால் ரிடர்ன் குறைவாக இருக்கிறது, என்ற காரணத்திற்காக மின்சாரத்தைப் பரப்ப முன்வருவதில்லை. இதற்காக 3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 3 லட்ச ரூபாய் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகையால் இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டும். அதிகப்படுத்தாவிட்டால்கூட, இந்த மின்சார விஸ்தரிப்பையாவது ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் அங்கே சில பகுதிகளுக்கு மட்டும் விஸ்தரிக்காமல் அந்தக் கிராமத்தில் எல்லாப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்காவது திட்ட இறுதிக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுவிடும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எல்லாக் கிராமங்களுக்கும் என்றால் ஹரிஜனக் காலனிகளையும் சேர்த்து அவர்கள் சொல்ல வேண்டும். ரெவின்யூ கிராமங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் அங்கே சில பகுதிகளிலே மட்டும் மின்சாரம் போட்டுவிட்டு, ஹரிஜனக் காலனிகளிலெல்லாம் மின்சாரம் போடாமல் இருந்தால், அப்பொழுது எல்லாக் கிராமங்களுக்கும் போட்டுவிட்டதாகக் கணக்குக் கொடுக்கக் கூடாது. சோஷலிஸத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிற நாம் ஹரிஜனங் காலனிகளுக்கும் மின்சாரத்தை வழங்கவேண்டும். ஹரிஜனங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு அவர்களுக்குப் போதுமான பண வசதி, வீட்டுக் கனெக்ஷனுக்காக, இல்லையென்றால் அது அவர்களுடைய குறையல்ல. அவர்கள் உழைக்காமல் சோம்பேறிகளாக இருக்கிறார்கள் என்றால்தான் அது அவர்களுடைய குறையாகும்.



ஆனால் அவர்கள் உழைக்கிறார்கள், வேலை செய்கிறார்கள், அதற்குத் தகுந்த பலன் கிடைக்கவில்லை. அது அவர்களுடைய குறையல்ல. சமுதாயத்தின் குறை. அந்தக் குறையைப் போக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆகவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் மின்சார வசதி எல்லா கிராமங்களுக்கும் என்று சொல்லும்பொழுது, ஹரிஜன காலனிகளுக்கும் சேர்த்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. முனு ஆதி:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சாரக் கழகத்தின் 1965-66 ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு மின்சாரக் கழகம் என்றால் அது பாராட்டத்தக்க முறையிலே நடைபெறுகிறது என்று எல்லோராலும் நீண்ட நாட்களாகவே கருதப்படுகிறது என்பது உண்மையாகும். அதையேற்று நடத்துகின்ற தலைவர் அவர்களுடைய திரு முயற்சியினால் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழ்நாட்டில் தான் மின்சாரம் அதிகமான கிராமங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று பாராட்டப்படுகிற நேரத்தில் அதற்கிடையில் சில கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, மருத்துவ மனைகள், வழிபாட்டு இடங்கள், பள்ளிக் கூடங்கள் போன்ற இடங்களுக்கெல்லாம் மின்சாரத்தைத் தருகிற போது டாரிஃப் இரண்டின் படித்தான் வசூலிக்கிறார்கள். அதாவது வியாபாரிகளுக்குத் தருவதைப்போல் யூனிட்டுக்கு 34 காசுகள் வசூலிக்கிறார்கள். இந்த மாதிரிப் பொது இடங்களுக்கு இந்த அளவு கட்டணம் வசூலிப்பதிலிருந்து விதி விலக்குத் தரவேண்டும். இங்கெல்லாம் இனாமாகக்கூட மின்சாரத்தை வழங்கலாம். ஆயினும் மின்சாரக் கழகத்திற்கு அவ்வளவு தூரம் பண வசதி இல்லாத காரணத்தால் தெரு விளக்குகளுக்கு வசூலிக்கும் அடிப்படையில் 12 காசுகள் என்று இந்தப் பொது இடங்களைப் பொறுத்தவரை வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்பெல்லாம் மின்சாரம் ஆடம்பரத்திற்காக உபயோகப்படுத்தப்பட்ட பொருளாக இருந்தது. அது இன்று இன்றியமையாத பொருளாக ஆகிவிட்டது. ஒவ்வொரு வீட்டிலும் மின்சாரம் இருந்தால்தான் வாழ்க்கை நடத்த முடியும் என்ற நிலைமை இன்று இருக்கிறது. இன்னும் முன்பு ஆடம்பரப் பொருள்களுக்கு விதிப்பது போல் இதற்கு இப்போது விதிப்பதை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்பாக்கம் அணு மின் நிலையத்தைப்பற்றிப் பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் 'நாங்கள் இன்னும் முடிவு எடுக்கவில்லை' என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். கமிஷன் தலைவர் பாபா அவர்கள் அதை நான்காவது திட்டத்தில் சேர்க்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். இதற்கிடையில் எங்களைப் போன்றவர்களுக்கும்,

[முனு. ஆதி] [31st July 1965

பொதுமக்களுக்கும் கல்பாக்கம் அணு மின் நிலையம் ஏற்படுத்தப்படுமா என்ற சந்தேகம், எண்ணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநில சர்க்கார் முயற்சி செய்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதைச் சேர்த்து அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஒரு பொருள் அதிகமாக விற்பனை ஆகிறது என்றால் அது அதிகமாக உற்பத்தி செய்யப்படும். அவ்வாறு அதிகமாக உற்பத்தியாகிறபோது தானாகவே பொருள் விலை குறையும் என்பதுதான் பொது விதி. ஆனால் நம்முடைய நிலைமை மாறாக இருக்கிறது. பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்திற்கு வெளியிலிருந்து நிலக்கரி வாங்கி அதனால் மின்சாரத்தைப் பெற்றுக் குறைந்த கட்டணத்திற்கு அப்போது மின்சாரத்தைக் கொடுத்து வந்தார்கள். இப்போது நெய்வேலி நிலக்கரியைப் பெற்று அங்கு மின்சாரத்தை உருவாக்குகிறபோது கட்டணத்தை அதிகமாக்கி இருக்கிறார்கள். அதையும் குறைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேஷனல் ஹைவேயை நிறையப் பேர் ஆக்கிரமித்துக் கொண்டு பெரிய கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு ஆக்கிரமித்துக் கட்டிடம் கட்டியிருந்தால் அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படாது என்று கூறுகிறார்கள். ஆனால் அதிலும் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்த்து மின்சாரம் கொடுக்கப்படுகிறது. தாம்பரத்தில் நேஷனல் ஹைவேயுக்காக 120 அடி விட வேண்டுமென்ற விதி இருக்கிறபோது 60 அடி கூட விடாமல் பெரும் கட்டிடம் கட்டி இருக்கிறார்கள். அதிலே அங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சித் தலைவருடைய அண்ணனுடைய கட்டிடத்திற்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதிப் பேருக்கு மின்சாரம் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஒன்று எல்லோருக்கும் கொடுக்க வேண்டும், இல்லையென்றால் யாருக்குமே கொடுக்கக்கூடாது. இப்படிப்பட்ட பாரபட்ச முறையின் காரணமாகப் பொதுமக்கள் மின்சாரக் கழகத்தைப்பற்றித் தவறாக நினைக்க ஏதுவாகிறது. இப்படிப்பட்ட சிறு சிறு தவறுகளை நீக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலே, முன்னால் பேசிய நண்பர் அவர்கள் குறிப்பிட்டது போல், ஹரிஜனங்கள் வசிக்கும் காலனிகளுக்கு மின்சார வசதி கொடுப்பதில் முதற் சலுகை காட்டவேண்டும். அந்த ஊராட்சி மன்றத்திடம் அதிகப் பணம் இல்லை, அதிக வருமானம் இல்லையென்று சொல்லி ஹரிஜனப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாத நிலைமை இருக்கிறது. ஆதலால் அந்த ஹரிஜனங்கள் இரவிலே இருட்டிலே கஷ்டத்துடன் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு ஹரிஜன நல இலாகா மூலமாவது பணம் ஒதுக்கி மின்சாரக் கழகத்தின் மூலமாக மின்சார வசதியைச் செய்துதர வழி செய்யவேண்டுமென்று கேட்டு, குறிப்பாக இருட்டிலே இருக்கின்ற ஹரிஜனங்களுக்கு ஒளியைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



31st July 1965]

***திரு. எஸ். முத்துலிங்கம்.** கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சாரக் கழக நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைக்கூற ஆசைப்படுகிறேன். வந்தவாசித் தொகுதியில் இன்னும் பல கிராமங்களுக்கு மின்சார வசதிகள் இல்லாமல் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதிகளில் உடனடியாக மின்சார வசதியைச் செய்துகொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். பெரும்பான்மையான கிராமங்களில் விவசாய மக்கள் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று பம்ப் செட்டுகளை வைத்தும் அவர்களுக்கு சர்வீஸ் கனக்ஷன் கிடைக்கவில்லை. அவர்களுக்கு சர்வீஸ் கனக்ஷன் கொடுப்பதிலே மிகவும் காலதாமதம் செய்து வருகிறார்கள். அவ்வாறு காலதாமதம் செய்யாமல் உடனடியாக அந்த பம்ப் செட்டுகளுக்கு சர்விஸ் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரப் பம்ப் செட்டுகள் பொருத்தி விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் கடன் உதவி செய்து வருகிறார்கள். அந்தக் கடன் உதவிகளை விவசாயப் பெருமக்கள் பெறவேண்டுமென்றால், அவர்கள் முதலிலே மின்சார போர்டிடம் இருந்து சர்டிபிகேட் பெற்று அவ்வாறு சர்ட்டிபிகேட் கிடைத்தால் தான் மின்சார பம்ப் செட்டுகளுக்கு கடன் வழங்கப்படுகிறது. அவ்வாறு சர்டிபிகேட் கிடைக்கவில்லையென்று சொன்னால் அவர்களுக்கு கடனை சாங்ஷன் செய்யாமல் விட்டு விடுகிறார்கள். விவசாயம் முன்னேறவும், விவசாயிகள் முன்னேறவும் வாய்ப்பாக மின்சார இலாகாவினர் உடனடியாக அந்த சர்டிபிகேட்டைக் கொடுத்து அவர்களுக்கு அந்தக் கடன் உதவி கிடைப்பதற்கு வழி செய்யவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் பல ஹரிஜனக் காலனிகள் இருக்கின்றன. இன்னும் மின்சார வசதி இல்லாமலே அந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள ஹரிஜன மக்களுக்கெல்லாம் மின்சார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், குறிப்பாக ராமசமுத்திரம் என்ற கிராமத்தில் 75 பம்ப் செட்டுகள் அமைத்து விவசாயிகள் மின்சாரம் வேண்டுமென்று மின்சார இலாகாவுக்கு மனுச் செய்து 1½ வருஷங்கள் ஆகியும்கூட, மின்சார இலாகாவினர் உடனடியாக அக்ரிமெண்ட் செய்து சர்விஸ் கனெக்ஷன் கொடுக்காமல் மிகவும் காலதாமதம் செய்து வருகிறார்கள். அதே போல் 40 பம்ப் செட்டுகளுக்கு கொண்டையான்குப்பம் என்ற கிராமத்திலிருந்து மனுச் செய்தும், இதுவரை மின்சார இலாகாவினர் எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. இந்த மாதிரிக் காலதாமதங்கள் ஏற்படுவதன் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயத்தைப் பெருக்க நல்ல ஏது இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த விவசாயிகளுக்கு உடனடியாக சர்விஸ் கனெக்ஷன் கொடுத்து அந்த விவசாயப் பெருங்குடி மக்களை நல்லபடியாக முன்னேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இளங்காடு கிராமத்தில் இரண்டு வருஷங்களுக்கு முன்பு

தெரு விளக்குகள் போட வேண்டுமென்று மனுக்கள் அனுப்பியும் இதுவரை அந்தக் கிராமத்தில் தெரு விளக்குகள் போடப்பட வில்லை. இவ்வாறு காலதாமதம் செய்யாமல் உடனடியாகத் தெரு விளக்குகளைப் போட்டுத் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

11-30 a.m. கடைசியாக, ஒன்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். தனிப் பட்ட நபர்கள் மின்சாரத் தொழில்கள் செய்து வருகிறார்கள். வீடு களுக்கு, பம்ப் செட்களுக்கு, மற்றவைகளுக்கு வொயரிங் செய்து பிழைக்கும் தொழிலாள மக்களுக்கு 1,000 ரூபாய் அட்வான்ஸாக டெப்பாசிட் கட்டினால்தான் அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப் படும், அப்போதுதான் அவர்கள் வேலை செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். அவர்கள் அதைக் கட்ட சக்தி இல்லாததால் வேலை தெரிந்தும்கூட பணம் கட்ட சக்தி இல்லாத காரணத்தினால் அநேக மக்கள் வேலை இன்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த 1,000 ரூபாயை 100, 150 ரூபாயாகக் குறைத்து அவர் களுக்கு உதவி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு இத்துடன் என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. பொன்னையன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மின்சார போர்ட் நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் மாநிலம் கடந்த பத்து ஆண்டுகளில் தொழில் துறையில் கூடுமான வரையில் முன்னேறி யிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க அவசியமில்லை. ஏனைய மாநிலங்கள்கூட நம் மாநிலத்தைப் பார்த்து பொறாமைப்படக் கூடிய விதத்தில் நம் மாநிலம் தொழில் துறையில் வளர்ந்து கொண் டிருக்கிறது. விவசாயத்தை எடுத்துக் கொண்டாலும் அதிலும் சளைத்ததல்ல. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 63 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு வரும் என்று அதிகாரிகள் கணக்கிட் டிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் இந்த இரண்டின் முன்னேற்றத்திற்கும் மூலகாரணம் எலக்ட்ரிசிடிதான் என்பதை நான் தெளிவுபட எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த மாதிரித் தொழிலும் விவசாயமும் பெருகும்போது பொருளாதாரம் கூடவே வளர்ந்து கொண்டு வருகிறது. இதற்கெல்லாம் காரணம் மின் சக்திதான் என்று ஏற்கெனவே நான் கூறியிருக்கிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்ட துவக்கத்தில் பெர் காப்பிட்டா கன்சம் ஷன் ஆஃப் எலக்ட்ரிசிட்டி 12 யூனிட்டாக இருந்தது. முதல் திட்ட இறுதியில் அது 21 யூனிட்டாக மாறியது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் அது 60 யூனிட்டாக மாறியது. இப்போது தனி நபர் 120 யூனிட் அளவிற்கு உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள் என்றால் இந்த டிபார்ட்மெண்டின் செயலைப் பற்றிச் சொல்வதற்கு எனக்கு வார்த்தைகளே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட நாம் எழுதியிருக்கும் மெகாவாட் ஆனது போதாது என்றுதான் சொல்வேன். காரணம் 50,000 பம்ப் செட்களுக்கு நாம் கனெக்ஷன் கொடுக்கப் போகி றோம். நான்காவது திட்டத்தில் ஏழைகளுக்கு எல்லாம் மனை இடம் கொடுக்கப் போகிறோம். அப்படி மனையிடம் கொடுக்கிற



போது எல்லோரும் வீடுகள் கட்டுவார்கள். அப்படி வீடுகள் கட்டும்பட்சத்தில் அவ்வளவு பேர்களுக்கும் நாம் கரெண்ட் கொடுத்துத் தீர வேண்டும். காரணம் சமுதாயம் வளர வளர வசதிகளைப் பெருக்க வேண்டும் என்பது இயற்கை. மூன்றாவது திட்டத்தில் ஏற்கனவே 195 மெகாவாட் குந்தா நீர் மின்சாரத் திட்டத்தில் நாம் முடிவு கண்டோம். மேற்கொண்டும் ஏற்படுத்த விருக்கும் குந்தா மின் திட்டம் 4, மேட்டூர் சுரங்க வழி நீர் மின் திட்டம் பெரியாறு நீர் மின்திட்டம் இரண்டாம் நிலை, பாம்பிக் குளம்—ஆளியாறு நீர் மின் திட்டம் (சோலையாறு 1, சர்க்கார் பதி) என்று இவற்றிலிருந்து 385 மெகவாட் எதிர் பார்க்கிறோம். ஆனால் இவற்றிலிருந்து அப்பர் ஆளியாறு திட்டம், சோலையாறு இரண்டாம் பதி இவை விடப்பட்டிருக்கிறது. காரணம் என்ன வென்று தெரியவில்லை. நம் தேவை அதிகமாக இருக்கிற காரணத் தினால் நான் சில சஜெஷன் கூற விரும்புகிறேன். அமராவதி ஆற்றின் இணை நதி தேன் ஆற்றைக் குறித்து இன்வெஸ்டிகேஷன் நடத்தினார்கள். கடமானை ஆற்றைக் குறித்து இன்வெஸ்டிகேஷன் நடத்தினார்கள். ஆனால் அவை என்னவாயிற்று என்று தெரியவில்லை. இதையும் நாம் திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக ஹொகனக்கல் திட்டம் போன்று வால்பாறைப் பிராந்தியத்திலும் ஒரு பெரிய திட்டத்தை உருவாக்கலாம். அங்கு இரண்டு ஆறுகள்; ஆனைமலை ஆறு, இடமலை ஆறு என்று இரண்டு ஆறுகள் ஓடுகின்றன. சோலையாறு டாமிற்கு 3,000 அடிக்கு மேல் உற்பத்தியாகிறது—அது இன்டர் ஸ்டேட் ப்ராப்ளம்—அதை இன்வெஸ்டிகேட் செய்தால் ஹொகனக்கல் திட்டம் போன்று ஒரு பெரிய திட்டமாகும் அது. அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரி ஜனங்கள் சேரிகளுக்கு லைட் போடுவதில் பூனைக்கு பால் வைத்த மாதிரி இருக்கிறது. பாதையில் ஒன்றிரண்டு லைட்கள் போட்டு விட்டு போய் விடுகிறார்கள். அதை டிபார்ட்மெண்டார் அவசியம் கவனித்து கண்காணிக்க வேண்டும். சேரிகள் உள்ளுக்குள் லைட்கள் போட வேண்டும். ஒரு பஞ்சாயத்து ஒரு தீர்மானம் போட்டால் முதலில் சேரிகளுக்கு போட்டு விட்டு மற்ற இடங்களுக்கு போட வேண்டும் என்று தீர்மானம் போட வேண்டும். அப்படிச் செய் தால்தான் நன்றாகயிருக்கும்.

சேரிகளுக்கு லைட்கள் போடுகிறோம் என்று சொல்லி பாதையில் லைட் போடுகிறார்கள். சேரிக்குள் போட வேண்டும், இன்டீரியரில் போட வேண்டும். நான் கனம் அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்தில் லைட் போட வேண்டுமென் றால். அவசியம் சேரிக்குள் முதலில் லைட் போட வேண்டும். இன்டீ ரியரில் லைட் போட வேண்டும். அமைச்சர் அவர்களிடம் ஒரு ஸ்பெஷல் வேண்டுகோள் என்னவென்றால் நாங்கள் மலைப் பிராந்தி யத்தில் வாழ்கிறோம். அங்குள்ள தொழிலாள மக்கள் எல்லாம் இந்த நாகரீக காலத்தில்கூட காட்டுமிராண்டிகள் போன்று ஆண் களும் பெண்களும் இராக்காலங்களில் மண் ஜலம் கழிக்கக்கூட வெளியே வர பயப்படுகிறார்கள். காரணம் அங்கு காட்டு மிருகங்கள் அதிகம். ஆகவே தயவுசெய்து லேபர் லைன்களுக்கு முன்னால் ஒரு லைட் அவசியம் போட வேண்டும். இதை நான் பல காலமாக

கேட்டுக் கொண்டிருக்கிறேன். நம் தொழில் துறை அமைச்சர் அவர்கள் வந்த காலத்திலிருந்து நம் மாநிலம் தொழில் துறையில் மிகவும் முன்னேறி வந்திருக்கிறது. மின்சார வசதி பெருகி நீர் மின்சாரம், அனல் மின்சாரம், அணு மின்சாரம் என்று கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். தொழில் துறையில் மற்ற மாநிலங்கள் எல்லாம் நம்மைப் பார்த்து பொறாமைப்படக்கூடிய அளவிற்கு நம் தொழில்துறை அமைச்சர் அவர்கள் நம் மாநிலத்தை, நம் தமிழகத்தை முன்னிலைக்கு கொண்டு வந்து விட்டார்கள். ஆகவே அவர்கள் இதை அவசியம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, மின்சார வசதி பற்றி மலை ஜாதி மக்கள், பின் தங்கிய மக்கள் இவர்களின் முன்னேற்றத்திற்காக நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். 28-ம் தேதியே என் தொகுதிக்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். கோமனூர், காட்டையாம்பட்டி இந்த இடங்களுக்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். இப்போதுகூட அப்படி கேட்கிறேனே என்று சபாநாயகர் அவர்கள் வருத்தப்படுவார்கள். மலை ஜாதி மக்கள் மலைகளின் மேல் இருக்கிறார்கள். வாழவந்திக்கு ஒரு பஸ் போகிறது. அதுவரைதான் போகிறதே தவிர, அங்கிருந்து 30 மைல் தூரமுள்ள அரப்பளீஸ்வரன் கோவிலுக்கு அது போவது இல்லை. அங்குள்ள கோவிலுக்கு மக்கள் போக வேண்டியிருக்கிறது. ஆடி 18-ம் தேதி அங்கு விழா வருகிறது. அங்கே நடந்தே போகவேண்டியிருக்கிறது. அதுவரை நல்ல ரோடு போட்டால் ஜனங்கள் போக வர சௌகரியமாக இருக்கும். அதற்கு மின்சார வசதியில்லை. நான் அந்த இடத்திற்குப் போய் 15 வருடங்கள் ஆகி விட்டது. அதற்குப்பக்கத்தில் ஆண்டியப்பன் கோவில் மேலே இருக்கிறது. அது போன்று காளியம்மன்கோயில் இருக்கிறது. அங்கும் ஆடி 18-ம் தேதிதான் திருவிழா. தேர் முதலியவை எல்லாம் இருக்கும். நான் இந்த இடங்களுக்குப் போய் 10, 15 வருடங்கள் இருக்கும். இங்கெல்லாம் மின்சார வசதியோ, ரோடு வசதியோ, ஆஸ்பத்திரி வசதியோ இல்லை. இதனால் அங்குள்ள மக்கள் நாகரீகமாக இருக்கமாட்டார்கள். சவரம் செய்யும் தொழிலாளர்கள், நாவிதத் தொழிலாளர்கள் இவர்கள் எல்லாம் கிடையாது. இதனால் இவர்கள் நாகரீகமாக இருக்கமாட்டார்கள். இந்த வசதிகள் எல்லாம் இருந்தால் இவர்களும் நாகரீகமாக இருப்பார்கள். நல்ல முறையில் முன்னுக்கு வருவார்கள். ஆகவே, இந்த இடத்திற்கு மின்சார வசதி உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலை பகுதியில் கிராமங்களில் எல்லாம் ஒரே இருட்டாகத்தான் இருக்கும். மாலை நேரங்களில் மஞ்சு வந்துவிட்டால், ஒரே இருட்டாக இருக்கும், எதிரே ஆட்கள் வருவதுகூட தெரியாது. இதனால் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போகமுடியாது. இதைப்பற்றி நான் முன்னாலேயே இங்கேயே பேசியிருக்கிறேன். ஏதோ மின்சார வசதி செய்து கொடுப்பதற்காக 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கி



யிருப்பதாக சொன்னார்கள். கலெக்டர் அவர்கள் என்னையும் கூட கூட்டிக்கொண்டு அந்த இடங்களையெல்லாம் போய்ப் பார்த்தார்கள். வாழவந்தி போன்ற இடங்களை எல்லாம் பார்த்தார்கள். இப்போது அதற்காக என்ன செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த இடத்தில் மலைஜாதியிலிருந்து ஒரு சேர்மென்தான் உண்டு. அவரிடம் கேட்டதற்கு இதுவரையிலும் எந்த விதமான வேலையும் இன்னும் நடக்கவில்லை என்று சொன்னார். அதற்கு மேலே பால் மலை ஒன்றிருக்கிறது. அங்கு ரோடு வசதியில்லை. சித்தன் கோவில் ஒன்றிருக்கிறது. அங்கும் மின்சாரம் வசதி கிடையாது. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து உடனடியாக இந்த இடங்களுக்கு மின்சார வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் துவக்கிய இந்த மின்சாரக் கழகத்தின் விவாதத்தில், என்னுடைய கழகத்தைச் சேர்ந்தவர்கள் பேசிய கருத்தோடு ஒட்டி நானும் சில கூறலாம் என்று நினைக்கிறேன். நம்முடைய மாநிலத்தில் மின்சார இலாகா திறம்பட செயலாற்றுகின்றது என்று எங்களைச் சார்ந்தவர்கள் கூறுவதில் அரசாங்கம் எந்த விதமான சந்தேகத்தையும் கொள்ளலாகாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும் மின்சார இலாகா திறம்பட செயலாற்ற வேண்டுமென்று வற்புறுத்துகின்றோம். வற்புறுத்துகின்ற சமயத்தில் ஏதோ இப்போதிருக்கின்ற மின்சார இலாகாவினுடைய சேர்மென் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து செல்லுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகை காட்டுகின்றார்கள் என்று தயவுசெய்து யாரும் கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் எங்களுடைய கழகத்திலிருந்து சொல்லுகின்ற குறைபாடுகளை எல்லாம் மின்சாரக் கழகத்தின் மூலமாக செயல்படுத்த வேண்டும் என்றுதான் எங்களுடைய அவா. நாங்கள் இதைப்பற்றி கூறுகின்ற நேரத்தில் மின்சார இலாகாவினுடைய தொழிலாளர்கள்—இந்த தொழிலாளர்களினுடைய நலன்களையெல்லாம் இந்த அரசாங்கம் சரியாக பேணிப் பாதுகாக்கவில்லை என்பதை நாங்கள் கூறாமல் இருப்பதற்கில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இன்றையதினம் மின்சார இலாகாவில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு பல குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை எல்லாம் தீர்க்காமல் இருக்கின்ற இந்த அரசாங்கத்தை அவர்கள் கேட்டார்கள். அரசாங்கம் அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக அதை ஆர்பிட்ரேஷனுக்கு ரெஃபர் செய்ய மறுத்தது. கடைசியாக தொழிலாளர்கள் தங்களுக்கு சட்ட மன்றத்தின் மூலமாக கிடைத்திருந்த ஒரே ஆயுதமாக இருக்கின்ற இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டின் பிரகாரம் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தங்களுடைய கோரிக்கைகளை இந்த அரசாங்கம் மாற்றாந் தாய் மனப்பான்மையில் இருந்து எதையும் நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் என்பதை முறையிடுவதற்காகவும் அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காகவும்,

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] 31st July 1965

நீதி மன்றத்தில் ரிட் பெட்டிஷன் போட்டார்கள். அதில் சில கோரிக்கைகளை கேட்டிருந்தார்கள். . . .

(1) Fixation of dearness allowance.
(2) Claim og bonous.
(3) Provision for provident fund and gratuity claims.
(4) Fixation of pay of supervisors.
(5) Permanency of NMR workers.
(6) Abolition of contract system.

இப்படி முக்கியமான ஆறு சாராம்சங்களை எல்லாம் குறிப்பிட்டு குறைகளைத் தீர்ப்பதற்காக உயர்நீதி மன்றத்தில் கேட்டார்கள். இந்த அரசாங்கம், மற்றவர்களுக்குப் புத்தி சொல்லக்கூடிய அரசாங்கம், மற்ற தொழிலாளர்களுக்கு யோசனை சொல்லக்கூடிய அரசாங்கம், அரசாங்கத்தினுடைய மின்சார இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு, அரசாங்க ஸ்தாபனத்தில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கவில்லை, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்கிறது. ஆகவே அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு வேண்டிய நீதி வேண்டும் என்று தொழிலாளர்கள் கேட்டார்கள். உயர் நீதி மன்றத்தில் ஜட்ஜ் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லியிருப்பதில் ஒரே ஒரு வரியை மட்டும் படிக்கலாம் என்று நினைக்கிறேன்.

Government is expected to take an impartial attitude and not to deal with the matter in a partisan attitude.

ஒரு தனிப்பட்ட முதலாளி தங்களுடைய தொழிலாளர்களை நடத்துவது போல் மின்சார இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களை நடத்துவது. மின்சார இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி கொடுக்கவேண்டும் என்று உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு அளித்தார்கள். அரசாங்கம் உயர்நீதி மன்றத்தை எப்போதும் மதித்து நடக்கவேண்டும். மதித்து நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. உயர்நீதிமன்றம் கொடுத்திருக்கின்ற தீர்ப்பு சாலச் சிறந்தது அல்ல என்று இப்போது அந்தத் தீர்ப்பின்மேல் அரசாங்கம் அப்பீல் செய்திருக்கிறது. உயர்நீதிமன்றத்தில் இரண்டு தரப்பிலிருந்தும் சொல்லப்பட்டவைகளை சீர்தூக்கிப் பார்த்து முடிவு சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால் அது அரசாங்கத்தை மட்டும் பாதிக்கிறது என்று எப்படி சொல்ல முடியும்? பல லட்சக் கணக்கான ரூபாய்களை தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டி இருக்குமே என்ற ஒரே காரணத்திற்காக அரசாங்கம் அப்பீல் செய்து கொள்வது முறையா என்று தான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மற்றவர்களுக்கு புத்தியையும், யோசனைகளையும் சட்டத்தையும் சொல்லுகின்ற இந்த அரசாங்கம், அதே அரசாங்கத்தின்கீழ் இருக்கின்ற மின்சார இலாகாவில் வேலை செய்கின்ற தொழிலாளர்களைக் காப்பாற்ற முன்வர மறுக்கிறது. அதில் இவர்கள் தவறியிருக்கிறார்கள். ஒன்று மின்சார இலாகாவில் வேலை செய்கின்றவர்கள் டிபார்ட்மெண்ட் சேர்வன்ட்சா? அல்லது



31st July 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

போர்ட் உத்தியோகஸ்தர்களா? மின்சார போர்ட் என்று வைத்திருந்தால், எதற்காக இதை மறுக்க வேண்டும்? மின்சார போர்டிலிருந்து தனியாக 7½ கோடி அளவுக்கு வட்டி வாங்குகிறார்கள். வேறு காரியங்களுக்கெல்லாம் மின்சார போர்ட் தனிப்பட்ட ஸ்தாபனம் என்று சொல்லுகிறார்கள். அதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய வயிற்றில் அடித்துத்தான் மின்சார இலாகா வளரவேண்டும் என்று விரும்புகிறார்களா என்கின்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன். இதைப் பற்றி சேர்மென் அவர்கள் நன்றாக பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, தள்ளாத வயதில் பணியாற்றும் சேர்மென் அவர்கள், இந்த தொழிலாளர்களுடைய வயிற்றில் பால் வார்க்க வழிசெய்யவேண்டும், அவர்களுடைய பதவி காலத்திலேயே இதற்கான வழிவகைகளை அவர்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசாங்கம் சோஷியலிச சமதர்ம அடிப்படையில் இயங்குகிறது என்று சொல்லுகிறார்கள். எது சோஷியலிசம்? ஒரு தனிப்பட்ட நபருக்கு பெருவாரியான அளவில் நடத்தப்படுகின்ற மின்சார ஸ்தாபனம் அமைப்பதற்கு அனுமதி கொடுப்பதுதான் சோஷியலிசமா? தூத்துக்குடியில் 250 மெகாவாட்ஸ், உற்பத்தி செய்கின்ற மின்சார நிலையத்தை ஏற்படுத்தப்போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதைப்பார்த்து, வரவேற்கிறோம், சந்தோஷப் படுகிறோம், ஆரவாரம் செய்கிறோம். ஆனால் இதை யார் ஏற்படுத்தப்போகிறார்கள்? தனிப்பட்ட தர்மதேஜோ என்கின்ற தனிப்பட்ட நபர், 18 கோடி, 19 கோடி மூலதனம் போட்டு இந்த மின்சார நிலையத்தை ஏற்படுத்தப்போகின்றார்கள். அதற்காக அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்களுக்கு கொடுத்து அரசாங்கம் கடனை தீர்த்துக்கொள்ளும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தனிப்பட்ட நபருக்கு, ஜெயந்தி ஷிப்பிங் கார்ப்பரேஷன் தலைவர் ஒருவருக்கு 19 கோடி ரூபாய் மூலதனத்தில் இந்த மின்சார நிலையத்தை ஆரம்பிப்பதற்கு அனுமதித்திருக்கிறார்கள் என்றால், இதுதான் காங்கிரஸ் அமைச்சர்கள் வளர்க்கின்ற ஜனநாயகமா என்று கேட்க விரும்புகிறேன். இதுதான் காங்கிரஸ் மந்திரிகள் ஏற்படுத்தப் போகின்ற ஜனநாயக சோஷியலிசமா என்று கேட்க விரும்புகிறேன். ஏதோ நமது தொழில் அமைச்சர் அவர்கள் ஜப்பானுக்குப் போவதாக சொல்லுகிறார்கள். . . .

MR. SPEAKER: I think the hon. Member is going out of the way.

SRI V. KRISHNAMOORTHI: I am speaking about the erection of machinery by an individual.

MR. SPEAKER: The hon. Member is going into the economic policy about which he could very well talk during the general discussion on the budget.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அமைச்சர் அவர்கள் ஜப்பானுக்குப் போகப் போகிறார்கள். அங்கு போய் பல நல்ல அபிவிருத்திகளை எல்லாம் பார்த்து வருகின்றவர்கள், வடக்கேயுள்ள ஒரு தனிப்பட்ட நபருக்கு 19 கோடி மூலதனத்தில் ஒரு மின்சார நிலையத்தை ஆரம்பிப்பதற்கு எதற்காக அனுமதி கொடுக்க வேண்டும் ? நெய்வேலியில் 300 மெகாவாட்ஸ் உற்பத்தி செய்யக் கூடிய மின்சார நிலையத்தை இன்றையதினம் பல ரஷ்ய தொழில் வல்லுனர்கள் இரவும் பகலும் இயக்கிக்கொண்டிருக்கிறார்கள். ரஷ்ய நாட்டு விஞ்ஞான சகோதரர்கள் நினைக்கிறார்கள், இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கிறது, இந்த நாட்டில் சோஷியலிச தத்துவம் இருக்கிறது, அப்பேர்ப்பட்ட இந்த நாட்டுக்கு நம்முடைய உதவியை செய்து கொடுக்கின்றோம் என்று. அந்த அளவில் 20, 30 கோடி ரூபாய் அளவில் இப்பேர்ப்பட்ட மின்சார சாதனங்களை பொருத்திக் கொண்டிருக்கிறார்கள் நெய்வேலியில். அதே சமயத்தில் சென்னை அரசாங்கம் தனிப்பட்ட ஒரு நபருக்கு 19 கோடி, 18 கோடி ரூபாய் அளவில் மூலதனம் போடக்கூடிய மின்சார நிலையத்தை இயக்குவதற்கு அந்தத் தனி நபரோடு இந்த அரசாங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது என்றால் இந்த நாட்டில் சோஷியலிசம் வளருகிறது என்று அவர்கள் கருதுவார்களா ? ஏன் இந்த அரசாங்கம் தனிப்பட்டவர்கள் மூலமாக அதை ஏற்றுக்கொள்ளவேண்டும், ஏன் அதை நேரடியாகச் செய்யக் கூடாது என்றுதான் நான் என்னுடைய குற்றச்சாட்டினைச் சொல்ல விரும்புகிறேன்.

அதே போல்தான் இந்த மின்சார இலாகா இன்னும் திறம்பட வேலை செய்யவேண்டும் என்று சொல்லுகிறேன். என்னுடைய தொகுதியில் பல கிராமங்கள் இருக்கின்றன. ஒரு வருஷம், 1½ வருஷம் ஆகியும், டெபாசிட்டுகளெல்லாம் கட்டப்பட்டும் கூட, இன்னும் கனெக்ஷன் கொடுக்கவில்லை. இங்கே சேர்மனிடம் வந்து சொன்னால் உடனே அவர்கள் சூப்பரின்டெண்டிங் என்ஜினீயருக்கு எழுதுகிறார். சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் அதன் மீது நடவடிக்கை ஏதும் எடுக்காமல் அங்கு இருக்கிறவர்கள் அதை உதாசீனப்படுத்துகிறார்கள். ஒரு எஸ்டிமேட் ஸாங்க்ஷன் ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கனெக்ஷன் கொடுத்தாகவேண்டும் என்று இருக்கவேண்டும். 1961-ல் ஸாங்க்ஷன் ஆன எஸ்டிமேட்டுகள் பல கிராமங்களில் இன்னும் நிறைவேற்றப்படாமல், கனெக்ஷன் கொடுக்கப்படாத நிலையில் இருக்கிறது. டெபாஸிட்டை வசூலித்து விடுகிறார்கள். மின்சார போர்டு கடன் வெளியிடும்போது கட்ட வேண்டிய டெபாஸிட்டில் அட்ஜெஸ்ட் செய்து கொள்கிறோம் என்று சொல்லி கடன்களை வசூலித்து 2-3 வருஷங்கள் ஆகியும் இன்னும் நிறைவேறாத நிலையில் இருக்கிறது. சர்வீஸ் கனெக்ஷனுக்காக யார் டெபாஸிட் செலுத்தியிருக்கிறார்களோ, அல்லது சர்வீஸ் கனெக்ஷனுக்காக டெபாஸிட் வசூல் செய்கிறார்களோ, வசூலித்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே சொல்ல விரும்புகிறேன்.



அதேபோல என்னுடைய தொகுதியில் 63 அல்லது 64 கிராமங்கள் இருக்கின்றன. பல கிராமங்களிலுள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் என்னிடத்தில் நேரடியாக வந்து சொல்லுகிறார்கள். 'ஆர்.டீ.ஓ.-விடமிருந்து சால்வென்ஸி சர்டிஃபிகேட் வாங்குகிறோம். அதற்கே ஆறு மாதங்கள் ஆகின்றன. அதற்கு பிறகு டெபாஸிட் கட்டுகிறோம். எல்லாம் ஆகியும் கனெக்ஷன் தர மறுக்கிறார்கள்' என்று என்னிடத்தில் வந்து சொல்லுகிறார்கள். மறுக்கிறார்கள் என்றால் மின்சார இலாகா மறுக்கிறது என்று நான் சொல்லவில்லை, கீழே இருக்கக்கூடிய சிறிய அதிகாரிகள் இந்தக் கோரிக்கைகளை கவனிக்காமல் அசட்டையாக இருப்பதால் தான் செய்யாமல் இருக்கிறார்கள். இதை அரசாங்கம் நன்றாக கவனித்துப் பரிசீலிக்க வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்களெல்லாம் நமது மின்சார இலாகா நல்ல திறமையோடு வேலைகளைச் செய்கிறது என்று வெளியிடங்களிலெல்லாம் சொல்லுகிறோம். அதே சமயத்தில் ஒரு மார்வாடி கார்ப்பரேஷனிடத்திலிருந்து வட்டி வாங்குவது போல, சேஷசாயி கம்பெனிக்கு பணத்தைக் கொடுத்து வட்டி வாங்குவது போல சர்க்கார், மின்சாரக் கார்ப்பரேஷனிடமிருந்து 7½ கோடி ரூபாய் ஏன் வட்டி வாங்கவேண்டும். சர்க்கார் மக்களிடமிருந்து வட்டிக்கு வாங்கி மின்சாரக் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்திருந்தால் வட்டி வாங்கட்டும், அல்லது மத்திய சர்க்காரிடத்திலிருந்து வாங்கிக் கொடுத்திருந்தால் வட்டி வாங்கட்டும். ஆனால் மின்சாரக் கார்ப்பரேஷன் ஏற்படுத்திய காலத்தில் 80 கோடி ரூபாய் மூலதனம் என்று போட்டு, வெள்ளையர்கள் கட்டிய அணைகளுக்கு மதிப்பைப் போட்டு, வெள்ளையர்கள் ஏற்படுத்திய மின்சார நிலையங்களுக்கு மதிப்பைப் போட்டு, அதையெல்லாம் சேர்த்து 80 கோடி ரூபாய் மூலதனம் என்று சொல்லி அதற்கு 3¾ கோடி ரூபாய் வட்டி கொடுக்க வேண்டுமென்று வட்டி வாங்குவது எந்த வகையில் நியாயம் என்று கேட்கிறேன். இந்த முறையில் வாங்கும் வட்டியை குறைப்பதன்மூலம் தொழிலாளர்களுடைய நிலையை மேம்பாடு அடையச் செய்யமுடியும். இவைகளையெல்லாம் நல்ல முறையில் பரிசீலித்து மாற்றாந்தாய் மனப்பான்மையில் செல்லாமல் நல்ல முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மின்சாரக் கழக நிதி நிலை அறிக்கையை வரவேற்கிறேன்.

இந்த ராஜ்யத்திற்குப் பெருமை தரக் கூடிய இனங்களில் மின்சார விஸ்தரிப்பு ஒன்று. குறிப்பாக மற்ற ராஜ்யங்களோடு ஒப்பு நோக்கும்போது அதிக அளவு கிராமங்களுக்கு மின்சாரம் அளித்திருப்பது ஒன்று. விவசாயத்திற்கு கணிசமான அளவுக்குப் பம்ப் செட்டுகளுக்கு இணைப்புகள் கொடுத்திருப்பது மற்றொன்று. இவைகளின் மூலம் இந்த ராஜ்யத்தின் நிலைமை தேசத்தின் முன்னே உயர்ந்திருக்கிறது.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [31st July 1965

தூத்துக்குடியில் முதலில் 100 மெ. வா. அளவுக்கு திட்டமிடப்பட்டது. இப்போது 250 மெ. வா. திட்டமாக மாற்றி உயர்த்தியிருப்பது பாராட்டத்தக்கது. இன்னும் எண்ணூரில் 340 மெ. வா. அளவுக்குக் கிடைத்தும் கூட நான்காவது திட்ட இறுதியிலும் சற்றேறக்குறைய 500 மெ. வா அளவுக்கு உற்பத்தி குறைவாக இருக்கும் என்று சொல்லும்போது அது நாட்டில் தொழில் அபிவிருத்தியின் அளவைக் குறிப்பதாக இருக்கிறது. மூன்றாவது திட்ட முடிவில் 250 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்து, நான்காவது திட்டத்தில் மேலும் 250 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு இணைப்புக் கொடுக்க வழி வகை காணப்பட்டிருக்கிறது. பகல் நேரத்தில் விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுக்காமல் இருப்பதால் கஷ்டம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சற்றேறக்குறைய 69 தாலூக்காக்களில் இத்தகைய கஷ்டம் முற்றிலும் நீக்கப்பட்டிருக்கிறது. மற்ற சில தாலூக்காக்களிலும் பகலில் 6 மணி நேரம் தண்ணீர் கொடுக்க வழி செய்திருப்பது ரொம்பவும் சந்தோஷம். திருநெல்வேலியிலே வரக் கூடிய நான்காவது திட்டத்திலே சற்றேறக்குறைய 17 ப்ளஸ் 11 ஆக 28 கோடியில் அப்பர் தாம்பரபரணி, அப்பர் மணிமுத்தாா ஆகிய இரண்டு திட்டங்களை அரசாங்கமும் மின்சாரக் கழகமும் வைத்திருக்கிறது. இதிலே என்னுடைய வேண்டுகோள் ஒன்று உண்டு. பாபநாசம் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது அது விவசாயத் திட்டம் என்றே எண்ணப்பட்டது. மின்சார இலாகா மூலமாக உருவாகியதன் காரணமாக சிற்சில சமயங்களில் விவசாயத்திற்கு முன்பாத்தியதையா அல்லது மின்சாரத்திற்கு முன்பாத்தியதையா என்ற பிரச்னை இருந்திருக்கிறது. அப்பர் மணிமுத்தாறு திட்டத்தையும், அப்பர் தாம்பரபரணித் திட்டத்தையும் நிறைவேற்றும்போது விவசாயத்திற்கு எந்த விதஊனமும் ஏற்படாத அளவுக்குத் திட்டத்தை உருவாக்கும்போது உருவாக்கவேண்டுமென்று எனது வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிர்ஷ்டவசமாக மின்சாரக் கழகத்தின் நல்ல பணிகளுக்கு ஒரு அத்தாட்சி போல இயற்கையே உதவி நாம் மின் வெட்டிலிருந்து தப்பியிருக்கிறோம். கடைசி நேரத்தில் இயற்கை உதவி நல்ல பெயரைத் தந்திருக்கிறது. அனல் மின்சாரத் திட்டம் நல்லது தான். ஆனால் ஹைடல் பவர் திட்டத்திலே விவசாயிகளுக்கு ஊனம் வாராமல் நிறைவேறும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக திருநெல்வேலி பஞ்சப் பிரதேசமாக ஆகிவிட்டது. அந்தப் பகுதியில் வரட்சி ஏற்பட்டிருக்கிறது. கிணறுகளுக்கு பம்ப்செட் வைத்திருப்பதை உபயோகிக்க முடியாமல் இருப்பதால் உரிய கட்டணத்தில் சலுகை வழங்க வேண்டுமென்று கேட்பது இயற்கை தான். அதற்கு விசேஷ அதிகாரிகளை நியமித்தேனும், ஜில்லா பூராவிலும் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதால் கட்டணங்களில் சலுகை காட்ட முடியுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர்கள் பலர் சுட்டிக் காட்டியது போல, நானும் ஒரு கணக்கு எடுத்தேன். திருச்செந்தூர் தாலூகாவில் மாத்திரம் 450 கிராமங்கள், ஹரிஜன கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன.



31st July 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

ஆயிரக் கணக்கான சிற்றூர்கள் மின்சார இணைப்பிலிருந்து விடப்பட்டிருக்கின்றன. 1½ லட்சம் வருடாந்திர மான்யம் 3 லட்சமாக ஆகியிருப்பது போதாது என்பது எனது பணிவான கருத்து. மூன்றாவது திட்ட காலத்திற்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்சார இணைப்பைக் கொடுக்க முடியும், அதுதான் லட்சிய அளவு என்று கடந்த ஐந்து வருஷ காலமாகச் சொல்லிக்கொண்டிருந்தோம். இதை மாற்றி நான்காவது திட்டத்திற்குள் எல்லா குக்கிராமங்களுக்கும் கொடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை வலியுறுத்தும் அளவுக்கு மூன்றாவது திட்டத்தில் 22,000 கிராமங்களுக்கு மின் இணைப்பு ஏற்பட்டிருக்கிறது. கிராமங்கள் என்று குறிப்பிடும்போது ரெவின்யூ கிராமங்களைக் குறிப்பாக நான் கருதவில்லை. குக்கிராமங்களையும் சேர்த்துத்தான் இந்த எண்ணிக்கை வந்திருக்கிறது. நான்காவது திட்ட முடிவிற்குள் ஆயிரக் கணக்கான குக்கிராமங்கள் விடப்பட்டுப்போகக்கூடாது என்ற கவலை இருக்கிறது. ஹரிஜன நல இலாகாவிலிருந்து கூடுதல் மான்யம் பெற்றேனும் விசேஷ கவனம் செலுத்தி வருகிற ஐந்து வருஷ காலத்திற்குள் எந்தக் குக்கிராமமும் விடப்படாமல் பார்த்துக் கொள்ளும்பொறுப்பு கழகத்திற்கு இருக்கிறது என்று கருதுகிறேன். மீனவர்கள் வாழும் பகுதிகள் கடலோரத்தில் இருப்பதால் விடப்படும் நிலைமை ஏற்படும். மீனவர்கள் இலாகாவிலிருந்து மான்யம் பெற்றாவது இந்த உதவியைச் செய்ய முடியுமா என்று அரசாங்கம் யோசிக்கவேண்டும்.

எஸ்.பி. கிரேட் லைசென்ஸ் பெறுவதற்கு 1,000 ரூபாய் கட்டணம் 12-00 noon.
கட்டவேண்டும் என்பதைக் கணிசமாகக் குறைக்க முயற்சி செய்யவேண்டும். கிராமங்கள்தோறும் இணைப்புக் கொடுத்திருக்கும்போது பஞ்சாயத்து மூலம் கொடுக்கும் தெரு விளக்கு தாமதப்படுகிறது. எங்கள் பகுதியில் ஆழ்வார்திருநகரியின் தென் பகுதியில் 10-15 பஞ்சாயத்துக்களில் இந்த மாதிரி தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்போதே ஒரு வருஷ காலம் ஆகியும் 1967-வது வருஷம் ஜனவரி மாதத்தில் தான் தொடங்குவோம் என்று சொல்லக் கூடிய முறையில் எனக்கே தகவல் வந்திருக்கிறது. பணம் காரணமாக கால தாமதமா அல்லது கருவிகள் காரணமாக தாமதமா என்று பரிசீலனை செய்யவேண்டும். விவசாயத் திட்டம் ஒன்றைக் கூட சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பழங்குளம் என்ற இடத்தில் திட்டம் சாங்ஷன் ஆகி ஒரு வருஷம் ஆகிறது. பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்குக் கூட இன்னும் தாமதம் ஆகிறது. இந்தக் குழுவின் தலைவருக்கும், அவர்களோடு கூட இருக்கக்கூடிய சகாக்களுக்கும் எவ்வளவு பொறுப்பும் வேக உணர்ச்சியும், உத்வேகமும் இருக்கிறதோ, அந்த அளவுக்கு உணர்ச்சியும், உத்வேகமும் அடித்தளத்திலுள்ள சிப்பந்திகளுக்கு எட்டவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு இதில் கவனம் செலுத்தி, இந்தக் குறைபாட்டைப் போக்கவேண்டும்.

திருநெல்வேலியில் சில சிறு, சிறு கைத்தொழில்கள் இருக்கின்றன. ஜாகரி ப்ரொடக்ஷன், அதாவது கருப்பெட்டி தயாரிப்பதற்காக, இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ

மின்சார அடுப்புகள் கொடுப்பதற்கும் மின்சாரம் கொடுத்து உதவுவதற்கும் வழிவகை செய்யப்படும் என்று முன்பே சொல்லப்பட்டது. அதற்கான வாக்குறுதியும் தரப்பட்டது. ஆனால், இது வரையிலும் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. அரசாங்கம் இதைப் பரிசிலனை செய்து, இதற்கு மின்சார வசதி செய்துதரவேண்டும்.

அடுத்தபடியாக, காயல்பட்டணம் வாட்டர் சப்ளை ஸ்கிமில், 12 கிராமங்கள், 80,000 ஜனத்தொகை . . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. பி. முருகையன் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, மின்சார போர்டின் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று ஆசைப்படுகிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே, மின்சாரத் துறை மிகவும் வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறது என்றால், உண்மையிலேயே அது பாராட்ட வேண்டிய ஒன்றாகும். இருந்தபோதிலும், மின்சாரம் வேகமாக வளர்ந்து வருகிற நேரத்தில், அதிலுள்ள சில குறைபாடுகளை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

இந்த மின்சார போர்டில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் நிரந்தர ஊழியர்களாக ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அது மின்சார போர்டில் உள்ள பெரிய குறையாக இருந்து வருகிறது. அதோடு மாத்திரமல்ல. இதற்கு முன்பு கனம் அங்கத்தினர்கள் எடுத்துத் தெரிவித்தபடி, மின்சாரக் கம்பிகளைப் போடுகிற நேரத்தில், சாமான்களை ஏற்றிச் செல்வதற்கு விவசாயிகள்தான் வண்டி கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். அந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் மின்சாரக் கம்பங்கள் நடுகின்ற நேரத்தில், கூலி ஆட்களை நியமிக்கும்பொழுது, அந்தந்தக் கிராமத்திலுள்ளவர்களை, வேலை செய்து உடனடியாக சம்பளத்தை வாங்கிக்கொண்டு பிழைக்கின்ற ஏழை விவசாயிகளைத்தான் அமர்த்துகிறார்கள். அவர்கள் ஏறத்தாழ 2, 3 மாதங்கள் வேலை செய்தும் கூட, அவர்களுக்கு அந்தக் கூலியிலிருந்து கிடைக்கவேண்டிய சம்பளப் பணம் கிடைக்கவில்லை. தினக்கூலிகள் சம்பளத்தை உடனடியாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையெல்லாம் மின்சார போர்டு கவனித்து, ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, எனது தொகுதியில் இருக்கிற சில குறைபாடுகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதி புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் இருக்கிறது. ஏறத்தாழ 101 பஞ்சாயத்துக்களையும், ஒரு நகராட்சியையும் உள்ளிட்ட என்னுடைய வட்டத்தில் சுமார் 15 பஞ்சாயத்துக்களைக் கொண்ட கிராமங்களுக்குத்தான் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கிராமங்களுக்கு இதுவரைக்கும் மின்சார





வசதி செய்து கொடுக்கப்படவில்லை. அங்கு ஏராளமான பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன, ஏராளமான கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. மூன்று ஆண்டு காலமாகியும், அங்கு இருக்கிற என்ஜினியரை அணுகியும், பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டும், அதற்குரிய கட்டணம் கட்டியும் மின்சார இணைப்புக் கொடுக்க மறுத்து விடுகிறார்கள். அது மாத்திரமல்ல, ஒரு பாழடைந்த கிணற்றில் இருக்கிற மோட்டார் மின்சார இணைப்பை அதற்குப் பக்கத்தில் ஒரு புதிய கிணறு வெட்டி, அந்தக் கிணற்றிற்கு அந்த மின்சார இணைப்பை மாற்றிக்கொடுப்பதற்கு, இரண்டு ஆண்டுகளாகக் கலெக்டரிடம் கூறியும், கலெக்டர் கூட்டுகிற விவசாயிகள் மகாநாட்டில் சொல்லியும், நேரடியாகப் பொறியாளரிடம் சொல்லியும், இதுவரையில் அந்த மின்சார இணைப்பு மாற்றிக் கொடுக்கப்படவில்லை. அதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

எங்கள் தாலூகா அலுவலகம் தாலூகா தலைநகரத்தில் இருக்கிறது. நான் இந்த மன்றத்திற்கு வந்தது முதற்கொண்டு இது பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அங்கு வேலை செய்யும் அலுவலர்களுக்கு நிரந்தரமாக மின்சாரம் இல்லையென்றால், அவர்கள் எப்படி வேலை செய்ய முடியும் என்பதை உணர்ந்து, தாலூகா அலுவலகத்திற்கு உடனே மின்சார இணைப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டும், இன்றுவரை அந்தக் கோரிக்கை கவனிக்கப்படாமல் இருப்பதன் காரணம் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அடுத்தபடியாக, 15 பஞ்சாயத்துகள் உள்ளிட்ட கிராமங்களுக்கு மின்சார வசதி இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். காம்பக்குடி, ஆலங்குடி ஆகிய இடங்களில் நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. நகரப் பஞ்சாயத்திலிருக்கும் 'ஹெல்பர்' தான் மற்றக் கிராமங்களுக்குச் சென்று விளக்கை அணைக்க வேண்டும், ஏற்ற வேண்டும். இதனால் சில கிராமங்களில் 10, 11 மணி ஆகிவிடுகிறது விளக்கை ஏற்றுவதற்கு. அது மாதிரி காலையில் 8, 9 மணி ஆகிவிடுகிறது விளக்குகளை அணைப்பதற்கு. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையில், இரண்டு, மூன்று சென்டர்கள் ஒன்றாக ஏற்படுத்தி, அந்த சென்டரில் 'ஹெல்பர்கள்' நியமனம் செய்து காலாகாலத்தில் விளக்குகளை ஏற்றி, அணைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஹரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி இன்னும் கொடுக்கப்படவில்லை என்று பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நானும் அதை மீண்டும் வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். என்னுடைய ஊரிலும் இப்படிப்பட்ட குறைகள் இருந்தன. இப்பொழுதுதான் ஓராண்டு காலத்திற்கு முன்பாக, அந்தக் குறை நிவர்த்திக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தெரு விளக்குக் கம்பங்களில் பல நாட்களாக பல்புகள் இல்லாது இருப்பதை போக்க

[திரு. பி. முருகையன்] 31st July 1965

நடவடிக்கை எடுப்பதுடன் இப்படிப்பட்ட நிலைமை இன்னும் பலதரப்பட்ட கிராமங்களில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பதினைந்து பஞ்சாயத்துக்குட்பட்ட ஊர்களில் கூட ஹரிஜன காலனிகளுக்கு இன்னும் மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை. நான் இதுபற்றிப் பல முறை எடுத்துக் கூறியும், கலெக்டர் அவர்களிடமும் கூட்டங்களிலும் தெரிவித்தும், நாளை வருகிறோம், இதோ வருகிறோம் என்று கூறுகிறார்களே அல்லாது, இது வரையில் அந்த ஹரிஜனக் காலனிகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. நான் கொஞ்சம் கடுமையாகக் கூடக் கலெக்டர் கூட்டிய கூட்டங்களில் மின்சாரப் பொறியாளர் அவர்களிடம் சொன்னேன். நான் கோபமாகக் கூடப் பேசியும், அவர்களைக் கெஞ்சிக் கேட்டும் இதுவரையில் புதுக்கோட்டையில் இருக்கிற சவுத் மதுரை எலக்ட்ரிஸிடி கார்ப்பரேஷன் அதிகாரிகள் அதைப்பற்றிக் கொஞ்சம் கூடக் கவனிக்காமல் இருக்கிறார்கள். இருக்கிற பணம் எல்லாம் செலவழிக்க முடியவில்லை என்று கணக்குப் போடுகிறார்கள். அதிகமான தொகை புதுக்கோட்டை டிவிஷனில் மிஞ்சி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கொடுக்கிற திட்டங்களைச் சரியான முறையில் செயல்படுத்துவதில்லை. ஒரு கிராமத்தில் 10 கிணறுகளுக்கு மின்சாரம் வேண்டுமென்று சொன்னால், ஏதோ தப்பித் தவறி வசதியில்லாத காரணத்தினால் ஒரு விவசாயி மின்சார இணைப்புப் பெற தகுதியில்லாமல் போய்விட்டால், 10 பேர்களும் ஒற்றுமையாக வந்து மின்சார இணைப்புக் கேட்டால்தான் கொடுப்போம் என்று நிபந்தனை போடுகிறார்கள். அப்படியிருக்கிற நிபந்தனையை நீக்கி, விரும்புகிறவர்கள் எல்லோருக்கும் அங்கு மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. சி. வே. வேலப்பன்:** கனம் தலைவர் அவர்களே, மின்சார போர்டினுடைய 1965-66-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனது கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு, மின்சார இலாகாவினரை நான் பெரிதும் பாராட்டுகிறேன். பாராட்டுவதற்குக் காரணம், நமது மாநிலத்தில் இருக்கிற இலாகாக்களில் மிகத் துல்லியமாக நல்ல முறையில் செயல்படும் ஒரு இலாகா இருக்கிறது என்றால், அது மின்சார இலாகா தான். இருக்கிற குறைபாடுகளை என்போன்று பொறுப்பில் இருப்பவர்கள் எழுதுகிறபோது, அந்தத் திட்டம் நிறைவேற்ற முடியும், நிறைவேற்ற முடியாது, காரணம் என்ன என்று உள்ள நிலைமையை எடுத்து அவர்கள் எழுதுகிறபொழுது அதைப் பார்க்கிறபொழுது, உண்மையிலேயே எடுத்துக்கொள்ளப்படுகிற காரியங்கள் எல்லாவற்றையுமே செய்ய முடியாது, செய்ய முடிகின்ற காரியங்களைச் செய்கிறார்கள் என்ற நிலைமை ஏற்படும்பொழுது, மக்களிடத்திலே அதை எடுத்துச் சொல்வதற்கு நல்லதோர் வாய்ப்பாக இருக்கிறது. அந்த முறையில் மின்சாரக் குழுவில் பணிபுரிகிற தலைவர் அவர்களுக்கும், மற்றைய பணியாளர்கள் அத்தனை பேர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் எடுத்துச் செய்கின்ற பணிகளை இன்னும் பொறுப்புடன் திறம்பட, நல்ல முறையில் செயலாற்றுதல் வேண்டும்,



31st July 1965] [திரு. சி. வே. வேலப்பன்]

இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கிற பெருமை மேலும், மேலும் அபிவிருத்தியாகி விளங்கவேண்டும். அதற்குத் தேவையாக இருக்கிற வகையிலேதான் நான் எனது தொகுதியில் இருக்கும் சில குறைபாடுகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்களால் செய்யக்கூடிய அளவுக்கு, முடிந்த அளவுக்குக் காரியங்களை மின்சார இலாகாவினர் செய்து தரவேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

பம்பு செட்டுகளுக்கு விண்ணப்பங்கள் கொடுக்கும்பொழுது, இப்பொழுது இரண்டு ஆண்டு காலமாக புதியதாக ஒரு முறை வைத்திருக்கிறார்கள். தாசில்தார் சர்டிபிகேட் வாங்கவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். ஒரு விவசாயி ஒரு பம்பு செட்டுக்கு விண்ணப்பம் கொடுக்கிறார் என்றால், கணக்குப் பிள்ளையைப் பார்த்து, அதற்குப் பிறகு ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பார்த்து, அதற்குப் பிறகு தாசில்தாரிடம் சர்டிபிகேட் வாங்கவேண்டியிருக்கிறது. இந்தச் சிரமங்களையெல்லாம் தவிர்க்கவேண்டும். தாசில்தார், கர்ணம் சர்டிபிகேட்டைப் பார்த்துத்தான் சர்டிபிகேட் கொடுக்கிறார். ஆகவே, கர்ணம் சர்டிபிகேட்டோடு நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஒரு கிராமத்தில் விவசாயிகள் தங்களுக்கு மின்சாரம் வேண்டும் என்று விண்ணப்பம் கொடுக்கும்பொழுது, அப்படிக் கொடுத்த பிறகு ஒரு குறைந்த பட்ச அல்லது அதிக பட்ச அளவாவது வைத்து, ஒரு ஆண்டிற்குள்ளாகவாவது மின்சாரம் வழங்கவேண்டும் என்ற ஒரு நியதியை உண்டுபண்ணவேண்டும். என் போன்றவர்கள் கிராமங்களுக்குச் சென்று பொது மக்களை ஒரு பக்கம் கூட்டிவைத்து, நமது கிராமத்திற்கு மின்சாரம் கொண்டுவரலாம் என்று கூறி, அவர்களை ஈர்த்து, அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடும்பொழுது, நம்முடைய ஐந்தாண்டுக் காலத்திற்குள் செய்ய முடியாத நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்யப்படும் காரியங்கள், கிராமத்திற்கு எடுத்துச் செல்லப்படும்போது, கால தாமதம் ஏற்படுகிறது. அதற்கென்று கமர்ஷியல் எஞ்ஜினியர்கள் போட்டு இருக்கிறார்கள். விண்ணப்பம் கொடுத்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆகியும் கூட, ஒன்றும் வருவதில்லை. இப்படிக் கால தாமதம் ஆவதைத் தவிர்க்க வேண்டும். இது சம்பந்தமாக நான் எஸ்.ஈ.-யைப் பார்த்துக் கேட்டால், அவர்கள், ஆட்கள் கிடைக்கவில்லை, அதனால்தான் தாமதம் என்று சொல்லுகிறார்கள். வேலை இருக்கும் இடங்களில் வேண்டிய அளவுக்குப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். சில வேலைகள் சாங்ஷன் ஆகி ஐந்து ஆண்டுகள் ஆகியும், இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. என்னுடைய தொகுதியில், உத்திரவாகி ஐந்தாண்டுகள் ஆகியும், கிட்டத்தட்ட 10 ரெவின்யூ கிராமங்களில் இன்னும் மின்சாரம் வரவில்லை. பெருங்குறிச்சி, நல்லூர், குன்னமலை முதலிய ரெவின்யூ கிராமங்களுக்கு இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. அந்த வேலைகள் சாங்ஷன் ஆகியிருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங்களுக்கும், சாங்ஷன் ஆன வேலையைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும். அவர்கள் விண்ணப்பித்த . . (மணி அடிக்கப்பட்டது).

[31st July 1965

* **திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மின்சார போர்டின் நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டு பருவ மழை தவறி, மின்சார வெட்டு வந்து விடுமோ என்று அஞ்சிய நிலையில், மின்சார வெட்டு வராமலேயே, ரொம்பவும் பின் பருவத்தில் ஜூலை 12-ம் தேதிக்குமேல் மழை ஆரம்பித்தும், மின்சார வெட்டு இல்லாமல் தப்பித்து இன்று கூடியிருக்கிறோம். கனம் அமைச்சர் அவர்கள் குந்தா மூன்றும் பவர் ஹவுஸ் திறந்து வைக்கும்போது சொன்னார்கள். இந்த ஆண்டு மின்சார வெட்டு வராது என்று. நாங்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டு இருந்தோம், இவருக்கு என்ன ஞானதிருஷ்டியா வந்துவிட்டது என்று, பொய்த்த பருவ மழையால் மின்சார வெட்டு வருமோ என்று அஞ்சினோம். ஆனால் கடைசியில், ஆண்டவன் அருளால், அவர்களுடைய ஞானதிருஷ்டி பலித்தது, நாமும் மின்சார வெட்டிலிருந்து தப்பினோம்.

சாதாரணமாக, கோடைக் காலங்களில் இந்த நீர் நிலை அணைகளில் வரண்ட காட்சிதான் இருக்கிறது. மழைக் காலங்களில் தண்ணீர் அடித்துக்கொண்டு வந்த மண், அணைக்கட்டுகளை மேடிடச் செய்திருக்கும், சில்ட் ஆகியிருக்கும் காட்சியைத்தான் பார்க்கிறோம். சென்ற வருஷத்திலேகூட இதைப்பற்றிச் சொல்லியிருந்தேன். மண்ணை அகற்றக் கூடிய முறையில், மண் வாரும் இயந்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து வரவேண்டும். வந்த பிறகு, அந்த வேலையைச் செய்யமுடியும் என்று சொன்னார்கள். ஒரு வருஷம் ஆகியும், இயந்திரங்கள் வந்ததா இல்லையா என்று தெரியவில்லை. இந்த நிலையில் போய்க்கொண்டு இருந்தால், இன்னும் 10 வருஷ காலத்தில், நம் குந்தா அணைக்கட்டுகள் பூராவும், நமக்கு 40 சதவீதம் மின்சாரம் கொடுக்கும் குந்தாத் திட்டம், மண் மேடிட்டு, பூராவாக, மண் நிரப்பிவிடும் அபாயமான நிலையில் தான் இருக்கிறோம் என்பதை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு நீர்த் தேக்கங்களின் பக்கத்தில் உள்ள பூமிகளில் காட்டு இலாகாவினர் மரங்களைப் பயிர் செய்கிறார்கள். அவர்கள் யூகலிப்டஸ் மரங்களை நடுகிறார்கள். இந்த யூகலிப்டஸ் மரங்கள் தண்ணீரை உறிஞ்சும் சுபாவம் உள்ளது. பக்கத்திலுள்ள நீரை எல்லாம் அது எடுத்துக்கொண்டு விடும். பக்கத்திலுள்ள நிலங்களைப் பொட்டலாக்கிவிடும் தன்மை உள்ளது; நீலகிரி போகும் தைலத்தைக் கொடுத்தாலும், அது தண்ணீரை எல்லாம் உறிஞ்சிவிடும். ஆகவே அந்த அபாயம் இருக்கிறது. அதே நேரத்தில் நீலகிரியிலேயே தண்ணீரைச் சுரக்கும் மரங்களும் இருக்கின்றன. ஆகவே, நீர்த் தேக்கங்களின் பக்கத்தில் அப்படிப் பட்ட மரங்களை நட்டால், நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, இந்த 7, 8 வருடங்களாக இந்த நீர்த் தேக்கங்களின் பக்கத்தில் உள்ள கிராமங்களில் விவசாயிகளுடைய பூமிகள் தண்ணீருக்குள்ளே போவதற்கு மாற்று பூமி கொடுக்காததால்



31st July 1965] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக, சர்வே நெ. 392/1 பிக்கட்டி கிராமத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் நிலம் தண்ணீருக்குள்ளே போய், மாற்றுபூமி இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் சத்தியாக்கிரகம்கூட செய்து பார்த்து விட்டார்கள். அமைச்சர்களுடைய கார்களின் முன்னால் சத்தியாகிரகம் செய்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனித்து விவசாயிகளுக்கு மாற்று பூமி கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, அட்டுபாயில் என்ற கிராம மக்கள் உடனடியாக வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டும், குடிபெயரவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் குடியேறிய இடத்தில் குடிதண்ணீர், ரஸ்தா வசதி இவைகள் செய்து கொடுக்கப் படவில்லை. அந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று இருந்தாலும், மின்சார போர்டார், 'நாங்கள் செய்வதில்லை; நீங்கள் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டில் கேளுங்கள்' என்று சொல்லுகிறார்கள். பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டைக் கேட்டால், அவர்கள், இது மின்சார போர்டார் வேலை என்று சொல்லுகிறார்கள். ஆக இம்மாதிரி, கடந்த ஏழு ஆண்டுகளாக, இந்த வேலைகள் இழுபறி நிலையில் தான் இருக்கிறது. மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, காம்பென்ஸேஷன். தண்ணீரில் முழுகிப்போன பூமிகளுக்கு ஈடாக ஒரு ஏக்கருக்கு 3,000 அல்லது 5,000 என்று கொடுக்க உத்தரவு. அது போதாது, குறைந்தது என்று சொல்லி, சிவில் கோர்ட்டில், ஹைகோர்ட்டில், பூமி இழந்தவர்கள் தாவா போட்டிருக்கிறார்கள். அதன் பேரில் கோர்ட்டில் தாவா போட்டவர்களுக்கு மாற்று பூமி கொடுக்கக் கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. கோர்ட்டுக்குப் போவது நம்முடைய ஜீவாதார உரிமை. ஆகவே, அதற்காக, அவர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது. அவர்களுக்கும் பூமி கொடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் சபாநாயகர் அவர்களே, மின்சார போர்டின் 1965-66-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் உபயோகித்து வரும் மின்சாரத்திற்கு ஏற்கனவே 1.5 அணா இருந்தது. இப்பொழுது $8\frac{1}{4}$ பைசாவாகப் போட்டிருக்கிறார்கள். இப்படி $8\frac{1}{4}$ பைசா என்று போட்டதைக் குறித்து என்னுடைய வட்டாரத்திலிருந்து விவசாயிகள் இங்கு வந்து அமைச்சரையும், எஞ்ஜினியர்களையும் கண்டு பேசியபோது அவர்கள் 'இதுவே மிகக் குறைவு, இதை இனிக் குறைப்பதற்கில்லை' என்று கூறினார்கள். அந்த நேரத்தில் விவசாயிகள் விவசாயத்திற்கு உபயோகிக்கும் விளக்குகள் 4 அல்லது 5 என்று கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது, 3 லைட்டுகள் விவசாயிகளுக்குக் கொடுக்கும் ரேட்டில் போட்டுக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். கோயம்

[திருமதி சி. குழந்தையம்மாள்] [31st July 1965

புத்தூர் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், கிணற்றுக்குள்ளே இருந்து தண்ணீர் கொண்டுவர, இப்பொழுது 100 அடிக்கும் மேலே போக வேண்டியிருப்பதால், கிணற்றுக்குள்ளேயே இரண்டு விளக்குகள் போடவேண்டியிருக்கிறது. அடியில் ஒரு விளக்கு வேண்டும், பிறகு பாதிக் கிணற்றில் இன்னொரு விளக்கு வேண்டும். பிறகு விவசாயி மாடு கட்டியிருக்கும் கட்டுத்துரைக்கு ஒரு விளக்கு வேண்டும். விவசாயி படுத்திருக்கும் இடத்தில் ஒரு விளக்கு வேண்டும். ஆக நான்கு விளக்குகள் அவசியம் வேண்டியிருக்கிறது. மூன்று விளக்குகள் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள், விவசாயி ரேட்டில் விவசாயிக்குக் கொடுக்கும் விளக்குகளுக்கு, மீட்டர் ஓடும் போதே வசூலிக்கிறார்கள். அதற்கும் மேல் ஒவ்வொரு விளக்குக்கும் 1½ ரூபாய் என்று அந்த பில்லிலேயே சேர்த்துவிடுகிறார்கள். மீட்டர் ஓடும் கட்டணம் வேறு, விளக்குக்கு என்று வேறு. ஆக இரண்டு முறை வசூலிக்கிறார்கள். அதற்கும் மேல் சர்-சார்ஜ். ஆகவே, இன்றைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கும் விளக்குகளுக்கு, மீட்டர் ஓடுட் சார்ஜோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் உற்பத்தி செய்யும் ராகி, சோளக்கதிர், கரும்பு முதலியவற்றை அரைக்க, லைசென்ஸ் வாங்கித்தான் இதையெல்லாம் அரைக்க வேண்டும். டபிள் த்ரோ ஸ்விச் போட்டு அரைக்க வேண்டும். அதற்கு லைசென்ஸ் வாங்க அவர்களுக்கு மிக்க கஷ்டமாக இருக்கிறது. தனியாக, மூலையாக இருக்கும் விவசாயி பர்மிஷன் வாங்க 15 மைல், 20 மைல் நடப்பதற்குள்ளே விவசாயமே செய்யவேண்டாம் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றிவிடும். இலாகாவினரே நேரில் வந்து பார்த்து லைசென்ஸ் கொடுக்கிறார்களா என்றால், அப்படிக் கொடுப்பது இல்லை. அங்கே இருந்து கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறார்கள். ஆகையால், நான் தெரிவித்துக் கொள்வது 7½ எச்.பி.-யோ 10 எச்.பி.-யோ, எதுவோ கூடுமானவரை விவசாயியே வைத்துக் கொள்வதற்கு ஸீல் இட்ட பெட்டியை விவசாயியே வைத்துக் கொள்ளும் முறையை ஏற்படுத்திக் கொடுங்கள். எப்போதெல்லாம் விவசாயிக்குத், தேவையோ, அப்பொழுது லைன்மென்னிடம் சொன்னால் எடுத்துக்கொடுக்கவேண்டும். விவசாயியே அதை மாட்டிக்கொள்ளக்கூடிய ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி இல்லையென்றால் விவசாயி கதிராகவே விற்றுவிட முடியாது. அரைத்துத்தான் ஆகவேண்டும். கரும்பாக விற்றுவிட முடியாது; வெல்லமாகத்தான் செய்ய முடியும். இந்தக் கஷ்டத்தை உணரவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரைக்கும், மின்சாரம் உபயோகிக்கும் நிலைமை மிக அதிகமாக இருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரைக்கும் நூற்றுக்கு 95 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்ததற்காக நான் என்னுடைய பாராட்டுதலை மின்சார இலாகாவினருக்குத் தெரிவித்துக் கொள்



31st July 1965] [திருமதி சி. குழந்தையம்மாள்]

கிறேன். ஆனால், ஒரே ஊரில் எட்டு வருஷங்களாக ஒரு குறை இருக்கிறது. பொன்னன்டாம் பாளையத்தில் ஓவர்ஹெட் டாங்க் கட்டி நான்கு வருஷம் ஆகிறது. அந்தக் கிராமத்திற்கு எந்த செக்ஷன் மூலமாகக் கனெக்ஷன் வரவேண்டும் என்று தெரியாமலிருக்கிறது. பல்லடம் தாலுக்கா, அவனாசி தாலுக்கா, கோயமுத்தூர் தாலுக்கா ஆகிய இவற்றில் எந்த இடத்தைச் சேர்ந்தவர்களுக்கு எழுதினாலும், 'என்னைச் சேர்ந்தது அல்ல' என்று எழுதுவதில்லை. அப்படியே மூன்று பேரும் சேர்ந்து மின்சாரக் கனெக்ஷன் கொடுக்காததனால், ஓவர்ஹெட் டாங்க் மூலமாகத் தண்ணீர் எடுக்க முடியாமல் இருக்கிறது. மூன்று பேர்களும் செய்யாவிட்டால் மின்சாரபோர்டாரே மின்சாரக் கனெக்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

VR.. .. N65

அனல் மின்சார நிலையம் ஒன்றைக் கோயமுத்தூரில் ஏற்படுத்த வேண்டும். காரணம், ஏராளமான பேர்கள் மின்சாரத்தை உபயோகிக்கிறார்கள். மின்சாரத் தட்டுப்பாடு வரும்போது அனல் மின்சார நிலையம் ஒன்று இருந்தால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

N65.30.5

விவசாயிகளுக்குப் பாரம்பரையாக ஏற்பட்டிருந்த கஷ்டம் இரவில் மின்சாரத்தை உபயோகப்படுத்தித் தண்ணீர் இறைக்க வேண்டியிருந்தது. அந்தக் கஷ்டத்தை நீக்கியிருப்பதைக் குறித்து என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரைக்கும், அவனாசியில் இன்னும் அந்தக் கஷ்டம் நீக்கப்படவில்லை. அந்தத் தாலுக்காவிலும் இரவில் மின்சாரம் எடுத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதை மாற்றி, பகலில் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆர்.எச்.-இல் இருக்கும் கஷ்டத்தை இலாகாவினர் உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் வட்டாரத்தைப் பொறுத்த வரைக்கும் தாராளமாக மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கி இருக்கிறார்கள். அதற்காக இலாகாவினருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த தாராள மனப்பான்மை நீடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

64913

* **திரு. ஆர். ராஜகோபாலசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே சமர்ப்பித்திருக்கின்ற மின்சார போர்டுடைய நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன்.

இந்திய தேசத்திலேயே நமது ராஜ்யமானது மின்சாரத் துறையில் முன்னேறியிருப்பது எல்லோருக்கும் தெரியும். மற்ற எல்லா ராஜ்யங்களைக் காட்டிலும் நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் மின்சாரத் துறை நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது. குறிப்பாக, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்னால் ஒரு தனிநபர் உபயோகிக்கும் மின்சாரத்தின் சராசரி 12 யூனிட்டாக

இருந்தது. இப்பொழுது 120 யூனிட்டாகியிருக்கிறது. முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு இது ஒன்றே போதும். இதற்காக அமைச்சர் அவர்களையும் மின்சார போர்டாரையும் நான் பாராட்டுகிறேன்.

இந்தச் சமயத்தில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற 15 ஆண்டுகளாக விவசாயிகள் பகல் ஆறு மணி நேரம் மாத்திரம் தங்களுடைய மோட்டார் பம்ப் செட்டுக்கு மின்சாரம் உபயோகித்துக் கொண்டிருந்தார்கள் பாக்கி, தங்கள் தேவைக்கு இரவிலே உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்தக் குறையை நாங்கள் பல தடவை மின்சார போர்டு அதிகாரிகளிடமும் அமைச்சரிடம் எடுத்துக் கூறினோம். அதற்கிணங்க சென்ற சில மாதங்களாக அந்தக் குறையை நிவர்த்திசெய்து விவசாயிகளுக்கு இப்பொழுது பகலிலே 12 மணி நேரமும் கரண்ட் சப்ளை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக விவசாயிகள் சார்பாக என்னுடைய நன்றியை அமைச்சர் அவர்களுக்கும் மின்சார போர்டாருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, எங்கள் வட்டாரம் தொழில் முன்னேற்றம் அடைந்துள்ள ஒரு பிரதேசமாகும். அதுபோலவே விவசாயத் துறையிலும், முன்னேறிய பிரதேசம் கோயமுத்தூர் வட்டாரம். கோவையிலே இப்பொழுது எண்ணூரிலும், தூத்துக்குடியிலும் ஏற்படுத்த போவது போல, ஒரு அனல் மின்சார நிலையம் ஏற்படுத்த வேண்டுகிறேன். பருவ மழை தவறிய காலங்களில் அங்குள்ள தொழிற்சாலைகளும், விவசாயத்திற்கான மோட்டார் பம்ப் செட்களும் இயங்க முடியாத அளவிற்கு மின்சாரத் கட்டுப்பாடு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சமயங்களில் அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு அனல் மின்சார நிலையம் ஒன்று கோவையில் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அனல் மின்சார நிலையம் ஒன்றைக் கோவையில் துவக்க வேண்டும் என்று நான் இந்தச் சமயத்திலே வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அமராவதி ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் ஏற்கனவே ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அப்பர் அமராவதி அணை ஹைட்ரோ எலெக்ட்ரிக் ஸ்கீமுக்காகக் கட்டவேண்டும் என்று ரொம்ப நாளாக சர்வே செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அமராவதி அணையானது வெள்ளம் வரும் போது 48 மணி நேரத்தில் நிரம்பி, பாக்கித் தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது. மேலே அப்பர் அமராவதி அணை கட்டி அங்கே மின்சார உற்பத்தி செய்வதோடு அல்லாமல் ஏற்கனவே இருக்கும் அணைக்கும் ஒரு பாதுகாப்பாகவும் இருக்கும், மேற்கொண்டும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமிக்குத் தண்ணீர் பாய ஏதுவாக இருக்கும். இதை மனத்திற்கொண்டு மீண்டும் ஒரு முறை அப்பர் அமராவதித் திட்டத்தை சர்வே செய்து அங்கு ஒரு நீர் மின்சார உற்பத்தி நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களையும் மின்சார போர்டாரையும் நான் கேட்டுக் கொள்



கிறேன். ஹைட்ரோ எலெக்ட்ரிக் ஸ்கீமுக்கு மாத்திரம் அல்லாமல் ஏற்கனவே இருக்கின்ற பூமிகளுக்குத் தண்ணீர் பாய்வதற்கும் அமராவதி அணைக்குப் பாதுகாப்பாக இருப்பதற்கும், மேற்கொண்டும், பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமிக்குத் தண்ணீர் பாய வசதி செய்வதற்கும் மீண்டும் ஒரு முறை அப்பர் அமராவதி ஹைட்ரோ எலெக்ட்ரிக் திட்டத்தை சர்வே செய்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு தொழில் அமைச்சர் அவர்கள் மின்சார போர்டுக்கான நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றபோது நிகழ்த்திய உரை நமக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. குறிப்பாக, இந்த ஆண்டு மின்சார வெட்டு இல்லாமல் அமைந்ததற்கு அவர்களே ஆண்டவனுக்கு நன்றியைச் செலுத்தினார்கள். அதோடு கூட, அந்த மாதிரியான மகிழ்ச்சி ஏற்படும் நிலையிலே அமைந்ததற்காக அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப் பாராட்டுகின்றபோது, இன்னொன்றையும் முதலிலே நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுடைய பேச்சு, ஏற்கனவே அங்கத்தினர்கள் கொடுத்த யோசனைகள், அவற்றின் மீது இந்த இலாகா மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகள் இவற்றையெல்லாம் நமக்கு அச்சிட்டுத் தந்திருக்கிறார்கள். அதோடு கூட, தமிழிலும் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்கள். தமிழைப் படிக்கிறபோது உண்மையிலேயே நான் வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு மோசமாக இனி யாரும் இதைத் தமிழில் மொழி பெயர்க்க முடியாது. மொழி மரபு தெரியாதவர்கள், எந்த மொழியிலிருந்து எந்த மொழிக்கு அதைப் பெயர்க்கிறார்களோ அந்த மொழியிலே மட்டும் ஏதோ சிறிது பயிற்சி உள்ளவர்கள், எந்த மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்படுகிறதோ அந்த மொழியின் வாக்கிய அமைப்புகள், மரபுகள் இவற்றைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் இதை மொழிபெயர்த்திருக்கிறார்கள். நான் யார் மீதும் தனிப்பட்ட முறையிலே குற்றம் சாட்டவில்லை. மொழி பெயர்த்தது யார் என்று இந்த நிமிஷம் வரை எனக்குத் தெரியாது. அதை விசாரிக்கப்படாது என்றே இதுவரையிலும் இருக்கிறேன். ஏனென்றால், அதன் காரணமாக விருப்பு வெறுப்பு என் உள்ளத்திலே ஏற்பட்டுவிடப்படாது என்ற எண்ணத்தினாலேயேதான் முதலில் தயவு செய்து கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தங்களுடைய ஆங்கில உரையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டிருப்பாரானால் சிறப்பாக இருக்கும் என்று நான் உங்கள் மூலமாக வேண்டிக்கொள்கிறேன். அப்பொழுதுதான் நான் எடுத்துக்காட்டும் குறைகளை உணர முடியும்.

எங்களில் சிலருக்கு ஆங்கிலம் தெரியாது. தமிழ் மட்டுமே 12-30
தெரியும். எனவே தமிழிலே அதை மொழிபெயர்த்துத் தந்திருக் p.m.
கிறார்கள். அது நன்று. ஆனால் எண்ணம் நிறைவேறவில்லை.

'செய்யவேண்டும்' என்று சொல்வது 'செய்யப்படக் கூடாது' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. விளைவு விபரீதமாகி விட்டது. வாக்கியப் பிழை மட்டும் அல்ல. கருத்தே முரணாக, மாறுபட்டுக் கிடக்கிற நிலையைப் பார்க்கிறோம். காரணம், பிற மொழி மரபு, வாக்கிய அமைப்பு முறை மட்டுமின்றி நம்முடைய தமிழ் மொழியின் மரபு, வாக்கிய அமைப்பும் தெரியாத காரணத்தினால்தான் மொழிபெயர்ப்பாளர் இப்படிச் செய்திருக்கிறார். உதாரணத்திற்காக ஒன்றிரண்டை மட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். முதல் பக்கத்தில் முதல் பாராவில் "நிதி நிலை அறிக்கையும் துணை நிதி நிலை அறிக்கையும் மாநிலச் சட்டப் பேரவையால் விவாதிக்கப்படுவதற்குரியவை. ஆனால் வோட்டு அளிக்கப்படுவதற்குரியவை அல்ல" என்று வருகிறது. ஆங்கில உரையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், "வோட்டு அளிக்கப்படுவதற்கு உரியவை அல்ல என்றாலும் விவாதிக்கப்படுவதற்கு உரியவை" என்று புலனாகும். கருத்து இதில் மாறவில்லை என்றாலும் இப்படி முன்பின்னாகப் புரண்டு கிடக்கிறது. ஆடிட் என்பதற்குத் தணிக்கை என்று போட்டிருக்கிறார்கள். அது சரி, சர்டிபை என்பதற்கு "அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ள" என்பதாக மிகப் பயங்கரமான சொல்லை உபயோகப்படுத்தியுள்ளார்கள். அதுவும் ஆங்கில உரையில் பார்க்கிறபோது சர்டிபிகேஷனுக்குப் பரிசீலனையில் இருப்பதாகப் பொருள்படக் கூடிய வாக்கியத்தை "வரவு-செலவு இருப்பு அறிக்கை இன்னும் அத்தாட்சிப் படுத்தப்படவில்லை" என்று இருக்கிறது.

இன்னும் மூன்றாம் பாராவில் "கோடைக்கால மாதங்களில் மின்சார வெட்டினை அமலுக்குக் கொண்டு வராமலேயே நிலைமையைச் சமாளித்திருக்கிறோம்" என்றுள்ளது. மின்சார வெட்டினை அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதாக எதாவது சட்டம் போட்டு இருக்கிறோமா என்ன? இப்படி வாக்கிய அமைப்புத் தெரியாது, மரபு தெரியாது மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த அறிக்கைகளில் உள்ள பிழைகளை எடுத்துக் காட்டிக்கொண்டே போகலாம். அப்படிச் செய்தால் எனக்குக் கொடுத்துள்ள 20 நிமிஷம் போதாது. ஒவ்வொரு பக்கத்திலும் இத்தகைய பெரும் பிழைகள் இருக்கின்றன. ப்ரிலிமினரி என்பதற்கு முன்னோடி என்ற சொல்லை உபயோகித்திருக்கிறார்கள். "எல்லா பாசனத் திட்டங்களிலுமுள்ள நீரில் இருந்து மின்சாரத்தை" என்பதாக. நீரின் உதவியைக் கொண்டு என்றால் சரி. நீரில் இருந்து மீன் பிடிப்பது போல மின்சாரத்தைப் பிடிப்பதா என்ன? இப்படி அனேகம். குறிப்பாக சென்ற ஆண்டு நான் குறிப்பிட்ட ஆலோசனைகளின் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள இந்தப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். அதில் உள்ள தவறு சிறிது என்று நான் நினைக்கவில்லை. கருத்தையே தவறாகப் போட்டிருக்கிறார்கள். முதலில் அது மொழி பெயர்ப்புத் தவறு என்று எனக்குப் புலப்படவில்லை. என்னடா? இப்படி விபரீத முடிவை எடுத்திருக்கிறார்களே என்றுதான் நான் திடுக்கிட்டேன். கனம் அமைச்சர் அவர்கள் அதைக் கூர்ந்து



பார்க்க வேண்டும். சட்டப் பேரவை அங்கத்தினர்கள் வழங்கிய ஆலோசனைகளின் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் காட்டும் அறிக்கையில் 133-ம் தொடர் எண். திரு. சா. கணேசன் சொன்ன யோசனை—அது என்ன என்று படிக்கவில்லை—அதற்கு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்பதில் "தற்காலிகமாக மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு உத்தரவிடுவது பொதுவாக நிறுத்தப்பட்டுள்ளது"—இது முற்றும் பிழை. ஆங்கிலத்தில் உள்ளதைப் பார்த்த பிறகு தான் என் மனம் சமாதானம் அடைந்தது.

"Generally the work orders for temporary supplies are closed and the balance amount due to the parties are refunded within four weeks from the date of disconnection".

என்று உள்ளதற்கு இப்படி மொழி பெயர்த்துள்ளார்கள். நேரே முரணான கருத்து. இப்படி ஏராளமான பிழைகள். Nothing is better than some nonsense என்பதாக ஒரு பழமொழி ஆங்கிலத்தில் உண்டு. ஒன்றும் இல்லாமல் இருப்பது அபத்தத்தைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தது. இந்தத் துறையினரும் சரி, கனம் அமைச்சர் அவர்களும் சரி, இனி இம்மாதிரி எல்லாம் பிழைகள் இல்லாத மொழி பெயர்ப்பைத் தருவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் மொழி பெயர்ப்பே வேண்டாம். (கனம் சபாநாயகர்:—எல்லாம் என்றால்? முன்பு கொடுக்கப்பட்டவைகளிலும் பிழைகள் இருந்தனவா?) அவற்றைச் சொல்லவில்லை. பட்ஜெட் சமயத்தில் கொடுக்கப்பட்டவைகள் நன்றாக இருந்தன. இந்த முறை பிழைகள் மலிந்து இருக்கின்றன என்பதினாலோ என்னவோ தான் கனம் தொழில் அமைச்சரும் சரி, கனம் முதல் அமைச்சரும் சரி, ஆங்கிலத்தில் உள்ள உரைகளையே படிக்கத் தொடங்கினார்கள். இதை எல்லாம் நாம் மனத்தில் கொள்ளவேண்டும் என்று ஆளும் கணத்தாரை வேண்டிக்கொள்கிறேன்.

இனி, அடிப்படையான ஒன்றைப் பற்றி, திரு. கருணாநிதி அவர்கள் காட்டினார்கள். அது மிகவும் கவனிக்கப்படவேண்டிய ஒன்று. இதுமாதிரி பல தவறுகள் நிகழ்கின்றன. நிகழ்ந்ததைப் பற்றி ஆச்சரியப்படவில்லை. கோடிக்கணக்காகச் செலவிட்டுக் கொண்டிருக்கிறபோது சில இடங்களில் ஊழல் ஏற்படலாம். அதைக் கண்டு பிடித்தவுடனே முடிந்த அளவு கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டாலன்றி மக்களிடத்தில் ஒழுக்கம் துளிக்கூட நிற்காது என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். அதுமாதிரி, ஏற்கனவே, போன ஆண்டிலே, வேறு ஒரு துறையில் நடந்ததைப் பற்றி எடுத்துக் காட்டியிருக்கிறோம். புதுக்கோட்டை, திருவரங்குளம் அருகில் நாலாயிரம் ரூபாய்க்கு வாங்கிய நிலத்தை விதைப் பண்ணைக்காக 42 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியுள்ளதைக் குறிப்பிட்டோம். அதன் பேரில் உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால் இத்தகைய அட்டூழியங்கள் தொடர்ந்து செயல்பட மாட்டாது, நெஞ்சிலே யாருக்கும் அப்படிச் செய்யத் துணிவு இருக்காது. இதை நாம் மிகவும் கவனமாக

அக்கறையாக மனத்தில் கொள்ளவேண்டும் என்று நான் விண்ணப்பித்துக் கொள்கிறேன், வேறு எந்தவிதமான விருப்புவெறுப்பும் இல்லாத நிலையில்.

இனி நான் சொன்ன கருத்தின் மீது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை என்பதில் தற்காலிகக் கனெக்ஷன் பற்றி விவரம் கொடுக்கிறபோது—"வேலை முடிந்தவுடன், மீடர் ரீடிங் எடுத்து நான்கு வாரத்திற்குள் டெபாசிட் பணம் திருப்பித்தர உத்தரவு போட்டுள்ள" தாக இருக்கிறது. ஆனால், அந்த அந்தப் பிராந்திய மேல் அதிகாரிகளுக்கே அந்த டெம்பரரி கனெக்ஷன் டெபாசிட் பணத்தை—கரண்டு சார்ஜ் போக பாக்கியை—திருப்பிக் கொடுக்க அதிகாரம் அளிக்க வேண்டும் என்ற யோசனைக்கு 'தேவை இல்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான்கு வாரத்தில் டெபாசிட் பணம் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நான்கு மாதங்கள் ஆகியும் கூடத் திருப்பிக் கொடுக்கப்படாமல் இருப்பதற்கு நான் நூற்றுக்கணக்கான ரசீதுகளைக் காட்ட முடியும். பல இலக்கிய விழாக்களை நடத்திக் கொண்டிருப்பவன் நான். பல மாதங்களுக்கு முன்பே பிப்ரவரியில் கட்டிய பணம் இன்னும் எனக்கு வரவில்லை. கம்பன் விழாவுக்காக பிப்ரவரியில் கட்டிய பணம் இன்னும் வரவில்லை. வருவது வராததைப் பற்றி என்னைப் பொறுத்தவரையில் கவலை இல்லை. எத்தனை ஏழை எளியவர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதுதான் எனது கவலை. கரண்டு சார்ஜ் பத்து ரூபாய் ஆகும். அதற்கு டெபாசிட் 150 ரூபாய்—தேவை இல்லாதது என்றாலும்—தேவை முடிந்தவுடனே, மீடர் ரீடிங் எடுத்தவுடனே லோகல் அதிகாரிகள் அந்த சார்ஜ் போக டெபாசிட் தொகையில் பாக்கியை செக் மூலமாகத் திருப்பிக் கொடுப்பதில் என்ன தவறு நிகழ்ந்துவிடக் கூடும்? முனிசிபாலிட்டியிலே நடத்தவில்லையா? பஞ்சாயத்திலே நடத்தவில்லையா? நிர்வாக அதிகாரிகள் வாங்குகிறார்கள். அவர்களே ஏன் திருப்பிக் கொடுக்கக் கூடாது? இப்படிச் செய்வது ஜனங்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். கொஞ்சம் ரெட் டேபிச முறையை மாற்ற யோசிக்க வேண்டும். தவறு நிகழ்ந்து விட்டால் ஆயிரம், ஐநூறு வாங்கக் கூடிய அதிகாரிகளைப் பொறுப்பேற்கச் செய்ய முடியாதா? ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கக் கூடிய அதிகாரிகளையே திருப்பிக்கொடுக்க அனுமதிப்பதில் என்ன கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடப் போகிறது? அது இலாகா ரீதியிலே சரிப்பட்டு வராது என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. "இதை மறுபடியும் புனராலோசனை செய்யுங்கள்; இதனால் தீமை வராது; நஷ்டம் வராது" என்று பல்வேறு துறைகளிலும் உள்ள அனுபவத்தின் காரணமாக நான் ஆட்சியாளர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஊழியர்களின் எண்ணிக்கை, சம்பளம் இவைகளினால் ஏற்படுகிற வீண் செலவு இந்த இலாகாவிலே மிகுதியாக இருக்கின்றன. இதனாலேயே இவ்விலாகாவுக்கு நஷ்டம் அல்லது லாபக் குறைவு அல்லது விரயம் என்று கூடச் சொல்வேன், ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அறிக்கையிலே விதிப்படி செய்யப்பட்டிருக்கிறது,



நெறிப்படி நடத்தப்பட்டிருக்கிறது என்று போடப்பட்டிருக்கிறது. அதை இந்த இலாகாவினரே சொல்வது நியாயமாக இராது. அப்படிச் சொல்வது கணக்கு எழுதியவனே, எழுதிய கணக்குச் சரியென்று சொல்வதுபோலத்தான் இருக்கும். ஆகவே, இந்த இலாகாவால் நியமிக்கப்படாதவர், "எல்லாம் விதிக்குட்பட்டுத்தான் செய்யப்பட்டிருக்கின்றன, சரியானவை, நியாயமானவை" என்று சொல்வது சரியல்ல. விரயம் உண்டா இல்லையா என்பதைத் தக்கவர்கள் விசாரித்து ஆராய்ந்தறிந்து சொல்லக்கூடிய நிலைமையிலே நியமிக்கப்பட்டால்தான் உண்மை புலனாகும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இந்தக் கணக்குகளையும் சர்க்கார் ஆடிட்டர் பார்த்துத் தணிக்கை செய்கிறார் என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** 'ஆடிட்டர் பார்க்கிறார்' என்று கனம் அமைச்சர் கூறுகிறார். அப்படிப் பார்ப்பவரோ கவர்ன்மென்ட் ஆடிட்டர் ஆக இருக்கிறார். இங்கே கவர்ன்மென்ட் ஆடிட்தான் செய்யப்படுகிறது. கமர்ஷியல் ஆடிட்டாக இருக்குமானால் விரயம் வராது. ஏனென்றால் கவர்ன்மென்ட் ஆடிட்டாக இருந்தால் சட்டப்படி செய்யப்பட்டிருக்கிறதா, சாங்ஷன் இருக்கிறதா அல்லது ராடிபிகேஷன் உண்டா, வவுச்சர் இருக்கிறதா என்றுதான் கேட்பார். மூந்நூறு ரூபாய் செலவழித்துச் செய்த ஒன்றைப் பார்த்து "3 ரூபாயில் செய்யக் கூடியதற்கு ஏன் ரூ. 300 செலவு செய்யப்பட்டது" என்று கேட்க வழியில்லை. யாரையும் கண்டிக்க வேண்டுமென்பதற்காக நான் இதை சொல்லவில்லை. கமர்ஷியல் ஆடிட் இருக்குமானால் ஏன் இவ்வளவு செலவு என்று கேட்பதற்கு உரிமை இருக்கும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** மின்சார இலாகா ஒரு சாதாரண கார்ப்பரேஷன் அல்ல. அது தனிச் சட்டத்திற்கு உட்பட்டது. ஆகையினால் அந்தச் சட்டத்திலே விதிகள் என்ன என்ன செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அதன்படித்தான் செய்யவேண்டும். இப்பொழுது இருக்கிற சட்டப்படி அக்கவுன்டண்ட் ஜெனரல்தான் இதைச் செய்யவேண்டும், அவர்கள் இதை ஆடிட் செய்து அதன் பிறகு சட்டசபைக்கு அறிக்கை வைக்கவேண்டுமென்று இருக்கிறது. இதுதான் நிலைமை.

**திரு. சா. கணேசன்:** ரொம்பச் சரி அந்தச் சட்டத்தைத் திருத்தி இன்னும் சிறப்பாக சர்க்கார் துறை இயங்கச் செய்தால் என்ன? சட்டத்தைச் செய்து ஆட்சி நடத்துகிறவர்கள் அமைச்சர்கள். அவர்கள், இதனால் வரும் நன்மை தீமைகளைக் கணித்து, லாப நஷ்டங்களைக் கணித்து, நடைமுறையில் உள்ளவற்றை மாற்றவோ அல்லது திருத்தவோ எங்களுக்கோ அல்லது இன்னொரு குழுவுக்கோ ஆலோசனை சொல்ல உரிமையும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விதியையே மாற்றுவதற்கு வழியும் உண்டு என்றுமட்டும் சொல்லிக்கொண்டு நான் மேலே செல்ல விரும்புகிறேன். கமர்ஷியல் ஆடிட் முறையாக இருக்குமானால் 1 லட்ச ரூபாய்க்கு வாங்கியதை நான்கு மாதத்தில் நான்கு லட்சம் ரூபாய்க்

குச் சர்க்கார் துறைக்கு விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்காது. எப்பொழுது எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது, வாங்கிய காலத்திற்கும் விற்கிற காலத்திற்கும் உள்ள இடைவெளி எவ்வளவு, அதற்குள் விலை இப்படி 4, 5 மடங்காக ஏறுவானேன் என்றெல்லாம் யோசிக்க வசதியிருக்கும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் குறுக்கிட்டுப் பேசும் வழக்கமில்லை. இருந்தாலும் திரும்பத் திரும்ப எல்லோரும் அதையே பேசிக்கொண்டிருப்பதால், நான் அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார், நிலம் வாங்க வேண்டுமென்றால் மந்திரிகள் கையெழுத்துப்போட வேண்டும். அப்பொழுதுதான் வாங்கமுடியும். ஆனால் போர்டுடைய நிர்வாகம் தனி நிர்வாகம். ஆனால் சர்க்கார் என்ன வழியில் செல்லுகிறதோ அதைத்தான் இந்த போர்டும் பின்பற்றவேண்டும். சர்க்கார் இது போன்ற விஷயங்களில் ஜில்லாக் கலெக்டர் அல்லது லாண்ட் அக்விஸிஷன் ஆபீசர், எங்களுக்கு நிலம் வேண்டும், தேவையாக இருக்கிறது. என்ன விலை கொடுக்கலாம் என்று கேட்போம். அவர்கள் என்ன விலை சொல்கிறார்களோ அதைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளுவார். எனக்கு அரை மணி நேரத்திற்கு முன்பாகக் கிடைத்த தகவல்படி, இந்த நிலம் வாங்கப்பட்ட பொழுதும், கலெக்டரைக் கலந்துதான் வாங்கப்பட்டிருக்கிறது. மேலும், இன்னும் இது ஆடிட்டுக்குப் போகவில்லை. இதைத்தவிர பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் இதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும். அக்கவுண்டண்ட் ஜெனரல் இன்னும் இதை ஆடிட் செய்யவில்லை. இப்படியிருக்கும்பொழுது, குற்றத்தை நிரூபித்தது மாதிரிப் பேசுவது சரியல்ல. இதில் சந்தேகங்கள் இருக்கிறது, இல்லையென்று நான் சொல்லவில்லை. ஏன் இவ்வளவு விலைக்கு வாங்கப்பட்டது, எவ்வளவுக்கு விற்கப்பட்டது என்பது போன்ற சந்தேகங்கள் இருக்கக்கூடிய நிலைமை இதிலே இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அக்கவுண்டண்ட் ஜெனரல் இதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்பொழுது அவர்கள் இது சம்பந்தமாக விவரங்களைத் தெரிவிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. சா. கணேசன் :** நானும் இதைப்பற்றி பிரஸ்தாபிக்கும் பொழுது அமைச்சர் மீதோ அல்லது யார் மீதும் குற்றம் சுமத்த வில்லை. நிலைமை இப்படி இருக்கிறது, ஏன், எப்படி, எங்கே, தீமை ஏற்பட்டது; இது நியாயமா; தவறா என்று கண்டிப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன; அவற்றை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நான் எந்தத் துறை என்று கூடச் சொல்லவில்லை. ரெவின்யூ இலாகாவிலா அல்லது எலக்டிரிசிடி போர்டிலா அல்லது மற்றவர்களிடமா என்று கூடச் சொல்லவில்லை. ஒழுங்கீனமான தவறு ஒன்றும் இல்லாமல், ஏமாந்துகூட இருக்கலாம். ஏமாறியதைக் குற்றம் என்று நான் சொல்லவில்லை; ஒன்றும் தெரியாத நிலையிலே எதைப்பற்றியும் பேசுபவன் அல்லன் நான், பெரும்பாலும் யார் மீதும் எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்துபவனும் அல்லன். ஆனால், இருக்கக்கூடிய நிலையை வற்புறுத்திச் சொல்கிறேன் என்பதைத் தலைவர் ஆகிய நீங்கள்





நன்றாக அறிவீர்கள் என்று கூறி மேலே சொல்லுகிறேன். அனல் மின்சாரம் விஷயமாகப் பேசுகின்ற சமயத்தில் பிறநாட்டுச் செய்திகளைப்பற்றிப் படிக்கின்றபொழுது, ரஷ்யாவிலே அலை மின்சார அமைப்பு, அதற்கென்று ஒரு கூடம் கட்டி, கிட்டத்தட்ட அது முடிந்து விட்டது போன்ற செய்திகள் தெரிய வருகின்றன. அடுத்த ஆண்டிலேயே மின் விநியோகமும் தொடங்குகிற அளவுக்கு உற்பத்தியாகிவிடும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாம் மனத்திலே கொண்டால்—கொண்டிருப்பார்கள்—இதனாலே நமக்கு எவ்வளவோ வாய்ப்பு இருக்கும்! சாத்தியக் கூறு உண்டா. சாத்தியங்கள் சுலபமாகச் சிக்கனமாக,—சிக்கனமாக இல்லாவிட்டாலுங்கூட—ஏராளமான அளவில் உற்பத்தி கிடைக்கக்கூடுமென்ற நிலை ஏற்படுமானால் நாம், தமிழ்நாட்டிலே இருக்கக் கூடியவர்கள், உண்மையிலேயே அதிர்ஷ்டக்காரர்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், தமிழ் நாடு மிக நீண்ட கடற்கரையைப் பெற்றிருக்கிற காரணத்தினாலே ஆங்காங்கே அலை மின்சார நிலையங்கள் நிறுவலாம்; ஆகவே அதற்கு வேண்டிய தொடர்புகளை இப்பொழுதே மேற்கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். இல்லாவிட்டால் ஆட்சி குழுவிலே இருப்பவர்கள் ரஷ்ய நிபுணர்களையோ அல்லது நம் நாட்டு நிபுணர்களையோ இது விஷயமாகக் கலந்து பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம்; நான் சதா சொல்லிக் கொண்டு வரக்கூடிய விஷயந்தான். என்றாலும் அதை நான் இப்பொழுதும் வற்புறுத்திக் கூறுகிறேன். ஆற்று வளமில்லாத இடங்களுக்கு முதலிலே மின்சார சலுகைக் கொடுக்கப்பட வேண்டும். அணைக்கட்டிலிருந்து தண்ணீர் வருகிறது; அந்தத் தண்ணீரால், தண்ணீரின் உந்துதலால் மின்சாரமும் கிடைக்கிறது. தண்ணீர் செல்கின்ற இடங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. முதலிலே தண்ணீர் வராத, அதனாலே வேளாண்மையோ பிற துறைகளோ வளரமுடியாத நிலையில் இருக்கக்கூடிய இடங்களுக்கு முதலில் மின்சாரம் கிடைக்கவேண்டும். தண்ணீர் செல்ல முடியாத மேட்டுப் பாங்கிற்கு மின்சாரம் செல்லமுடியும். உதாரணமாக, காவிரியாற்று நீரை இராமநாதபுரத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்றால்—அது மேட்டுப்பாங்கான இடம்—தண்ணீர் பாயாது என்ற காரணம் சொல்லப்படும். அது சரியா இல்லையா என்பதில் வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. அதைப்பற்றி நான் ஒன்றும் இங்கே கூற முன்வரவில்லை. ஆனால், எந்த மேட்டிலும் மின்சாரம் பாயும். ஆகவே இதை எண்ணிப்பார்த்து இராமநாதபுரம் ஜில்லாபோன்ற நீர் வளமில்லாத பகுதிகளுக்கு மின்சாரத்தை நிரம்பக் கொடுக்கின்ற சலுகையை அளித்து, அங்கு ஏராளமான மோட்டார் வசதிகள் உண்டாக்கி அதன்மூலம் கிடைக்கின்ற தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய முறையில்—ஆற்று வளமில்லாத ஊரிலே ஊற்றுவளம் உண்டு என்ற உண்மை நமக்குத் தெரியும்—வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மாதிரியாக ஆற்று வளம் இல்லாத பகுதிக்கு, ஊற்று வளம் இருக்கின்ற காரணத்தினாலே மின்சாரத்தைக் கொடுத்து பூமிக்கடியில் உள்ள நீரை மேலே கொண்டு வந்து அதன் மூலம் விவசாய வளம் பெருகச் செய்ய முடியுமானால் நம்முடைய உணவுப் பிரச்னையும் ஓரளவு—இல்லை—பெருமளவுக்கு தீரக்கூடிய நிலையைக் காணமுடியும். அதோடு கூட சில பகுதிகளிலே இந்த மின்சாரம் ஊற்று நீரைக்கொணர பயன்படாது என்று இருக்குமானால் அப்படிப்பட்ட இடங்களில் இருப்பவர்கள் வேறு சில சிறு கைத் தொழில்களைச் செய்ய வசதியாக மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். இதற்காகவே நான் அடிக்கடி சொல்வதுண்டு, சிறந்த விவசாயப் பிராந்தியத்தைத் தொழில் பிராந்தியமாக ஆக்கினால் இரண்டும் கெட்டுவிடும் என்று. அது என்னுடைய அழுத்தமான நம்பிக்கை; கணிப்பு. விவசாயத் தொழிலாளர்களுக்கு இருக்கிற கடமையும், சேவையும், நேரமும் வேறு. அவர்களுடைய தேவையும் கூட அளவிலே வேறுபட்டது, தொழிற்துறைத் தொழிலாளர்களுடைய சேவையும், அளவும், வேலை நேரமும் எல்லாம் வேறுபட்டது. இது ஒன்றோடொன்று முட்டிமோதுமானால் இரண்டையும் அது பாதிக்கக் கூடும். நல்ல விவசாய வளம் உள்ள விவசாயப் பிராந்தியத்தில் விவசாயமும், விவசாயத்தை ஒட்டிய தொழிற் துறைகளும் வளர்க்கப்பட வேண்டும். அதை விட்டுவிட்டு எல்லா ஊருக்கும் நூற்பாலை, எல்லா ஊருக்கும் கரும்பாலை என்று சொல்வது அல்லது அது மாதிரியான ஒரு பாங்கிலே செயல்பட என்றுவது அல்லது செயல்படுவது பயனுள்ள நல்ல நெறியாகமாட்டாது. சில பிராந்தியத்திலுள்ள சீதோஷ்ண ஸ்திதிகள், அங்கு இருக்கிற பிற வாய்ப்புக்கள், மூலப் பொருள்கள்—பச்சைப் பொருள்கள் என்று சொல்லுகிறோமே (ரா மெட்டீரியல்ஸ்) அவை, மனித சக்தியினுடைய வாய்ப்பு இவற்றையெல்லாம் கணக்கிற் கொண்டு அதற்குத் தகுந்த இடங்களிலே அந்தத் தொழிலைத் தொடங்குவது செம்மையாக இருக்கும். அப்படித் தொடங்குவதற்கு இந்த மின்சாரத் துறையைப் பயன்படுத்திக் கொண்டு எல்லோரும் வாழ வழிவகுக்க வேண்டும். ஆனால் எல்லோரும் ஒரு துறையில் நின்று வாழமுடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையாகப் பலரும் பல்வேறு துறையில் நின்று வாழலாம். இதை மனத்திலே கொண்டு எல்லோருடைய நல்வாழ்வும்—எல்லோருக்கும் ஒரு நிலை இல்லாவிட்டாலும், நிலை மாறினாலும், எல்லோரும் மகிழ்வோடு; வளத்தோடு—தன்னுடைய தேவையை தானே நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய வாய்ப்பு வசதிகளோடு கூடிய வாழ்க்கையாக அமையத் தக்க வகையில் இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரி எண்ணங்களிலே செல்லும்போது நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். பல்வேறு துறைகளிலே நாம் பிறபல மாகாணங்களை விட முன்னேறி இருக்கிறோம். இந்த மின்சாரத் துறையும் பல்வேறு மாகாணங்களில் இருப்பதை விட நம்முடைய மாகாணத்தில் முன்னேற்றம் பெற்றிருக்கிறது. கிடைக்கின்ற வாய்ப்பு வசதிகளையெல்லாம் முடிந்தவரை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதே சமயத்தில் இத்துறையில் ஏற்படுகிற விரயங்களையெல்லாம் தடுத்து நிறுத்தவேண்டும். ஆனால் இந்த



அளவோடு நாம் திருப்திப் பட்டுக் கொள்ள முடியாது. கனம் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களும் திருப்திப்படுகிற இனத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்பது எனக்குத் தெரியும், மேலும் மேலும் வளம் வேண்டுமென்ற பேராசை நமக்கு இருக்கவேண்டும். ஆறுதல் அடைந்து விட்டால் நாம் வாழ்வில் வளர முடியாது; ஓங்கமுடியாது. எந்தவரையில் ஓரளவுக்கு மகிழ்ச்சிதான் என்றாலும் கூட, முடிந்தது வேலை என்று சொல்லக் கூடிய நிலை எந்தக் காலத்திலும், எந்தத் துறையிலும் உலகத்திலே எங்கும் இருக்க முடியாத அளவுக்கு சமுதாயத் தேவைகள் வளர்ந்து கொண்டு போகிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். அந்த மனப்பாங்கிலே ஒரு பத்து வருஷத்திற்குள்ளே, 20 வருஷத்திற்குள்ளே மின் சக்தியை எந்த அளவுக்கு நாம் பெருக்கியிருக்கிறோம் என்று எண்ணுகிறபோது மகிழ்கிறேன்; அதற்காக நன்றி செலுத்துகிறேன், பாராட்டுகிறேன். அதே நேரத்திலே இந்தப் பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்குள்ளே—தனியாரோ அல்லது பொதுவாரோ—நம்முடைய மாகாணத்தில் மின்சாரத்தின் கட்டண விகிதாசாரம் மேலோங்கி நிற்கிறது என்பதையும் கணிக்க நாம் மறந்துவிடக் கூடாது. அந்த நிலையைப் பார்க்கிறபோது மகிழ்வில்லை. வேறு துறைகளில் எல்லாம் உற்பத்தி பெருகப் பெருக விலை குறையும் என்பதை மெய்யாகக் காணுகிறோம். ஆனால் இந்தத் துறையிலே உற்பத்தி பெருகப் பெருக, விலையும் உற்பத்தி மடங்கைப்போலவே ஏறிக்கொண்டே போயிருக்கிறது. இதையும் நாம் மறந்து விடப்படாது. அதே போல் தனிப்பட்டவர்களுடைய மின் விநியோக உரிமையை நம் ஆட்சி எடுத்துக் கொண்டு விட்டது. அவர்களுக்கு இன்னும் இழப்பீட்டுத் தொகை தீர்த்துக் கொடுக்கப்படவில்லை. அவர்களிலே சிலர் பெரிய கோடீஸ்வரர்களாக இருக்கலாம். சில இடங்களில் இருந்த மின் நிலையங்களில் ஷேர்ஹோல்டர்களில் மிகப் பலர், மாதா மாதம், வருஷா வருஷம் டெபாசிட் பணத்திலிருந்து வருகின்ற வட்டியை வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் போல உள்ள பலர் இருக்கிறார்கள். விதவைகள் இருக்கிறார்கள். அந்த மாதிரி இடங்களில் எல்லாம் உரிமைகள், உடைமைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டுவிட்ட பிறகு அந்தக் கம்பெனிகளை முழுக்க முழுக்க லிக்விடேஷன் செய்ய முடியாமல், அதனுடைய இழப்பீட்டுத் தொகை கொடுக்காத காரணத்தால் இருந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் விரைவில் முற்றுவிக்க வேண்டுமென்று வேண்டி என்னுடைய உரையை முன்னதாகவே முடித்து அமர்கின்றேன். வணக்கம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, மின்சாரக் குழுவும், அதனுடைய பணியும் நம்முடைய ராஜ்யத்திற்கும் நம்முடைய நாட்டுக்கும் மிக மிக முக்கியமானது என்பதை எவ்வளவு பேசினாலும் மிகைப்படுத்தி விட முடியாது. அரசியல் அதிகாரத்தை விட நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானது மின்சார சக்தி. இன்னும் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும்; சமுதாய மாறுதல் ஏற்பட வேண்டுமென்று

சொன்னால் எலக்ட்ரிசிடி பவர் இன்னும் அதிகமாக வேண்டும். இதிலே நம்மை நாமே பாராட்டிக் கொண்டே பேசிக்கொண்டு போவதனால் பேசிக் கொண்டே இருக்கலாம். பாராட்டுவதோடு நின்று விடக்கூடாது. சாதனைகள் மிக அதிகமாக இருக்கின்றன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டார்கள். அவையெல்லாம் புள்ளி விபரம். அதை யாரும் மறுக்க முடியாது. அதனுடைய மொத்த ஆஸ்தி, மூலதனம் 253 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். இப்போது மதிப்பு எவ்வளவு இருக்கும் என்பதைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்கள் டிப்ரிசியேஷன் எல்லாம் போட்டுப் பார்த்தால் தெரியலாம் என்று சொல்லலாம். வருஷா வருஷம் டிப்ரிசியேஷன் போடுவது உண்டு என்பதைப் போன தடவை அமைச்சர் அவர்கள் முதலிலே ஏற்றுக் கொள்ளவில்லை, பிறகு ஏற்றுக் கொண்டார்கள். நான்கு வருஷத்திற்குச் சேர்த்து ஒரு ஆடிட் ரிப்போர்ட் வைக்கப்பட்டிருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் முன்பு சொன்னது வேறு; இப்போது சொல்வது வேறு. ஏன் காலதாமதமாக கணக்குகள் ஆடிட்டுக்குக் கொடுக்கப்பட்டது என்று கேட்கப்பட்டபோது இவ்வாறு சொன்னேன். சர்க்காரில் இருக்கிறபோது 'ஸ்ட்ரெயிட் லைன் டிப்ரிசியேஷன்'. போர்டுக்கு வந்த பிறகு 'ஸிங்கிங்' பண்ட் மெதட்'-ல் மாற்றிக் கணக்கு எழுதினார்கள். அதனால் காலதாமதம் ஆயிற்று என்று சொன்னேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** காலதாமதமாகி இப்போது ஏழெட்டு வருஷங்கள் கழித்து ஆடிட் ரிப்போர்ட் வந்திருக்கிறது. அது அப்படியே இருக்கட்டும். இனிமேலாவது காலதாமதம் ஆகாது என்று எதிர்பார்க்கலாம். இந்த சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று டிப்ரிசியேஷன் போட்டுப் பார்க்கும்போது, கனம் உறுப்பினர் திரு. மு. கருணாநிதி எடுத்துக் காட்டிய மாதிரி 1½ லட்சம் ரூபாய் பெறுமானதை 4½ லட்சம் ரூபாய் கொடுத்து வாங்கியதால் ஒருவர் 3 லட்சம் ரூபாய் லாபம் அடைந்தார் என்று சொல்லலாம்.

1-00 p.m. அதேபோல், இதற்கு முன்பு ஒரு தடவை எமரால்ட் டாம் அக்விஸிஷன் சமயத்தில், இல்லாத மரங்களுக்கு எல்லாம் வால்யூ போட்டு பல தொகைகள் கொடுக்கப்பட்டு அது இந்த சபைக்கு கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டு ஒரு சில அதிகாரிகளுக்கு வேலை போனதும் ஞாபகம் இருக்கலாம். அமைச்சர் அவர்கள் அவசரம் அவசரமாக பதில் சொல்லும் முறையில் அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை, மந்திரி கையெழுத்து போடவில்லை, என்று சொன்னார்கள். மந்திரிக்கு சம்பந்தம் இருக்கிறது என்று சொல்லவில்லை. முன்பு கூட மந்திரிக்கு சம்பந்தமா இல்லையா என்பது அல்ல பிரச்னை. மந்திரிகளைப்பற்றிய குற்றச் சாட்டல்ல, அல்லது தனிப்பட்டவர்களைப் பற்றிய குற்றச்சாட்டல்ல. எந்தச் சூழ்நிலையில் இது ஏற்பட்டது என்பதுபற்றி ஆராய்கிறேன் என்றார்கள். ஓவர் காப்பிட்டலைசேஷன் இருந்தாலும், நான்கு லட்சத்தில் மூன்று லட்சம் மோசடி செய்திருக்க





லாம். ஒருவேளை நிலத்தின் விலை நான்கு கோடி இருக்கலாம். ஆனால் நான்கு மாதங்களுக்குள்ளே அவ்வளவு வால்யூ ஏறியிருக்க முடியாதல்லவா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ‘நான் சொன்னது, "கலெக்டர் அவர்களிடம் வால்யூவேஷன் கேட்டு வாங்கினதாக தகவல் இருக்கிறது. அந்த அளவிற்கு அதன் மதிப்பு இருக்குமானால், அதை கலெக்டர் வால்யுவேஷன் படி வாங்கியிருந்தால் அதை அக்கௌன்டன்ட்-ஜெனரல் பரிசிலனை செய்வார்கள், ஆகவே, நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது" என்பதுதான்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நிரூபிக்கப்பட்டதாக சொல்லவில்லை. என்ன தவறு நடந்திருக்கிறது என்பது பரிசீலிக்கப்பட வேண்டும். நான்கு மாதங்களுக்குள் மதிப்பு இவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா? இந்த விஷயம் அக்கவுண்டண்ட்-ஜெனரல் பார்க்க வேண்டியதா? இல்லை, வேறு துறையில் பரிசீலிக்க வேண்டியதா? இவ்வளவு தூரம் வந்த பிறகு ஏ.ஜி. பரிசீலனை செய்வதென்றால் அவர்களுக்கு சங்கடமான நிலைமை. வேறு துறையில் பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டிய விஷயம் இது. ஓவர் காப்பிடலைசேஷன் கொஞ்சம் இருக்கலாம். இருந்தாலும் இப்போதுள்ள விலைவாசி உயர்வையும் பார்க்க வேண்டும். இன்டர்நாஷனல் ப்ரைஸஸ் ஏறியிருக்கிறது. மொத்த மதிப்பு 253 கோடி ரூபாய் என்பதை விட அதிகமாகவே இருக்குமே தவிர குறைவாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில், நாளுக்கு நாள் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. மார்க்கெட் வால்யூ போட்டு பார்த்தால் 253 கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஆஸ்தி இருக்கும். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை, சந்தேகப்படவில்லை. ரெயில்வேயின் மதிப்பு 2,200 கோடி ரூபாய்தான் புக் வால்யூ படி. ஆனால் ஆக்சுவல் வால்யூ 3,000 கோடிக்கு அதிகமாகவே இருக்கிறது என்று வால்யூ செய்திருக்கிறார்கள். இவ்வளவு ஊதாரித்தனங்கள் நடந்திருந்தாலும் அதையும் மிஞ்சி இதற்கு ஆஸ்திப் பொறுப்பு இருக்கும் என்பதுதான் என் அபிப்பிராயம். இவ்வளவு பெரிய தொகையை முதலீடு செய்து நடத்தக் கூடிய ஒரு பெரிய தொழிலில் அதிலுள்ள வருமானத்தையும் கவனிக்க வேண்டும். அரசாங்கத்தின் முதல்தான் இதில் அதிகம். இந்த பதினைந்து வருட காலத்தில் போட்டிருக்கக் கூடியது 253 கோடி. 200 கோடிக்கு கடந்த பத்து வருட காலத்தில் போட்டிருக்கிறோம், இரண்டாம் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டங்களில். 253 கோடியில் 200 கோடி ரூபாய் மதிப்புள்ள முதலீடு கடந்த பத்தாண்டு காலத்தில் போடப்பட்டிருக்கிறது. ஆகவே வால்யூ குறைந்து போய் விடாது. இதில் வருமானம் இருக்கிறதா என்பதுபற்றி அமைச்சர் அவர்கள் தம் பிரசங்கத்தில் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி பலர் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்கள் அதைச் சொல்லிவிட்டுப் போய்

விட்டார்கள். கட்டணப் பட்டியலை மாற்றியமைத்துத்தான் ஈடு செய்யப் போகிறோம், அதைப் பற்றி ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி வருகிறார்கள். ஒவ்வொரு திட்டத்திலும் சர்சார்ஜ், கட்டணத் தீர்வை உயர்த்துவது என்று போய்க் கொண்டிருந்தால் எலெக்ட்ரிசிடி எவ்வளவு பெருகியும் என்ன பிரயோஜனம்? எலெக்ட்ரிசிட்டி பெருகப் பெருக மக்களுக்கு அது மலிவான விலையில் கிடைக்க வேண்டும். அவசியமான தேவைகளுக்காவது மலிவான விலையில் கிடைக்க வேண்டும். சோஷியலிச நாடுகளில் அப்படி இருக்கிறது. சோஷியலிசம் நடத்துவது என்பது உண்மையாக இருந்தால் உணவு எப்படி அவசியமோ அப்படி மின்சாரமும் அவசியம். என்ன காரணத்தினால் லாபம் குறைவாக இருக்கிறது? அரசாங்கத்திற்குக்கொடுக்க வேண்டிய வட்டித் தொகையைக் கூட பூராவும் கொடுக்கமுடியவில்லை. வட்டியை கடன் கொடுத்ததாக எழுதிவிடுகிறார்கள். நமக்கு வரவேண்டிய வட்டியை கடன் கொடுத்ததாக ஏற்று அதற்கும் வட்டி போட்டுக் கொண்டிருக்க முடியுமே தவிர வேறொன்றுமில்லை. 253 கோடி ரூபாய் முதலீடு செய்து நடத்தும் தொழிலில் இருந்தும் நம் பட்ஜெட்டுக்கு ஏதாவது வருமானம் வர வேண்டுமா? வேண்டாமா? மத்திய சர்க்கார் ரெயில்வே முதலீட்டிலிருந்து மத்திய சர்க்கார் ரெவின்யூவிற்கு வருமானம் பெறுகிறார்கள். அதே போன்று நம் பட்ஜெட்டிற்கு இதிலிருந்து வருமானம் எதிர்பார்க்காவிட்டாலும் போட்ட முதலுக்கு வட்டி அளவிற்காவது வருமானம் எதிர்பார்க்கும் உரிமை உண்டு, அது நியாயமே. அதற்கு மேல் அவர்களுக்கு லாபம் இருந்தால் அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். அப்போது கட்டணம் உயர்த்துவதற்கு போகாமல் இருக்கலாம் அல்லவா? 253 கோடி ரூபாய் செலவு செய்தும் இவ்வளவு அபிவிருத்திகள் செய்தும் என்ன பலன்? அரசாங்கத்திற்கு வட்டி கூட கொடுக்க முடியவில்லை. லாபம் 3 சத விகிதம் கூட இல்லை. வட்டி கொடுத்த பிறகு 3 சத விகிதம் லாபம் பெற கட்டணத்தை எவ்வளவு உயர்த்தலாம் என்று கூறியிருப்பதிலிருந்து இதன் நிதி நிலை திருப்திகரமாக இருக்கிறது என்று என்னால் திருப்தி அடைய முடியவில்லை. இதை லாபகரமாக நடத்த முடியவில்லையே என்றுதான் வருத்தப் படுகிறேன். இன்சால்வென்சியாகிவிடும் என்று நான் சொல்லவில்லை. இவ்வளவு வசதிகள் இருந்தும் ஏன் லாபகரமாக நடத்த முடியவில்லை என்பதற்கு மின்சாரக் குழு பதில் சொல்ல வேண்டும். இத்துறையில் சேர்மன் முழு நேர ஊழியர், மற்றவர்கள் எல்லாம் பார்ட் டைம். இந்த நிர்வாகம் எப்படி நடக்கிறது, மேற்பார்வையில் எவ்வளவு திறமையிருக்கிறது என்றெல்லாம் பார்த்தால் சாதனைகளை விட பலஹீனங்களைப்பார்த்துத்தான் அதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தனியார் துறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மின்சாரத் துறையில் பல பலஹீனங்கள் இருக்கலாம். ஆனால் அதைவிட நன்மைகள் அதிகம் உண்டு என்பது என் அபிப்பிராயம். தனியார் துறையில் உள்ளது பூராவையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன். அப்படிச் சொல்லி விட்டு பேசாமல் விட்டு விடாதீர்கள். இனி எந்த அபிவிருத்தியும்



அவர்கள் பிரதேசத்தில் ஏற்படாது. பாம்பை பாதி அடித்து மந்திரி விட்டு விடாதீர்கள், அப்புறம் அவஸ்தைப் படக்கூடியது அங்குள்ள மக்கள். ஆகவே, உடனே அவற்றை அரசாங்கம் எடுத்துவிடவேண்டும். ஏன் இந்தத் துறையில் வருமானம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? (குறுக்கீடு) நான் டாக்டர் நடராஜன் அவர்கள் மாதிரி எக்னாமிக்ஸ் படித்தவன் அல்ல. ஜெயிலில்தான் படித்தேன். பள்ளிக்கூடத்தில் படிக்கவில்லை. சென்னை நகரம் தவிர மற்ற நகரங்களில் எல்லாம் தனிப்பட்டவர்களிடம் அல்லது முனிசிப்பாலிடியிடம் இருக்கிறது. திருச்சி பெரிய நகரம். அதைச் சுற்றியிருக்கும் விநியோக உரிமை தனிப்பட்டவர்களிடம் இருக்கிறது. சேலத்திலும் தனிப்பட்டவர்களிடம் தான் இருக்கிறது. தூத்துக்குடியிலும் தனிப்பட்டவர்களிடத்தில் தான். இப்படி வளர்ச்சி அடைந்து வரும் பகுதிகளில் எல்லாம் விநியோக உரிமை தனிப்பட்டவர்களிடம்தான் இருக்கிறது. மின்சாரக் கழகத்தினிடமிருந்து விலை கொடுத்து வாங்கியும், நாங்கள் 9 சத விகித வட்டிக்கு கடன் வாங்குகிறோம் என்று சொல்லியும் அந்தத் தனிப்பட்டவர்கள் லாபம் காட்டுகிறார்களே, அவர்கள் லாபம் பெறுவது எப்படி சாத்தியமாக இருக்கிறது? ஒருவேளை அந்தப் பகுதிகள் லாபகரமாக இருக்கக் கூடியவைகளா? அதை யாவது எடுத்துப் பார்த்து நாம் லாபகரமாக நடத்தலாமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அவர்களிடம் என்ன முறை இருக்கிறது அப்படி? நமக்கு 3 சத விகிதம் கூட லாபம் கிடைக்கவில்லை. சவுத் மெட்ராஸ் எலக்ட்ரிசிடி கார்ப்பரேஷன் இருக்கிறது வொர்க்கர்ஸுக்கு போனஸ் கொடுத்தும் 25 சதவிகிதம், 30 சத விகிதம் என்றும் லாபம் காட்டுகிறார்கள். ஷேர் ஹோல்டர்களுக்கு பங்குத்தொகையில் 10 சதவிகிதம் லாபம் கொடுக்கிறார்கள். சேலம் எலெக்ட்ரிசிட்டி கார்ப்பரேஷன் கன்ஸுமர்களுக்கு ரிபேட் கூட கொடுக்கிறார்கள். இங்கிருந்து மின்சாரத்தை விலைக்கு வாங்கி அவர்கள் கொடுக்கிறார்கள். வேலை திறமையை எடுத்துக் கொண்டால் ஒரு ட்ரான்ஸ்ஃபார்மருக்கு ஒரு ஆள் இருக்கிறார். இங்கேயோ நாலைந்து ட்ரான்ஸ்ஃபார்மருக்கு ஒரு லைன்மேன், ஒரு ஹெல்ப்பர் என்றிருக்கிறார்கள். அந்த ஹெல்ப்பரை பார்க்கவேண்டுமென்றால் சூபர்வைசர் வீட்டில் தான் பார்க்க முடியும். ஒருவர் வந்து ப்யூஸ் போய் விட்டது என்று சொன்னால் 24 மணி நேரம் ஆகும், அதை சரிப்படுத்துவதற்கு. அதற்கு சூப்பர்வைசரை நேரில் போவதை விட்டு எஸ்.ஈ.-க்கு தந்தி கொடுத்து அல்லது அவரை போனில் கூப்பிட்டுச் சொல்வதுதான் சுலபமாக இருக்கிறது. அப்படியும் வேலை முடிய இரண்டு நாட்கள் ஆகி விடுகின்றன. இப்படியெல்லாம் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆள் கண்காணிப்பு இல்லாத ஒரு ட்ரான்ஸ்ஃபார்மர் கூட தனிப்பட்டவர்கள் நடத்தும் ஏரியாவில் இல்லை. இப்படியிருக்கிற இடத்தில் அவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. அவர்களுக்கு மட்டும் எப்படி லாபம் கிடைக்கிறது? தனிப்பட்டவர்கள் நடத்தினால் நல்ல லாபம் வருகிறது என்ற காரணத்தினால் தான் தனியார் துறையில் இருக்கவேண்டும் என்று திரு. சா. கணேசன் போன்றவர்கள் சொல்லுகிறார்கள்: (திரு. சா. கணேசன்: எடுத்துக்காட்டுவதற்காக சொன்னேன்.) (கனம் திரு.

ஆர். வெங்கட்டராமன்: கலியாணசுந்தரம் அவர்கள் இப்படிச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கவில்லை) ஆம். நான் சொல்வேன் என்று எதிர்பார்த்திருக்க முடியாதுதான். நான் இதை வருத்தத்துடன் எடுத்துச் சொல்லுகிறேன். நான் இன்ன இடத்தில் இன்ன தொழிலை வைத்துக் கொள்ளட்டும் என்று சொல்லவில்லை. இப்படிப் பட்டவைகளை விட்டு விடுங்கள் என்று சொல்லவில்லை. அவ்வளவு வேலைகள் இருந்தும் கூட தனியார்த் துறையில் நடைபெறும் இடங்களில் நல்ல லாபம் கிடைக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக சொல்லுகிறேனே தவிர, நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை, பெரிய தொழில்கள் தனியார் துறையில் இருத்தல் கூடாது, சர்க்கார் துறையில் தான் இருக்கவேண்டும் என்று சொல்பவன் நான். தனியார் துறையில் லாபகரமாக நடக்கிறது என்று சொல்லுகின்ற நோக்கில் கன்ஸ்யூமர்ஸ் பாயிண்ட்டில் பார்த்தால் என்னென்ன வசதிகள் பொதுத்துறையில் இருக்கின்றன, தனியாரிடம் இருந்தால் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதையும் நான் எடுத்துக்காட்டுகிறேன். தனியார் துறையில் மூன்று சர்வீஸ்கள் இருந்தால் தான் ஒரு போஸ்டை போடுவார்கள். மின்சார இலாகாவை எடுத்துக்கொண்டால், சேர்மென் அவர்களிடத்தில் போய் அடிக்கடி தொந்தரவு செய்து கொண்டிருந்தால், நிச்சயமாக உடனடியாக போஸ்ட் வந்துவிடும். பின்னால் ஆறு மாதங்கள் கழித்தாவது வரும், அதற்குப் பின்னால் ஒழுங்காக வேலை நடைபெறுவதற்கு இரண்டு வருஷங்கள் வரை ஆகிவிடும். ஜனங்களுடைய வசதியை உத்தேசித்து எதையாவது செய்துவிடுவார்கள் மின்சார இலாகாவினர். சிறிது காலதாமதம் ஆனாலும் வேலைகளை நடத்திக் கொண்டிருப்பார்கள், போஸ்ட்-கள் போடுவதிலும் லாபகரமாக இருக்கிறதா என்பதைப்பற்றி அதிகமாக பார்ப்பதில்லை. அதே போன்று கிராமங்களுக்கு மின்சாரம் கொடுப்பதிலும் அரசாங்கத்திடமிருந்து சப்சிடி வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லி, நஷ்டமான இடங்களில் கூட மின்சார வசதியை செய்து கொடுக்கிறார்கள் ஸ்டேட் எலக்ட்ரிசிட்டி போர்டு அவர்கள். அதே நோக்கில் லாபகரமாக நடத்த முடியவில்லை என்று சொல்லும்போது, தனியார் மட்டும் எப்படி லாபகரமாக நடத்த முடிகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் சில விபரங்களை முன்னால் சொன்னேன். அமைச்சர் அவர்கள் கல்யாணசுந்தரம் கூட இப்படி சொல்ல ஆரம்பித்துவிட்டாரே என்று ஆச்சரியப்பட்டார்கள். (கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: நான் சொன்னது டிஸ்கஷனுக்கு அப்பாற்பட்டது) சரி, அப்படியிருக்கட்டும். நீங்கள் சொன்னது யாருக்காவது கோபமிருந்தால் அதை நான் திருத்திக் கொள்ளவேண்டுமல்லவா? தனியார் துறையில் கிடைக்கின்ற லாபத்தை எடுத்துக் காட்டி, என்னுடைய எலக்ட்ரிசிட்டி போர்டு மட்டும் நல்ல லாபத்தை காட்ட முடியவில்லை என்பதற்காகத்தான் நான் அந்த விபரங்களைச் சொன்னேன். ஸ்டேட் எலக்ட்ரிசிட்டி போர்டு என்றிருப்பதால் எதை வேண்டுமானாலும் நடத்தலாம் எப்படிவேண்டுமானாலும் இருக்கலாம் என்பதில்லை. மின்சார போர்டு இன்னும் திறமையோடு பணியாற்றவேண்டும். இன்னும் அபிவிருத்தி அடையவேண்டும். ஜனங்களுக்கு இன்னும் வேகமாக





சர்வீஸ் கொடுக்கவேண்டும். அதே நோக்கில் எலெக்ட்ரிஸிடி போர்டில் இருக்கக்கூடிய கஷ்டங்களை நான் உணராமல் இருக்கவில்லை. ஆனால் நிறையபணம் இருக்கிறது, எவ்வளவோ விதமான பொருளும் இருக்கிறது. வேலை அதிகமாக செய்யக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது என்பதையும் கூறிக்கொள்கிறேன். எலக்ட்ரிஸிடி போர்டில் இன்னும் தொழிலாளர்களை அதிகப்படுத்தவேண்டும் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். திரு. சா. கணேசன் அவர்கள் தொழிலாளர்களை குறைக்கவேண்டும் என்று அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். ஒரு சூப்பர்வைசருக்கு 50, 60 சதுர மைல் விஸ்தீரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 70 மைல் லைன்களைப் பார்க்கவேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் நிர்வகிப்பதற்கு வேண்டிய தொழிலாளர்கள் மிகவும் குறைவு. கீழ்மட்டங்களில் இருக்கின்ற நிலைமையைப்பார்த்தால், சிக்கனம் என்ற காரணத்தைச் சொல்லி, தொழிலாளர்கள் மிகவும் குறைவான அளவிலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக கன்ஸ்யூமர்ஸ்-க்கு பாதகம் ஏற்படுகிறது. தொழிலாளர்களுடைய எண்ணிக்கையை எந்த அளவுக்கு அதிகரிக்கலாம் என்று நான் இப்போது சொன்னால் அது ஏற்காது, நான் இப்போது சொல்லவும் விரும்பவில்லை. பொதுத்துறையில் நடைபெறுகின்ற வேலைகள் இருக்கின்ற இடங்களில் அவசியத்திற்கு தகுந்தபடி தொழிலாளர்களையும் அதிகாரிகளையும் அதிகப்படுத்தினால், மின்சார வேலைகள், திறமையாகவும் வேகமாகவும் நடப்பதற்கு பயன்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் மின்சாரம் போகாத கிராமமே இராது என்று அப்போது மின்சார இலாகா அமைச்சராக இருந்த கனம் திரு. ராமையா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இப்போது அவரிடம் கேட்டால், நான் என்ன செய்வது, நான் மின்சார இலாகாவை வைத்துக்கொண்டிருந்தால் அப்படியே செய்து காட்டியிருப்பேன் என்று சொல்லுவார்களோ என்னமோ தெரியாது, அன்றைக்கு அவர்கள் சொன்னது. இப்போது இருக்கின்ற அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களையும் கட்டுப்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். மூன்றாவது திட்டத்திற்குள் என்ன அபிவிருத்தி நடந்திருக்கிறது? சில ஜில்லாக்களில் மட்டும் தான் திருப்திகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை காண முடியும். சென்னையைச் சுற்றியிருக்கும் செங்கற்பட்டு ஜில்லாவில் வேண்டுமென்றால் திருப்தி என்று சொல்லலாம். கோவை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் திருப்திகரமாக இல்லை என்பதை என்னால் சொல்ல முடியும். ரெவின்யூ கிராமங்களில் வேண்டுமென்றால் அதிகமாக மின்சாரம் போயிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் குக்கிராமங்களில் பலவற்றில் மின்சாரம் போகவேயில்லை. ரெவின்யூ கிராமங்களில் கூட அந்த வழியாக சில போஸ்ட்கள் இருக்கும். சில தெருவிளக்குகள் மட்டும் போட்டிருக்கக்கூடும், ஆனால் சுற்றியிருக்கும் கிராமங்களுக்கு மின்சாரம் போயிருக்காது. தஞ்சை ஜில்லா, ராமநாதபுரம் ஜில்லா, திருச்சி ஜில்லா, சேலம் ஜில்லா போன்ற ஜில்லாக்களில் எல்லாம் குக்கிராமங்களில் எடுத்துக்கொண்டால், மின்சாரம்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] **31st] July 1965**

போயிருப்பது மிக குறைவாகத்தான் இருக்கும். இதற்கு காரணம் என்ன என்று பார்க்கும்போது, தனியார் துறைகள்தான், அவர்கள் இந்த இடங்களில் நல்ல லாபம் பெற்றுவருகிறார்கள். கோயம்புத்தூரில் ஒரு பகுதி தனியார்களிடத்தில் இருந்து வருகிறது. 15 சதவிகிதம் லாபம் இருக்கவேண்டும். அப்போது தான் மின்சார வசதி கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். அதாவது ஒரு லட்சம் ரூபாய் செலவிடுவதாக இருந்தால் 15 ஆயிரம் ரூபாய் லாபம் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதோடு ஸ்கீம்களுக்கு அட்வான்ஸ் டிபாசிட் வேறு கேட்கிறார்கள். இப்போது பொராம்புக் கன்சார்ஜ்-க்கு 25 ரூபாய் டெபாசிட் பெற்று வருகிறார்கள். ஆனால் நம்பிடத்தில் நம்மூ வாங்கும் டெப்பாசிட்டுகளுக்கு 3 சதவிகிதம் தான் வட்டி கொடுக்கிறார்கள். 250, 300 ரூபாய் என்றெல்லாம் பல இனங்களுக்கு டெப்பாசிட் வாங்கப்படுகிறது, இவற்றுக்கு 3 சதவிகிதம் கூட வட்டி கொடுப்பதில்லை. பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிட்டிகள் இவைகள் தெரு விளக்கு போட வேண்டும் என்று கேட்டால் பணத்தை முதலாவது கட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். இதற்கு 1,500 ரூபாய் 1,000 ரூபாய் கட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். இது தவிர மின்சாரக் கட்டணம் தனியாக கட்டவேண்டும், பல்ப் ரினிவல்-க்கு தனியாக கட்டணம் கட்டவேண்டும். லேபர் சார்ஜ், சூப்பரவைசிங் சார்ஜ் இவைகள் எல்லாம் தனியாக வசூலிக்கிறார்கள். இவ்வளவும் தனியார்கள், பஞ்சாயத்துக்கள்-முனிசிபாலிட்டிகள், பொது மக்கள் இவர்களிடமிருந்து கொள்ளையடிக்கிறார்கள் என்ற வார்த்தையை நான் சொல்ல விரும்பவில்லை, இவ்விதம் சுரண்டுகிறார்கள். இதே நேரத்தில் மின்சாரக் கழகத்தின் கீழ் இருக்கின்ற பிரதேசத்தில் இரண்டு ரூபாய்தான் தெருவிளக்குக்கு கொடுக்கவேண்டும், தனியார் துறையில் இருக்கும் இடங்களில் மூன்று ரூபாய் கொடுக்க வேண்டும். மின்சாரக் கழகம் வேலை நடத்தும் இடங்களில் முன் பணம் போட்டுக்கொள்கிறது. தனியார் துறையில் இருக்கும் இடங்களில் டெபாசிட்டை அட்வான்சாகப் பெற்றுக்கொண்டு தான் மின்சாரத்தை விஸ்தரிக்கிறார்கள். அதிகமான கட்டணமும் வசூலிக்கிறார்கள் ஆகவே எதோ அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது, அப்படியே விட்டுவிடக் கூடாது, உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதை உடனடியாக பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப் புறங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்வதில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். சென்னை கிராமங்களையும் சேர்த்து எடுத்துக் கொண்டால், 54,397 கிராமங்களில் 19,383 கிராமங்கள் தான் மின்சார வசதி பெற்றிருக்கின்றன. இது அவர்கள் கொடுத்த புள்ளி விபரங்களிலிருந்து தான் சொல்கிறேன். ஆகவே நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்குள்ளாவது மின்சாரம் போகாத கிராமங்களே இல்லை என்ற நிலை ஏற்படவேண்டும். பஞ்சாயத்துக்கள், அதே போன்று ஹரிஜனங்கள் கேட்கக்கூடிய இடங்களில் எல்லாம், அவர்கள் தீர்மானம் போட்டாலும் சரி, போடாவிட்டாலும் சரி, இதுவரை அந்த கிராமங்களுக்கு மின்சாரம் போகாமல் இருந்தால்,



31st July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

உடனடியாக மின்சார இணைப்பு கொடுத்துவிட்டு, அதற்கான வேலைகளுக்குள்ள பில்லை போட்டு கலெக்டருக்கு அனுப்பிவிட்டு, அதை பஞ்சாயத்துக்களிலிருந்து கட்டிவிடுவதற்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம். அப்படியில்லாமல் வெறும் போஸ்டை மட்டும் போட்டுவிட்டு அந்த இடங்களில் விளக்குகளை போடாமல் இருக்கக்கூடாது. எதற்காக தெருவில் வெறும் போஸ்ட்கள் மட்டும் நின்று கொண்டிருக்கவேண்டும்? ஆகையினால் ஒரு கிராமத்திற்கு மின்சாரம் போன உடனே, முக்கியமாக ஹரிஜனத் தெருக்களுக்கு—சாங்ஷன் வாங்க கலெக்டரிடம் போய், அங்கிருந்து ஹரிஜன் வெல்ஃபேர் ஆஃபீஸ் வரையில் வந்து, அவர்களிடமிருந்து சப்சிடி வாங்கி விளக்குகள் போடவேண்டுமென்றால் 2-3 வருஷங்கள் ஆகிவிடும். அதுவும் வருஷத்துக்கு 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்போது, இப்போது அதை மூன்று லட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அது கூடக் குறைவு தான், அந்த முறையில் இல்லாமல் மின்சாரம் போன உடனேயே ஹரிஜனத் தெருக்களுக்கு முக்கியமாகவும், எல்லாத் தெருக்களுக்கும் உடனே விளக்குகளைப் போட்டு விடவேண்டும். வேண்டுமானால் பஞ்சாயத்தைக் கலந்துகொள்ளலாம். மின்சாரம் வந்தும் சில பஞ்சாயத்துக்கள் அக்கறை எடுக்காமல் இருக்கலாம். அதற்காக மக்கள் கஷ்டப்படக்கூடாது. ஒரு ஊருக்குப் போன உடன் ஹரிஜனத் தெருக்களுக்குப் போட்டு விடவேண்டும். அதற்குப் பிறகு கலெக்டருக்குப் போய், ஹரிஜன் வெல்ஃபேர் ஆஃபீசுக்குப் போய் சப்சிடியாக வேண்டுமானால் பெற்று ரீஇம்பர்ஸ் செய்து கொள்ளலாம். அப்போது தான் எல்லா கிராமங்களிலுள்ள தெருக்களுக்கும், ஹரிஜனத் தெருக்களுக்கும் மின்சார வசதி கொடுக்கும் முறையில் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எலெக்ட்ரிசிட்டி போர்ட் ஊழியர்களைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் உழைப்பு இல்லை என்றால் இவ்வளவு சாதனைகள் ஏற்பட்டிருக்காது, நன்கு தான் உழைத்திருக்கிறார்கள், விசுவாசமாகப் பணிபுரிந்திருக்கிறார்கள். அவர்களை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்பது எனது வேண்டுகோள். கடந்த 5-6 வருஷ காலமாக மின்சார ஊழியர்களுக்கும், மின்சார கழகத்திற்கும் இடையில் நல்ல உறவு இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய நல்ல பண்பினால் வேலை செய்கிறார்கள், அவர்களிடையிலே உள்ள நல்ல உறவினால் அல்ல, என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே அரசியல் கூடாது, விருப்பு-வெறுப்பு கூடாது. தொழிற் சங்கம் வைத்துக் கொண்டால், எந்தத் தொழிற் சங்கமாக இருந்தாலும் அந்தத் தொழிற் சங்கத்தோடு பேச வேண்டும். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்கவேண்டும். மின்சார போர்ட் ஊழியர்களை அரசாங்க ஊழியர்களாக நடத்துவதா அல்லது தனிப்பட்ட தொழில் நிறுவனங்களிலுள்ள ஊழியர்களைப் போல நடத்துவதா என்ற சர்ச்சை 5-6 வருஷங்களாக இருந்துகொண்டிருக்கிறது.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [31st July 1965

அது இன்னும் தீர்க்கப்படவில்லை. அவர்களிடமிருந்து கட்டாயப் படுத்தி எழுதி வாங்கி விடலாம் 'அரசாங்க ஊழியர்களாக இருக்க விரும்புகிறோம்' என்று அல்லது சிலரைப் பிடித்து, முன்னால் இருக்கிறவர்களைப் பிடித்து ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றி, மிரட்டி அவர்களிடமிருந்து கையெழுத்து வாங்குவதில் வெற்றி அடையலாம். ஆனால் ஒவ்வொரு தொழிலாளியின் மனதிலும் கை வைத்துப் பார்த்தால் அவர்கள் அரசாங்க ஊழியர்களாக இருப்பதை விட தனிப்பட்ட தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளிகளைப் போலத் தான் இருக்க விரும்புகிறார்கள் என்பது தெரியும். தொழில் நிறுவனங்களில் உள்ளவர்களைப் பொறுத்த வரையில் தனிச் சட்டம் இருக்கிறது. இவர்களுடைய வழக்கு உயர் நீதி மன்றம் வரையில் போய் அவர்கள் என்ன தீர்ப்பளித்திருக்கிறார்கள்? இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்படி அரசாங்கம் இந்த வழக்கை முடிவுக்கு விடவேண்டுமென்று சொன்ன பிறகு இப்போது அப்பீலுக்குப் போயிருக்கிறார்கள். இதிலே அரசாங்கம் அப்பீல் போட வேண்டுமா? தொழிற் சங்க பிரதிநிதிகள் தாவா செய்தார்கள். போட்ட தாவா எல்லாவற்றிலும் மின்சாரக் கழகம் தோற்றிருக்கிறது. எதெல்லாம் அரசாங்கத்திற்குச் சாதகமாக இருக்கிறதோ அதை மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள். அரசாங்க ஊழியர்கள் என்றால் அவர்களை செலெக்ட் செய்வது யார்? ஏன் பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அந்த வேலையைக் கொடுக்கக் கூடாது? இன்றைய தினம் அதிகாரிகளை பப்ளிக் சர்விஸ் கமிஷனா நியமிக்கிறது? இன்றைய தினம் சூபர்வைசர்களை நியமிப்பது யார்? பப்ளிக் சர்விஸ் கமிஷன் தான் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதில் இருக்கிற முரண்பாட்டை எடுத்துச் சொல்லத்தான் இதைச் சொல்லுகிறேன். தொழிலாளிகள் போனஸ் வேண்டுமென்றால், வேறு கோரிக்கைகளைக் கேட்டால், அவர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே தகராறு ஏற்படுமானால் அதைத் தொழில் கோர்ட்டுக்கு விட வேண்டும் அல்லது கட்டாய சமரசத்திற்கு விடவேண்டும். அரசாங்கத்தில் நேரடியாக வேலை செய்யும் பணியாளர்களைப் போல பாவிப்போம் என்று இந்த மன்றத்திலேயே கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; தன் பிரசங்கத்தில் அழுத்தமாக இந்த முறை கூடச் சொன்னார்கள். இது சரியான நிலை அல்ல என்பது எனது அபிப்பிராயம். அவர்களை இண்டஸ்ட்ரியல் வொர்க்கர்ஸாகக் கருத வேண்டும். ஆடிட் மட்டும் கமர்ஷியல் ஆடிட் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்குச் சட்டத்தில் இடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லாப நோக்கத்தோடு இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் சொன்னார்கள். லாப நோக்கத்தோடு இருக்கக் கூடாது, இது மக்களுக்குப் பணி புரியும் ஸ்தாபனம், தொழிலாளி தொழிலாளியாக நடத்தப்படவேண்டும். அவர்களுக்கு சட்டப்படி என்ன உரிமைகள் உண்டோ அவைகள் வழங்கப்படவேண்டும், அதில் அரசாங்கம் இவ்வளவு பிடிவாதமாக இருக்கக் கூடாது என்பது எனது அபிப்பிராயம். அட்ஜூடிகேஷனுக்கு விட்டு விட்டால் என்ன? அல்லது ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை ஒரு கமிட்டி நியமிக்கட்டும். அப்போது நிதிநிலையை பரிசீலிக்கட்டும். அதற்கு மேல் சிபாரிசு



31st July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

செய்யட்டும், அப்படியாவது ஒப்புக் கொள்ளட்டும். ரேட்டை மட்டும் ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை உயர்த்தவேண்டுமென்று சொல்லவில்லையா? தொழிலாளிகளுடைய ஒத்துழைப்பை எப்படிப் பெறுவது? பேசாமல் இருக்கலாம். எது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று இருக்கலாம் பல குறைபாடுகள் மலிந்து வரக் காரணம் என்ன? அவர்கள் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குப் பணி புரிகிறார்கள் என்ற உணர்வு இருக்கின்ற காரணத்தினால்தான் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுத்திருக்கிறார்களா? அடிமை மாதிரி நடத்த வேண்டும், 'நான் சொன்ன மாதிரி நீ நடக்க வேண்டும்' என்று நினைத்தால் அவர்கள் ஏதோ வேலை செய்து கொண்டிருப்பார்கள், ஆனால் உற்சாகத்தோடு வேலை செய்ய மாட்டார்கள் என்பதை நான் உணர்த்த விரும்புகிறேன். அவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் குறைபாடுகள் இருக்கலாம். குறைபாடுகள் இருக்கக் காரணம் இருக்கிறது. முக்கியக் காரணம் ஆள் பற்றாக்குறை. அவர்களுக்கு வேலை பளு அதிகம். ஒவ்வொருவரும் அதிகமான வேலையைப் பெற்றிருக்கிறார்கள். ஆப்பரேஷன் மெயின்டெனென்ஸ் நியூ சர்விஸை வைத்திருக்கிறார்கள். ஒரு கிராமத்தில் எலெக்ட்ரிசிட்டி இருந்தால் புதிதாக சர்விஸ் வாங்குவது சுலபமானது அல்ல. ஆள் பற்றாக்குறை இருக்கிறது. கன்ஸ்ட்ரக்ஷன், மெயின்டெனென்ஸ், நியூ சர்விசஸ் எல்லாவற்றையும் தனியாகப் பிரித்து எப்படி முறைப்படுத்துவது என்று பார்க்க வேண்டும். துரிதமாக நடத்த என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பார்க்கவேண்டும்.

கடைசியாக, அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது விருப்பு-வெறுப்புக்கு இடம் கொடுக்காமல், முன்னே தொழிலாளர்கள் என்ன செய்தார்கள் என்று கவலைப் படவேண்டாம், சில சமயங்களில் தொழிலாளர்கள் தவறாக நடந்திருக்கலாம், ஸ்ட்ரைக் செய்திருக்கலாம், போராட்டம் நடத்தியிருக்கலாம், நல்ல எண்ணத்தில் அதிகாரிகளைப் பற்றிக் குறை கூறியிருக்கலாம், சிக்கனமாக நடக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் அதிகாரிகளைப் பற்றிக் குறை கூறி சில யோசனைகளைச் சொல்லியிருக்கலாம், சொன்ன யோசனைகள் தப்பாக இருக்கலாம், அல்லது சரியான யோசனைகளாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளட்டும். ஏற்றுக்கொள்ளாமல் போகட்டும், ஆனால் பழி வாங்கும் எண்ணத்தோடு இன்றைக்குச் சரி பாதிக்கு மேல் டெம்பாரியாக, காஷுவல் லேபராக வைத்திருப்பது உண்மையா இல்லையா? ஏதோ வேலை செய்யலாம்; எப்படி உற்சாகமாக வேலை செய்வார்கள். நினைத்தால் 24 மணி நேரத்தில் சீட்டைக் கிழித்து விடலாமே சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக எண்ணினால். இண்டஸ்ட்ரியல் வொர்க்கர் என்றாலாவது ஆறு மாதங்களுக்குள் அனுப்ப முடியாது. இன்றைய தினம் அந்த முறையில் பாதிப் பேர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். உயர்தர உத்தியோகத்தில் இருக்கிறவர்களைக் கூட டெம்பாரியாக வைத்திருப்பது உற்சாகத்தைக் கொடுப்பதாக ஆகாது.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [31st July 1965

இறுதியாக யோசனை கூறிக்கொள்ளுவது, மின்சாரக் கழகம் 10 வருஷ காலத்தில் செய்திருக்கிற பணி பற்றி விரிவான ஆராய்ச்சி அவசியப்படுகிறது. இந்தப் பிரச்னை முக்கியமானது. நான்கு லட்சத்திற்கு நிலம் வாங்கியது சரியா, தவறு என்பது பற்றிச் சொல்லவில்லை. 253 கோடி அளவுக்கு முதலீடு செய்யப்பட்டு, நான்காவது திட்ட காலத்தில் இன்னும் அதிகமாக இருக்கக் கூடிய துறை, அது நாட்டுக்கு மிக அவசியமான துறை, அது திறமையாக நடைபெறவேண்டுமென்றால் நிதி நிலை எப்படி இருக்கிறது, நிதியை எப்படி சீர்படுத்தவேண்டும், இன்னும் எப்படிச் சிக்கனச் சீரமைப்பு செய்வது என்பதைப் பற்றி பரிசீலனை செய்ய ஒரு நிபுணர் குழு போட்டுப் பரிசீலிக்கவேண்டும். இப்போது நிர்வாகத்தில் இருக்கிறவரை, இப்போது தலைவராக இருக்கிறவரைப் பற்றி குறை சொல்லுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. எவ்வளவு திறமையாக இருந்தாலும், சிலவற்றில்தான் ஒருவர் திறமையாக இருக்க முடியும். இது பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டியது அவசியம்.

நிர்வாகத் துறையில் கமர்ஷியல் சைட் எப்படி இருக்கவேண்டும், ஆப்பரேஷன் மெயின்டினன்ஸ் எப்படி இருக்கவேண்டும், கன்ஸ்ட்ரக்ஷன் எப்படி இருக்கவேண்டும், எப்படிப் பிரித்து எந்தெந்த மட்டத்தில் இணைக்கவேண்டும் என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்து, இப்போது இத்தனை டிரான்ஸ்பார்மருக்கு இத்தனை தொழிலாளிகள் என்ற ஷெட்யூல் சரியானதா என்பதையெல்லாம் விசாரணை செய்ய ஒரு குழு அமைத்துப் பரிசீலனை செய்து அதன் மீது ஆராய்ச்சி செய்து முடிவு எடுத்தால் நல்ல பலன் ஏற்படக் கூடியதாக இருக்கும். புகார் பற்றி மட்டும் பரிசீலனை செய்து முடிவு எடுப்பதாக இருந்தால் குறைபாடுகளுக்கான காரணங்கள் அப்படியே இருக்கும். நோய் உள்ளே இருக்கும்போது மேலுக்கு சிகிச்சை செய்து பிரயோசனம் இல்லை. குற்றம்தான் இருக்கிறது என்று சொல்லவில்லை. அடைந்திருக்கிற வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் நிர்வாக யந்திரத்தைச் சீர்படுத்தவேண்டும். அந்த எண்ணத்தோடு அரசாங்கம் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று சொல்லி, கேட்பதற்கு பதில் சொல்லுவதிலே மட்டும் திருப்தி அடையக் கூடாது என்று கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

1-30 p.m. MR. SPEAKER: The House will now adjourn and meet again at 9 a.m. on Monday, 2nd August 1965.

The House then adjourned.

## IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 179. *Notification issued with G.O. Ms. No. 697, Rural Development and Local Administration, dated the 22nd March 1965, amending the rules for the regulation of the use of quarry rights in lands vested in the Panchayats published with the Rural Development and Local Administration Department Notification*



31st July 1965]

*S.R.O. No. A-732 of 1963, dated the 2nd July 1963, on page 741 of Part V of the* Fort St. George Gazette, *dated the 24th July* 1963. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

180. *Notification issued with G.O. Ms. No.* 1201, *Rural Development and Local Administration, dated the 25th day* 1965 *including within the limits of the Kodaikanal Township, the local areas defined in Schedule I of the notification and fixing in supersession of all the previous notifications on the subject, the limits of the said Township as shown in Schedule II of the same notification in the* Fort St. George Gazette. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

181. *Notification issued with G.O. Ms. No.* 933, *Rural Development and Local Administration, dated the 21st April* 1965 *making certain rules prescribing qualification for Park Superintendents under Panchayat Union Councils.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

### B. Reports, Notifications and other papers.

* 37. *Notification issued with G.O. Ms. No.* 2834, *Industries, Labour and Co-operation (Labour), dated the 1st June* 1965 *amending the Minimum Wages (Madras) Rules,* 1953, *published with the late Development Department Notification No.* 43, *dated the 24th June* 1953, *at pages* 337-348 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 4th November* 1953, *as subsequently amended, the same having been previously published as required by sub-section* (1) *of section* 30 *of the Minimum Wages Act,* 1948 (*Central Act XI of* 1948).]

38. *Short review of the activities of the Public Works Department during the first half of the year* 1963-64 *in so far as they relate to major building schemes (English and Tamil).*

† 39. *The Madras Land Encroachment (Amendment) Bill,* 1965 (*L.A. Bill No.* 12 *of* 1965).]

* Placed on the Table of the House on 30th July 1965.
† Despatched to Members on 29th July 1965.

## APPENDIX

[*Vide* answer to Starred Question No. 11 on page 1.]

*A*.—The Kundah Hydro-Electric Scheme in the Nilgiris and Coimbatore districts is the biggest Hydro-Electric Scheme so far undertaken and envisages the harnessing of the waters of Kundah and nearby basins in five power stations with a total installed capacity of 425 M.W. The scheme is estimated to cost Rs. 58.50 crores.

The scheme has been taken up in two phases. A total fall of 5,357 feet is available for power generation at Kundah of which the initial phase utilises a drop of 3,647 feet and the second phase the balance drop of 1,710 feet and also the water of rivers nearby and on the route.

*First phase.*—The first phase comprised the construction of four masonry dams, three tunnels of eight miles length, two sets of penstocks of 28,000 feet and two power stations of 40 and 140 M.W. capacity at a cost of Rs. 3,544 lakhs. This phase was taken up during the Second Plan Period and the two power stations with a total installed capacity of 180 M.W. are in operation now.

*Second phase.*—The second phase comprises the construction of three new power stations, four more dams, four diversion weirs, eight tunnels of 16½ miles and three sets of penstocks. Besides these, addition of a single unit of 20 M.W. at Power Station No. 1 and a single unit of 35 M.W. at Power Station No. 2 are also envisaged. The total installed capacity that will be added during this phase is thus 245 M.W. at a total cost of Rs. 2,306 lakhs.

This phase has been taken up during the Third Plan period.

The following statements will give in one view the salient features of the power stations:—

| | Description. (1) | Plant 1. (2) | Plant 2. (3) | Plant 3. (4) | Plant 4. (5) | Plant 5. (6) | Total. (7) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Number of units in each Power House. | 3×20 M.W. | 5×35 M.W. | 2×60 M.W. | 1×50 M.W. | 1×20 M.W. | .. |
| 2 | Installed capacity in M.W. | 60 | 175 | 120 | 50 | 20 | 425 |
| | Generation potential in Million units. | 288 | 789 | 486 | 158 | 82 | 1,803 |
| | Effective capacity in M.W. | 55 | 150 | 92 | 30 | 15 | 342 |

Date of commissioning of various units/target dates fixed.

| | | Date of commissioning. |
|---|---|---|
| Power House 1 | 1st Unit | 26—3—1960. |
| | 2nd Unit. | 21—7—1960. |
| | 3rd Unit. | 30—3—1964. |



| | | |
|---|---|---|
| Power House 2 | 1st | |
| | 2nd | |
| | 3rd Un. | |
| | 4th Unit. | |
| | 5th Unit. | |
| Power House 3 | 1st Unit. | |
| | 2nd Unit. | |
| | | Targetted |
| Power House 4 | .. | March 196. |
| | | Date of Commissioning |
| Power House 5 | .. | 3—10—1964. |

**பதில்.**—நீலகிரி, கோயமுத்தூர் மாவட்டங்களில் உள்ள குந்தா நீர் மின்சாரத் திட்டம் இது வரையில் மேற்கொள்ளப்பட்ட நீர் மின்சாரத் திட்டங்களில் மிகப் பெரியது. இத் திட்டம் குந்தாவிலும் அதன் அருகிலுள்ள நீர் நிலைகளிலும் உள்ள நீர் சக்தியை ஐந்து மின் சக்தி நிலையங்களில் 125 மெகவாட் திறனுக்கு உற்பத்தி செய்வதே இதன் நோக்கமாகும். இத் திட்டத்திற்கு ரூ. 58.50 கோடி செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத் திட்டம் இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குந்தாவில் மின் சக்தி உற்பத்தி செய்ய மொத்தம் 5,357 அடி உயரத்திலிருந்து நீர் விழுகிறது. இதில் முதல் நிலையில் 3,647 அடி உயரத்திலிருந்து விழும் நீரைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இரண்டாவது நிலையில் மீதியுள்ள 1,710 அடி உயர நீர் வீழ்ச்சியும் அருகிலும், வழியிலும் உள்ள நீர் நிலைகளும் பயன் படுத்திக் கொள்ளப்படுகின்றன.

**முதல் நிலை.**—முதல் நிலையில் ரூ. 3,544 லட்சம் செலவில் நான்கு கல்லணைகள் கட்டுவதும், 8 மைல் நீளமுள்ள மூன்று சுரங்கப் பாதை கட்டுவதும், 28,000 அடி நீளத்துக்கு இரண்டு தொகுதி பென்ஸ்டாக் குழாய்கள் கட்டுவதும் 40 மெகவாட், 140 மெகவாட் திறனுள்ள இரண்டு மின் சக்தி உற்பத்தி நிலையங்கள் கட்டுவதும் அடங்கும். இந்த நிலை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த இரண்டு மின் சக்தி உற்பத்தி நிலையங்களும் 180 மெகவாட் திறனுடன் இப்போது பணியாற்றி வருகின்றன.

**இரண்டாவது நிலை.**—இரண்டாவது நிலையில் மூன்று புதிய மின் சக்தி உற்பத்தி நிலையங்கள், மேலும் நான்கு அணைகள், நான்கு கிளைக்கலிங்கல்கள் ( diversion weirs ) 16½ மைல் நீளமுள்ள 8 சுரங்கப் பாதைகள், மூன்று தொகுதி பென்ஸ்டாக் குழாய்கள் ஆகியவைகள் கட்டுவதும் அடங்கும். இத்துடன் கூட 1-வது மின் சக்தி உற்பத்தி நிலையத்தில் 20 மெகவாட் திறனுள்ள ஒற்றைப் பிரிவு ஒன்றைச் சேர்க்கவும், 2-ம் எண்ணுள்ள மின் சக்தி உற்பத்தி நிலையத்தில் 35 மெகவாட் திறனுள்ள ஒற்றைப் பிரிவு ஒன்றைச் சேர்க்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இரண்டாவது நிலையில் சேர்க்கக்கூடிய மொத்த மின் சக்தித் திறன் 245 மெகவாட் ஆகும். இதற்காகும் மொத்த செலவு ரூ. 2,306 லட்சம்.

[Vide answer to ... ளருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்
... து. கீழே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கைகள்
4.—The K... நிலையங்களின் முக்கிய அம்சங்களை எடுத்த எடுப்பில்
Coimbatore ... டும்:—
under

| விளக்கம். | பிளாண்ட் 1. | பிளாண்ட் 2. | பிளாண்ட் 3. | பிளாண்ட் 4. | பிளாண்ட் 5. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 ஒவ்வொரு மின் நிலையத்திலும் உள்ள யூனிட்டுகளின் எண்ணிக்கை. | 3×20 மெக வாட். | 5×35 மெக வாட். | 2×60 மெக வாட். | 1×50 மெக வாட். | 1×20 மெக வாட். | |
| 2 உற்பத்தித் திறன் (மெக வாட்டில்). | 60 | 175 | 120 | 50 | 20 | 425 |
| 3 மில்லியன் யூனிட்டில் உற்பத்தியாகும் சக்தி. | 288 | 799 | 486 | 158 | 82 | 1,803 |
| 4 பயனுள்ள திறன் (மெக வாட்டில்). | 55 | 150 | 92 | 30 | 15 | 342 |

பல்வேறு யூனிட்டுகளின் தொடக்கத் தேதி, நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குத் தேதி:—

தொடக்கத் தேதி.

மின்சக்தி உற்பத்தி நிலையம் 1—

| | | |
|---|---|---|
| முதல் யூனிட்டு | .. | 26— 3—1960 |
| 2-வது யூனிட்டு | .. | 21— 7—1960 |
| 3-வது யூனிட்டு | .. | 30— 3—1964 |

மின்சக்தி உற்பத்தி நிலையம் 2—

| | | |
|---|---|---|
| முதல் யூனிட்டு | .. | 31—10—1960 |
| 2-வது யூனிட்டு | .. | 19— 1—1961 |
| 3-வது யூனிட்டு | .. | 27— 3—1961 |
| 4-வது யூனிட்டு | .. | 5— 6—1961 |
| 5-வது யூனிட்டு | .. | 23— 2—1964 |

மின்சக்தி உற்பத்தி நிலையம் 3—

| | | |
|---|---|---|
| முதல் யூனிட்டு | .. | 7—4—1965 |
| 2-வது யூனிட்டு | .. | 11—6—1965 |

மின்சக்தி உற்பத்தி நிலையம் 4—

திட்ட இலக்கு தேதி.
மார்ச் 1966
தொடக்கத் தேதி.

மின்சக்தி உற்பத்தி நிலையம் 5—

30—10—1964

64913